# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

## PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்தியராமன், பி. எ., பத்திராதிபர்

G. A. VaidyaRaman, B. A. EDITOR.

புஸ்தகம் 4. Vol. 4. | பரீதாபிஹு புரட்டாசிமீ, SEPTEMBER 1912. | ஸஞ்சிகை 9. No. 9.

## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* Rs. A. P. | | *Foreign.* Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... ... | 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 &4, Sunkurama Ctty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒருமாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்திய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1 ச்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்பிரதி ... | 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 2 0 | ... | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு எஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, | ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, | ,, | 1 4 0 |

வியாசம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை

விவஸாயம்; வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக கிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

# EDITORIAL NOTE.
## பத்திராதிபர் குறிப்பு.

### THE INCORPORATION OF THE VIDYA VIHARINI.
### வித்யா விஹாரிணியின் சேர்க்கை.

சென்ற மூன்று வருஷங்களாக கோயம்பத்தூர் ம-ா-ா-ஸ்ரீ, வி. என். கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களால் வெகு சிறப்பாய்ப் பிரசுரிக்கப்பட்டு வந்த வித்யா விஹாரிணி என்னும் மாதாந்தரப் பத்திரிகையானது நாளது புரட்டாசி மாஸம் முதல் 'பிழைக்கும் வழி' யோடு சேர்ந்துவிட்டது. இந்த விஷயமாய் விஹாரிணியின் பத்திராதிபர் தமது கடைசி ஸஞ்சிகையில் எழுதியிருக்கும் விளம்பரம் கவனிக்கத்தக்கது. அது பின்வருமாறு.

"மேற்கூறியபடி 'விஹாரிணியை' நாம் நிறுத்திவிடுவது யுக்தமாகக் கண்டபோதிலும், நமதிஷ்டரும் 'பிழைக்கும் வழி' பத்திராதிபருமாகிய ஸ்ரீமான் ஜி. ஏ. வைத்தியராம ஐயரவர்கள் இதன் லக்ஷியத்தையும் சேர்த்துக் கொண்டு கூடியமட்டில் இதன் ஞாபகம் அபிமானிகளுக்கு இருக்கும்படி உழைப்பதாக என் வேண்டுகோளுக் கிசைந்திருப்பதால், அதையனுசரித்து இரண்டொரு விஷயம் இங்கு குறிப்பிடுகிறோம்.

1. புரட்டாசி முதல் விஹாரிணி சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்குறித்த ஸ்ரீமான் 'பிழைக்கும் வழி'யின் எடிட்டரவர்கள் மூலமாக நடக்கும்.

2. மூன்றாவது வால்யம் முடிவுவரை செல்லாக வேண்டிய சந்தா அடியிற் கையொப்பமிட்டவரைச் சேரும்.

3. நாலாவது வால்யம் ஆரம்பிக்கவேண்டியதாகிய புரட்டாசி மாச முதல் சந்தா விஷயமான காரியங்கள் மேற்குறித்தபடி 'பிழைக்கும் வழி' எடிட்டரைச் சேர்ந்தது.

4. ஆவணிக்கப்புறம் ஒரு வருஷத்திற்கோ குறைந்த காலத்திற்கோ சந்தா அட்வான்வில் செலுத்தியிருப்பவர்களுக்கு அந்த அட்வான்ஸுக்கு உத்தாரமாகும்வரை 'விஹாரிணி'க்குப் பதிலாக, 'பிழைக்கும் வழி' கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த ஏற்பாடு யாருக்குச் சரிப்படவில்லையோ அவர்கள் தயவுசெய்து எழுதினால், அவர்களுடைய சந்தா பாக்கி நம்மேலிருப்பதை வாப்ஸ் செய்துவிடுகிறோம்."

விஹாரிணியை ஆதரித்து வந்த ஸந்தாதாரர்களும், கிருபநேயர்களும் இனிமேலும் 'பிழைக்கும் வழி' யை ஆதரித்துவருவார்களென்று நம்புகிறோம்.

# SPECIAL ARTICLES.
## விசேஷ வியாஸங்கள்.

### MANURING.

BY

A. KANDASAMI PILLAI.

### எருவிடுதல்.

வேளாண்மைத்தொழிலில் நம் நாட்டார் அசட்டை செய்யாமல் கவனித்து சீர்திருத்த வேண்டிய விஷயங்கள் பலவுள. அவைகளில் எருவிடுதல் ஒன்று.

"ஏரினுநன்றா லெருவிடுதல் நட்டபின்
நீரினு நன்றதன் காப்பு" என நாயனாரும்

வற்புறுத்தியிருக்கிறார். அல்லாமல்,

'எருவில்லாப்பயிரும் மணமில்லாமலரும்
'எருவிட்டான் காடுவிளையுமா? ஏரிந்தழுவான் காடுவிளையுமா' எனத் தமிழிலும்,

'லாவுலேனிசேனு லேகலேனி ஆவு'
(எருவிடாக்காடு ஈனுதமாடு)

'பெண்டமீத பண்ட மண்டமீத வண்ட'
(எருவினளவுவிளைவு எரியினளவு உணவு)
என்று தெலுங்கிலும் பழமொழிகள் வழங்குகின்றன.

எருவை ஸாதாரண எரு என்றும், விசேஷ எரு என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். கால்நடைகளின் சாணம், மூத்திரம், குப்பை, செத்தை, அடுப்புச்சாம்பல், அடுப்புக்கரிப் பொடி, மல, மூத்திராதிகள், ஸாதாரண எரு எனப்படும். இவைகளை ஒரு குழி தோண்டி அந்தக்குழியில் கொட்டி மூடிவைக்க வேண்டும். இல்லாவிட்டால் இவைகள் அழுகி மட்கி மனுஷருடைய ஸுகத்தைக் கெடுப்பதோடு அவை உலர்ந்து சக்கையாகிவிடும். காய்ந்துபோன எருவில் ஸத்துக்கள் எல்லாம் ஆவியாகப் போயிருக்குமாகையால் அந்த எருவினால் அவ்வளவு பயனில்லை. எருச் சேர்க்கத் தொடங்கி வெளியில் கொட்டிவைப்பவன் 'குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொண்டவ'னே யாவான்.

விளைநிலங்களில் ஆட்டுமந்தை மாட்டுப்பட்டி இவைகளைத் தங்கவைப்பதும் சிறந்த எருவிடுவதாகும். ஏனென்றால், அவைகளின் மூத்திரங்களும் சுவறி மயிர்களும் உதிர்ந்து உரம் அதிகமாகும். இந்த வழக்கம் நம் நாட்டில் ஸர்தாரணமாய் நடந்து வருகிறது. இப்படிச் செய்கையில் பட்டிபோடும் முன் ஒருதரமும், போட்டபின் ஒருதரமுமாக இரண்டுதரம் உழுது மண்ணைப் புரட்டவேண்டியது அவசியம். சாணத்தை முட்டைதட்டும் துர்வழக்கம் நம் நாட்டில் இன்னும் ஒழியவில்லை. அப்படிச் செய்வது முற்றும் பிசகு. ஒருஜதை மாட்டின் சாணத்தால் ஒரு வருஷத்தில் 3000 முட்டைதட்டலாம். அவைகளின் விலை இல்லையென்றாலும் 6 ரூபாய்க்கு மேற் போகாது. அந்தச்சாணத்தையே எருவாக விற்றால் 15-ரூபாய்க்கு விற்கலாம். இப்படிப் பட்ட லாப நஷ்டங்களை அறியாமல் பேதைக் குடிகள் மோசம் போகிறார்கள். இந்த ஸாதாரண எருவைக் காப்பாற்றும் விஷயத்தில் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியவைகள் இரண்டு :—அவைகள், வெட்டவெளியில் கொட்டாமலிருப்பதும், மழையில் நனைந்து கெடாமல் பார்த்துக்கொள்வதுமாம். ஆகவே, எருச்சேர்ப்பவன், கூரைக் கொட்டம் ஒன்றில் ஆழமான குழியில் எருவைக் கொட்டிவைப்பதோடு அன்றாடம் அவைகளின்மேல் மாடுகளின் படுக்கைக்குப் போட்ட புல் முதலியவைகளையோ, மரங்களிலிருந்து உதிர்ந்த இலைகளையோ, வேறு தழைகளையோ, போட்டு மூடவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் அவைகளிலுள்ள அமிலஸத்து என்று சொல்லப்படும் அம்மோனியா ஆவியாக மாறிப்போம். இப்போது கோயம்புத்தூர் விவஸாய சோதனைப்பண்ணையில், ஒவ்வொருமாடும் நிற்கும் இடத்தில் சிறிய வாய்க்கால்வெட்டி கால் நடைகளின் மூத்திரம் அதன்வழியே வரச்செய்து இப்படியே எல்லாக்கால் நடைகளிடத்திலிருந்தும் வரும் மூத்திரங்களும் ஒன்றாய்ச் சேர்ந்து எருக்குழியில் விழும்படி செய்திருக்கிறார்கள். இதுமிகச் சிறந்ததே. தானியங்களை விதைக்கும்போது விதைகளோடு எருவைச் சேர்த்து விதைப்பதாலும் மிக்கப் பயனுண்டு. நிலக்கடலை விதைகளை விதைக்கத் தன் ஆள்வசம் கொடுக்கும் வேளாளன் அவன் தின்னாமலிருக்க அதோடு எருவையுங் கலந்து கொடுப்பதைக் காண்கிறோம். அவன் இவ்விஷயத்தை அறிவானாகில் அவ்வாறு செய்வதில் இருவிதப் பயன் உண்டென்பதை உணருவான்.

விசேஷ எருவானது :—மேலே சொன்ன எருக்களில் வெடியுப்பு, நவசாரம், சிலாசத்து, காடிகாரம் சுண்ணாம்பு என்ற வஸ்துக்களின் ஸத்துப்போன்ற ஸத்துக்கள் கலந்திருக்கும்

எருவாம். பிராணிகளின் எலும்பும்; பழம், காய் கறி பதார்த்தங்கள், மாமிசம், இவற்றைப் புசிக்கும் மனிதர்களின் மல மூத்திரங்களும்; புறா, கோழி, வௌவால் முதலிய பக்ஷிகளின் எச்சங்களும்; ரத்தம், மீன், மயிர், பிண்ணாக்கு, புற்றுமண் இவைகளும் மேற்படி ஸத்துடையவைகளாம். இவற்றிலிருந்து நைட்ரோஜன் என்னும் ஓர் வித ஸத்து உண்டாகி இலை தளிர்களை தழைத்துவரச்செய்யும்.

எலும்பு எருவைப்பற்றி நம் நாட்டார் கவனிப்பதேயில்லை. காரணம் அதன் பிரயோஜனம் இன்னதென்று அறியாமையேயாம். நம் நாட்டு நிலங்களில் நிபாக்கினி என்று சொல்லப்படும் பாஸ்பரஸ் மிகவுங் குறைந்திருக்கிறது. அதை அதிகரிப்பதற்கு எலும்பு எருவையே உபயோகப்படுத்தவேண்டும். ஆங்கிலேய நாட்டார் இந்த எருவை உபயோகித்து மிக்க பலனடைகிறார்கள். அவர்கள் பிராணிகளின் எலும்புகளைப் பொடியாக்கி, அழுகிப்போன குப்பை கூளங்களோடு சேர்த்து எருக்குழியில் கொட்டி ஆறுமாதம் வைத்திருந்து, பின் உபயோகிக்கிறார்கள். அன்றி, எலும்புகளை எருக்குழியில் கொட்டி, அவைகளின்மேல் கால்நடைகளின் மூத்திரங்கள் விழச்செய்தும் உபயோகிக்கிறார்கள். அவர்கள் வண்டிக்கூலிக்கும், கப்பல்கூலிக்கும் உட்பட்டு, நம் நாட்டு எலும்பை விலைக்கு வாங்கிக்கொண்டு போகிறார்கள்.

'ஆதாயமில்லாமலா செட்டி ஆற்றோடு போவான்.?' வருஷாவருஷம் நம் நாட்டிலிருந்து வெளியேறும் எலும்புகள் 3000டன் என்றும், பிண்ணாக்கு 17,000டன் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. வருஷந்தோறும் 55 லட்ச ரூபாய் பெறுமான எலும்புகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்று மிஸ்டர் மதோல்காரும் பிரசங்கித்திருக்கிறார். இவைகளை இங்கேயே தேக்கினால், கோடிகோடியாகப் பணங் கொழிக்கலாமே!

இனி, மேல்நாட்டார் எருச்சேர்ப்பதில் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கிறார்கள் என்பதைக் கருதினால் நமக்கு வியப்பும் உவப்பும் உண்டாகும். இதைப்பற்றி மலையாளி ஒருவர் செய்த பிரசங்கத்தைச் சுருக்கிக் கூறுகிறேன். "நான் அமெரிக்காவுக்குப் போயிருந்த ஸமயத்தில் ஒவ்வொருநாளும் ஆச்சரியகரமான உபசாரங்கள் எனக்கு நடந்தன. ஒருநாள் மாலை 4-மணிக்கு ஒரு அமெரிக்கனைச் சந்தித்தேன். அவன் எனக்கு வந்தனம் செலுத்தி, ஆசனமளித்து, க்ஷேமம் விசாரித்து, எங்குச் சாப்பிட்டீர்கள்? மாமிசபக்ஷணம் சேர்ந்த உண்டியா உண்டீர்கள்? என்று பலவாறு சம்பாஷித்துப் பின், 'நான் தங்கள் வருகைக்குச் சந்தோஷிக்கின்றேன்! நீர் எங்களுக்கு விருந்தாளியாகிறீர்! ஆகையால் இன்றைக்கு நம் ......(இனி என்னவருமோவென்று ஆவலாய் எதிர்பார்த்திருந்தேன்)தோட்டத்தில்மலவிஸர்ஜனம் செய்ய வரவேண்டும். நேற்று எங்கே மலங்கழித்தீர்கள்? இந்த ஊரைவிட்டுப் போகும்வரையில் எங்கள் தோட்டத்திற்கே வந்து விஸர்ஜனம் செய்யவேண்டுமாய் வேண்டிக்கொள்கிறேன், என்று கூறினான். இவன் நம்மவீட்டில் விருந்துண்ணவேண்டுமென்று வேண்டினானா? இல்லை. நம்மவீட்டில் ஜாகா பண்ணிக்கொள்ளல் (வசித்தல்) வேண்டுமென்றானா? அதுவும் இல்லை. மாமிசபக்ஷணம் பண்ணுவோர்களின்மலம் அதிக ஸத்துள்ள எருவென்பதும், சிரமப்பட்டேனும் எருவைச் சேகரிக்கவேண்டுமென்பதும் அவனெண்ணம்."

மேல்நாட்டினர் மற்றைத் தொழில் முயற்சிகளிலும் எவ்வளவு சிரத்தையுடையவர்கள் என்பதை இதனால் ஊகியுங்கள். நம் வேளாண்

முயற்சிக்கும், அவர்களின் முயற்சிக்கும் உள்ள வித்யாஸம் அஜகஜாந்தரமேயாம்.

ஆதலால், நம் நாட்டினரும் மேற்கூறியவற்றைக் கவனித்து எருவிட்டும், மற்றும், விதை பொறுக்கியெடுத்தல், களையெடுப்பு, பருவத்துப்பயிரிடல், பாதுகாப்பு இவற்றிலும் கண் காணித்து வருவார்களேயானால் அதிகலாபம் அடையலாம்; "கிருஷிதோநாஸ்தி துர்ப்பிக்ஷம்" (பயிர்செய்வோனுக்குப் பஞ்சமில்லை) என்னும் பழமொழியும் மெய்யேயாகும்.

அ. கந்தசாமிப் பிள்ளை.

---

## THE STEEL PEN INDUSTRY.

BY

M. R. GOPALAKRISHNA AIYANGAR.

### ஸ்டீல் பேனா செய்யும் விதம்.

"ஸ்டீல் பேனா" இப்பொழுது ஸர்வ ஸாதாரணமாய் உபயோகப்படுவதாலும், சிறிதேனும் எழுத்துவேலை யுள்ளவர்களுக்குக் கூட இன்றியமையாததா யிருப்பதாலும், இக்கருவி இல்லாதிருந்த காலமும் இருந்ததோ என்று ஸந்தேகம் பிறக்கலாம்; ஆனால், உண்மையில் இவ்வெழுது கருவியின் உபயோகம் சிறிது காலமாகத் தான் அதிகரித்திருக்கிறது. ஏறக்குறைய ஐம்பது வருஷங்களுக்கு முன்னால் நம் நாட்டில் ஸாதாரணமாக இறகு மட்டும் எழுது கருவியாய் வழங்கப்பட்டு வந்த விஷயம் நாம் எல்லாரும் அறிவோம். பின்னும், ஸுமார் 30, 35 வருஷங்களுக்கு முன் கூட இறகின் உபயோகம் அதிகமாகவே யிருந்தது. தற்காலத்துப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளை இறகு பேனா என்பது என்ன என்று சற்றே விசாரித்தால், வெகுசாய் அநேகருக்கு அது இன்னதென்று தெரியாது. அப்படித் தெரிந்தாலும் சொல்லக் கேள்விப்பட்டிருப்பரேயொழிய, பார்த்திருக்கமாட்டார்கள். இதனால் எஃகு அல்லது இதர உலோகங்களால் செய்யப்பட்ட எழுது கருவிகள் உபயோகத்தில் எவ்வளவு சீக்கிரம் பரவியிருக்கின்றன என்பதை யறியலாம். ஸுமார் 60 வருஷங்களுக்கு முன் இன்னதென்றே தெரியாமலும், 35, 40 வருஷங்களுக்குமுன் அபூர்வமாகவு மிருந்த இக்கருவி இப்பொழுது எவருக்கும் இன்றியமையாததாயிற்று!

எஃகு அல்லது இதர உலோகங்களாற் பேனா செய்யும் கைத்தொழில் முதல் முதல் நம் இந்தியாவில் ஏற்பட்டதல்ல. ஸ்டீல் பேனாக்கள், இங்கிலாந்து, ப்ரான்ஸ், அமெரிக்காவின் ஐக்கிய மாகாணங்கள், ஆகிய இவைகளில் செய்யப்பட்டு இறக்குமதியாகி வருகின்றன. ஆனால் ஸுமார் 25 வருஷங்களாக இந்தியாவில் ஆங்காங்கு கைத்தொழிற் சாலைகள் ஏற்பட்டு எஃகு, தாமிரம், முதலிய உலோகங்களால் பேனாக்கள் செய்து உபயோகப்பட்டுவருகின்றன. ஸமீபத்தில்தான் இக்கைத்தொழில் விருத்தியடைந்து பேனாக்கள் நயத்திலும் நாணயத்திலும் தேர்ந்து இறக்குமதியாகும் சரக்குகளுக்கு ஏறக்குறைய ஸமமானவை என்று சொல்லும்படியான ஸ்திதிக்கு வந்திருக்கின்றன. தற்காலம் நம் தேசத்தில் பம்பாய், கல்கத்தா, பஞ்சாப், ராஜமஹேந்திரம், திருநெல்வேலி முதலான இடங்களில் கைத்தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும் நம் இந்து தேசத்தில் இத்தகைய கைத்தொழில் பூர்ணத் தேர்ச்சியடையவில்லை என்பது இதர தேசங்களிலிருந்து பிரதி வருஷமும் ஏராளமாய் இறக்குமதியாகும் பேனாக்களின் சங்கையினால் அறியலாம்.

எஃகுப் பேனா முதல் முதல் இன்னாரால் கண்டுபிடிக்கப்பட்டது என்பதைப் பற்றிய விவாதங்கள் பல. புதிதாய்க் கண்டுபிடித்து மிகவும் உபயோகப்படும் ஸாமான்களைப் பற்றிய கௌரவத்தை வகிக்க இவ்வித சச்சரவுகள் உண்டாவது ஸகஜமே. ப்ரான்ஸ், இங்கி

லாந்து, ஐக்கிய மாகாணங்கள் இவைகளே மேற்சொன்ன கௌரவத்தை வகிக்கின்றன. ஆயினும், 1803 வருஷத்தில் தாமஸ் ஒயிஸ் என்னும் லண்டன் காகித வியாபாரி ஒருவர் தான் முதல் முதல் எஃகுப் பேனா செய்தவர் என்று சொல்லலாம். அவைகளை தற்காலத்து வேலைப்பாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் மிகவும் தாழ்ந்தவைகளே. அவை கடைசி வரையில் கைவேலையினால் மிகச் செலவுடன் செய்யப்பட்டு, செலவுக்குத் தக்க உபயோகத்தைக் கொடுக்கவில்லை. இவ்விதமாய்ச் செய்த பேனாக்கள் ஒவ்வொன்றுக்கு 12 முதல் 20 ஸென்ட் (ஒரு ஸென்ட் என்பது ஸுமார் அரை அணா) வீதம் கொள் விலை யாயினவாம். இத்தனை செலவுடன் செய்தும் அவை எழுதும்போது மிகக்குதறி காகிதத்தைக் கிழிக்கக்கூடிய அளவு கடினமாயிருந்ததினால் அவைகள் சீக்கிரமாக உபயோகத்துக்கு வரவில்லை. இப்படி யிருக்க, ஜோஸெப்கில்லட் என்னும் ஆங்கிலேயரால் மேற்சொன்ன குறையும் தீர காலம் வந்தது. ஆதியில் செய்த பேனாவுக்கு ஒரே துவார மிடப்பட்டிருந்தது. இவர் அதில் மூன்று துவாரங்கள் விட்டு செய்து பார்க்கையில் முன்னிருந்ததைவிட அதிக மிருதுவாயும் வளையுந்தன்மை யுடையதாயும் ஆயிற்று. முக்கியமான குறை ஒன்று இவ்விதம் தீர்ந்து விருத்தியடையவே, அதைக் கைத்தொழிலாகக் கொள்ளவும் அதன் உபயோகத்தை அதிகப்படுத்தவும் தூண்டுதல் உண்டாயின. ஜோஸெப் கில்லட், ஜான்மிட்சல், ஜொயையா மேஸன், இவர்களால் மேன்மேலும் விருத்தியடைந்து, 1828-ம் வருஷம் இங்கிலாந்தில், யந்திரங்களைக் கொண்டு, வியாபாரத்துக்குக்கூட ஏராளமாய்ப் பேனாக்கள் செய்ய ஆரம்பித்தார்கள். எஃகுத் தகட்டை வெட்டி வேண்டிய அளவுள்ள துண்டுகளாகச் செய்யவும், அவற்றை வளைக்கவும், துளைக்கவும், சீர் திருத்தவும், நகாஸ் வேலை செய்யவும், மற்று இதர வேலைகளுக்கும் தகுந்த யந்திரங்கள் செய்யப்பட்டன. மேற்கூறிய காலத்துக்கு ஏறக்குறைய 30, 35 வருஷத்திற்குப் பிறகுதான் இக்கைத்தொழில் நம்முடைய தேசத்தில் கைக்கொள்ளப் பட்டது. ஆகவே, இந்தியாவைவிட 50 வருஷத்துக்கு முன்னிருந்து இங்கிலாந்தில் இத்தொழில் நடந்தேறி வருவதினால், இந்தியாவில் ஆரம்பித்த காலத்திலேயே இங்கிலாந்தில் மிகத் தேர்ந்த ஸ்திதியை அடைந்திருந்தது.

### செய்யும் விதம்.

எஃகுப் பேனாக்கள் செய்வதில் அந்த உலோகமானது ஏறக்குறைய பதின்மூன்று மாறுதல்களுக்கு உட்பட்டு ஸுமார் இருபது தடவை கைகளால் தொடப்படுகிறது. இம் மாறுதல்களில் அநேகம், யந்திர வேலைகள் யாவும் உள்பட, ஸ்திரீ வேலையாட்களால் செய்யப்படுகின்றன. இக்கைத்தொழிற் சாலைகளில் வேலைசெய்யும் ஆட்களில் நூற்றில் எண்பைத்தைந்து பேர் ஸ்திரீகளாம்.

இப்பேனாக்கள் யந்திரங்களின் வித்யாஸத்திற்குத் தகுந்தபடி பல விதங்களாகச் செய்யப் படுகின்றன. ஆயினும், சில்லரை வேலை விஷயங்களில் வேறுபாடு இருப்பினும், பொதுவில் அடியிற்கண்ட விதமாகத்தான் செய்யப் படுகிற தென்று சொல்லலாம். ஆதி முதல் அந்தம் வரையில் யந்திரங்களாலேயே செய்யப்படும் சில பேனாக்களும் உள்ளன. ஆனால் அவைகள் விலை ஸகாயமே யொழிய சுத்த உபயோக மற்றவைகள்.

எஃகுத் தொழிற் சாலைக்கு வரும்போது 6 அடி நீளம், 20 அங்குல அகலம், 1/15 அங்குல கனமுள்ள தகடுளாக வருகின்றன. அவற்றை இரண்டு பேனாக்களுக்கு வேண்டிய அளவுள்ள சதுரமான சிறிய துண்டுகளாக

வெட்டி உலைக்களத்தில் வைத்து சில மணி நேரம் காய்ச்சி எடுத்து தானாக ஆறவிட்டு வேலை செய்யக்கூடிய பதத்திற்குக் கொண்டு வருகிறார்கள்.

இப்படிச் செய்த துண்டுகள் முற்றிலும் மேன்மையும் வளைக்கக்கூடியவையுமாக ஆகின்றன. இவைகளை மறுபடியும் பளுவான உருளைகளின் மத்தியில் வைத்து நசுக்கி, வேண்டிய கனமுள்ளவைகளாகச் செய்து கொள்ளுகிறார்கள். இப்படி நசுக்கி யெடுத்த துண்டுகளை ஒரு ஸ்திரீ வேலையாளால் இயக்கப்பட்ட ஒரு யந்திரத்தில் ஒவ்வொன்றாகவைத்து பேனாவின் உருவத்தைப் போன்ற துண்டுகளாக வெட்டிக் கொள்ளுகிறார்கள். பிறகு இவற்றை துளைக்கும் கருவியிலிட்டு முனைக்கு ஸமீபத்தில் ஒரு சிறிய துவாரமும் பக்கங்களில் சிறிய வெட்டுகளும் செய்யப்படுகின்றன. மறுபடி உலைக்களத்திலிட்டு மிருதுவாக்கிக் கொண்டு, செய்தவர் பெயர், நெம்பர் முதலிய எழுத்துகளை அதன் மேல் முத்திரை யிடுகிறார்கள்.

இதுவரையில் அவைகள் தட்டையாயிருக்கின்றன. இப்போது, இத்துண்டுகளை பேனாவைப்போற் செய்த சிறு பள்ளங்கள் மேல் வைத்து, மேலிருந்து பளுவான முத்திரைகளை அவற்றின்மேல் விழச் செய்வதினால், அவைகளுக்கு பேனாவின் வளைவு உண்டாகின்றது. மறுபடி மூன்றாம் தடவை அவற்றை உலைக்களத்திலிட்டு சிவக்கக் காய்ச்சி உடனே எண்ணெயிலிடுவதினால் மிகக் கடினமும் உடைந்து விடும் தன்மையுமுள்ளனவாகின்றன. பிறகு ஒரு இருப்புக்குழாயிலிட்டு அனலின்மேல் சிறிதுசிறிதாகச் சூடேற்றி கடினத் தன்மையை வேண்டிய வளவு குறைத்துக் கொள்ளுகிறார்கள். இதற்கு "டெம்பரிங்" என்று பெயர். இவ்வேலை மிகவும் முக்கியமான தாகையால் மிகத் தேர்ச்சியுள்ளவர்கள் தான் செய்வார்கள். பிறகு அவற்றை நன்றாய்த் துலக்கி மெருகேற்றி முனையை ஸரியாக்க ஒவ்வொன்றாகச் சாணையிடுவார்கள்.

பிறகு கத்திரி போன்ற ஒரு யந்திரத்தினால் முனையில் ஒரு பிளவு உண்டாக்கப்படுகிறது. இந்தப் பிளவு நடுமத்தியில் இல்லா விட்டால் பேனா உபயோக மற்றதாய் விடுமாகையால், இவ்வேலை மிக ஜாக்கிரதையாய்ச் செய்யப்படுகிறது.

இவ்விதமாய் யந்திரங்களாலாக வேண்டிய ஸகல வேலையும் முடிந்த பிறகு ஒவ்வொரு பேனாவையும் நன்றாய்ப் பரீட்சித்து, அதில் தேர்ந்த பின், மறுபடி ஒரு தடவை மிகப் பளபளப்பாய் மெருகேற்றி, பல விதமான வர்ணங்கள் கொடுத்தும், பொன், வெள்ளி, நிக்கல், தாமிரம், முதலிய பூச்சுப் பூசியும், சிறிய பெட்டிகளில் நிறப்பி, வியாபாரத்துக்கு ஸித்தம்செய்து விடுகிறார்கள்.

எம். ஆர். கோபால கிருஷ்ண ஐயங்கார்.

---

## FRESH AIR.

BY

V. A. VENKATACHARIAR

## சுத்தமானகாற்று.

சென்ற டிஸம்பர் மாஸத்து ஸஞ்சிகையில் பலவித வியாதிகளையும் அவ்வியாதிகளைத் தடுக்கும் முறைகளையும் ஒருவாறு எடுத்துச்சொன்னோம். இனி நாம் ஸுகதேகிகளாய் இருப்பதற்கான விஷயங்களைப்பற்றி கவனிப்போம்.

ஸுகதேகியாயிருப்பதற்கான முக்கிய உபகரணங்களாவன:—காற்று, ஜலம், இருப்பிடம் அல்லது ஸ்தலம், தேகசுத்தம், நல்ல பழக்கங்கள் ஆகிய இவைகளே. இவைகளில் முதல் சொன்ன காற்று நாம் உயிர்தரித்தலுக்கு அத்திபாவசியமானதே. காற்றில்லாமல் நாம் சில நிமிஷகாலங்கூட பிழைத்திருக்க முடியாது. எவ்வாறு மீன்கள் ஜலத்தில் வஸிக்கின்றனவோ அவ்வாறு நாம் இவ்வாகாய ஸமுத்திரத்தில் வஸித்துக்கொண்டிருக்

கிறோம். இந்தக் காற்றானது ஆக்ஸிஜன் என்னும் பிராணவாயுவும், நைட்ரொஜன் என்னும் லவணவாயுவும் சேர்ந்தது. ஆக்ஸிஜன் நமது தேகத்துக்கு அவசியமாயும் ப்ராணோபகாரமாயு மிருக்கிறபடியால், அதற்குத் தமிழில் பிராணவாயு என்று பேர்வந்தது. எப்படி ஒரு விளக்கானது காற்றில்லாவிட்டால் எறியாமல் அணைந்துபோய் விடுகிறதோ அப்படியே காற்றில்லாவிட்டால் நாமும் இறந்து விடுவோம்; எப்படி ஒரு விளக்கு எறிகிறதினால் கார்பன் என்னும் கரியானது ஆக்ஸிஜன் என்னும் பிராணவாயுவோடு கலந்து அதினால் எறிந்து கரியமல வாயுவாகிறதோ அதுபோலவே ஆகாயத்திலுள்ள ஆக்ஸிஜன் நாம் ஆகாயத்தை ஸ்வாசித்து உட்கொள்வதினால் நமது தேகத்திலுள்ள கார்பனோடு கலந்து கரியமலவாயுவாகி நமது ஸ்வாஸத்தினால்வெளியாகிறது. அடிக்கடி மாறாத காற்றில் நாம் வஸிப்போமானால் நாம் எவ்வளவுதரம் ஸ்வாஸிக்கிறோமோ அவ்வளவுதரமும் அக்காற்றுக் கெட்டு சீக்கிரத்தில் நாம் வஸிக்கத்தகாத விஷக்காற்றாய்விடும். இதை உத்தேசித்தே நம்மேல் அதி கருணையுள்ள கடவுள் காற்றை சுத்திகரிக்கும்பொருட்டு செடி கொடிகளையும், மரங்களையும் உண்டாக்கியிருக்கிறார். நம்மால் வெளிப்படுத்தப்படுகிற கரியமல வாயுவானது ஆகாயத்தில் கலக்கப்பட்டிருந்தும், அதிலிருக்கும் கரியைமாத்திரம் சூரிய வெளிச்சத்தினுதவியால் பிரித்து தங்கள் வளர்ச்சிக்காக மரங்களும் மற்றசெடிகளும் எடுத்துக்கொண்டு நமக்கு அவசியமான பிராணவாயுவை மாத்திரம்விட்டு விடுகின்றன. இது காரணத்தினாலேயே ஸ்ரீமான்கள் வீட்டைச்சுற்றி புஷ்பச்செடிகள் முதலியவைகளை வைத்து வளர்க்கிறார்கள். ஆகையால் ஆகாயத்தை ஏறக்குறைய எப்போதும் சுத்தமானதென்றே கொள்ளலாம்.

ஆகாயம் எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கவேண்டும். அதற்காக நாம் வஸிக்கும் வீடுகளிலும் வீட்டறைகளிலும் ஏராளமான பெரிய ஜன்னல்கள் இருக்கவேண்டும். அநேகமாய் நம்மவர்கள் வீடுகளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் ஜன்னல்கள் வைத்துக் கட்டுகிறார்கள். அந்த ஜன்னல்களால் அதிக பிரயோஜனமில்லை. ஏனெனில் ஜன்னல்பக்கமாக காற்றடித்தால் புதியகாற்று உள்ளே நுழைகிறதானாலும், ஏற்கனவே நம்மால் அசுத்தப்படுத்தப்பட்ட காற்று அறையிலிருந்து வெளியாவதற்கு வழியில்லாமல் எதிர்ச்சுவற்றில் மோதி காற்றுவருகிற ஜன்னல் வழியாகவே வெளியில்போக யத்தனிப்பதினால் புதிய காற்று தாராளமாய் உள்ளேவரத் தடைப்படுகிறதும் தவிர, அசுத்தக்காற்றோடு கலந்து அசுத்தக்காற்றாகவே நமக்கு வருகிறது. ஆகையினால் புத்திமான்கள் எப்போதும் ஜன்னல்களை நேருக்குநேராக வைக்கிறார்கள். அதனால் ஒரு ஜன்னல் வழியாக காற்று உள்ளே வருமானால் அதற்கு நேராக ஜன்னல் வழியாய் அசுத்தக் காற்று வெளியே போய்விடுகிறது.

தவிர, உயரமான சுவர்களுள்ள கட்டடங்களில் சுவரின் உச்சியிலும் அடியிலும் ஜன்னல்களிருப்பதைக் காணலாம். ஸாதாரண ஆகாயத்தைவிட கரியமலவாயு கலந்தகாற்று அதிக கனமானபடியால் அறைகளின் அடிபாகத்திலேயே தங்கிமேல் ஜன்னல் வழியாக நல்ல காற்று வரும்போது கீழ்ஜன்னல்கள் வழியாக கெட்ட காற்று வெளியே போய்விடுகிறது. இது காரணத்தைக்கொண்டே எப்போதும் நாம் கட்டிலில் அல்லது உயரமான இடங்களில் படுத்து நித்திரை செய்யவேண்டும்.

நகரங்களிலுள்ள காற்றைப் பார்க்கிலும் கிராமங்களிலுள்ள காற்று எப்போதும் சுத்தமானது. ஏனென்றால், நகரங்களில் ஜனத்தொகையும் அதிகம், கைத்தொழில் வேலை செய்யுமிடங்களும் அநேகம், அதற்காக கட்டப்பட்டிருக்கும் புகைகூண்டுகளும் அநேகம். அப்புகை கூண்டுகளின் வழியாய் ஏராளமாய் கரியமலவாயு ஸதா புறப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. அவ்வாறு அசுத்தமாகிறகாற்றை சுத்தியாக்கும்படியான அவ்வளவு மரம் செடிகளும் கிடையா, ஆனால் கிராமங்களிலோ ஜனத்தொகையும் ஸ்வல்பம், கைத்தொழில் வேலைச்சாலைகளுமில்லை. மரம் செடிகளுள்ள தோட்டங்களும் அநேகம்.

வி. ஏ. வேங்கடாசாரியார்.

## ECONOMIC HOUSE-KEEPING

BY

K. V. SUBRAMANIA AIYAR B. A.

### செட்டாய்க் குடித்தனம் செய்தல்.

செட்டென்பது சிக்கனமாய்ச் செலவு செய்தல். ஆனல் மட்டாய்ச் செல விடுவதெல்லாம் செட்டென்று சொல்லமுடியாது. செலவாகும் பொருள், காலம், நாம் எடுத்துக்கொள்ளும் ப்ரயாஸை இவைகளோடு செய்யுங் காரியங்களின் பலா பலன்கள், குணதோஷங்கள், நீடித்திருப்பவையா, மேலும் மேலும் லாபத்தைத் தரக்கூடியவையா, என்று பின்னிட்டுண்டாகும், பிரதிபிரயோஜனம் இவைகளை சீர்தூக்கி ஆராய்ந்தே, செட்டின் தன்மையை நிர்ணயிக்கவேண்டும். துரியோதனன் அளவையே பிரதானமாகக்கொண்டு உள் நிறைய கட்டை, முட்டைகளை நிரப்பியதும், பஞ்ச பாண்டவர்கள் விளக்கு வெளிச்சத்தால் வீட்டை, ரமணீகரமாய்ச்செய்து, புஷ்பசந்தனுதிகளின் பரிமளத்தைப் பரவச்செய்து குருமார்களை சந்தோஷிக்கச் செய்தார்களென்ற விருததாந்தம் ப்ரஸித்தமாயிருக்கிறது.

ஒருவர் விலை ஸரஸமாக மூன்று ரூபாய்க்கு கைக்கடியாரம் ஒன்று வாங்கி மாதம் இரண்டு முறை ரிப்பேர் செய்யவேண்டி வருகிறது. மற்றொருவர் 10 ரூ. போட்டு சிறந்த ஸர்தார் கைக்கடியாரம் வாங்கி கவலையின்றி இருக்கிறார். விலையதிகமாயிருந்தாலும் பின்னிட்ட வியாபாரம் செட்டென்று எவர்தான் சொல்ல மாட்டார்கள் ?

நம்முடைய ஸ்திரீகள் புருஷர்களைவிட சிக்கனமாய்ச் செலவிடுதலில் ஸாமர்த்தியமுள்ளவர்கள். அதிகமாய் எரியும் விளக்கின் திரியை சிறிதாக்குவதிலும், நெய்யை அரைமுட்டையாய் பரிமாறுவதிலும், பண்டங்களைப் பாதுகாத்து எலி, பெருச்சாளிக்களுக்கு விடாமல் சிறுகச்சிறுகச் செலவு செய்தலிலும் கண்ணுங்கருத்துமாயிருப்பார்கள். என்றாலும் சில விஷயங்களில் (நகை, புடவை வாங்குதல், கலியாணச்செலவு) தம்முடைய அந்தஸ்துக்கு மீறியே செலவிட்டு பின்பு கையைப் பிசைகிறார்கள். எம் அநுபோகத்தில் கண்டதும், பொருளாதார சாஸ்திரயுக்தமுமான சில குறிப்புகளை இங்கே வரைகிறோம்.

(1) குடித்தனஞ்செய்யும் ஒவ்வொருவரும் ஒரு வரவு செலவுகணக்குப் புஸ்தகம் அவசியம் வைத்துக்கொள்ளவேண்டும். யாருக்குக் கணக்கு ஒப்புவிக்கப் போகிறோமென்று அசட்டையாயிராமல் தினம் வரவு செலவு எழுதிவரவேண்டும். செலவுகளையும், கையிருப்பையும் பார்க்கப்பார்க்க மட்டாய்ச் செலவிட வேண்டு மென்ற எண்ணம் உதிக்கும். பின்னிட்டு எந்த விஷயத்தில் அதிகம் செலவாயிற்றென்று ஒத்துப்பார்க்கவும், செலவை ஒன்றில் குறைத்து மன்றொன்றில் உயர்த்தவும் உற்றதுணையாக இது உதவும். கணக்காய் ஒவ்வொரு பகுதியில் இவ்வளவுதான் செலவாகு மென்று அறியமுடியும். இதனல் செலவைக்குறைத்தல் ஸாத்தியமாகும்.

(2) பொருளும், பொறுப்பும் எவரிடம் சேர்ந்திருக்கிறதோ அவர்கள் சிக்கனமாகவே செலவுசெய்வர். ஒருவரிடமிருந்து அப்போதைக்கப்போது வேண்டும் பணத்தை வாங்கி செலவு செய்கிறவர்கள் சிறிது கை தாராளமாகவே யிருப்பார்கள். பணத்தினருமை தெரியாமல் பட்டணத்தில்வாசிக்கும் மாணுக்கர்கள் பெற்றோரின் கஷ்டங்களை யறியாமல் வீண் செலவுகள் காப்பிக்கிளப்புகளில் செய்வதைப் பார்க்கலாம். வீட்டில் ஸ்திரீகளும் பொறுப்பு அவர்களுக்கில்லாமலிருந்தால் அதிகச் செலவு செய்வார்கள். ஒரு ஊரில் ஒரு தனவானின் குமாரன் தகப்பனைக் காணுது பணத்தை எடுத்துச் செலவுசெய்து கொண்டுவந்தான். தகப்பன் எவ்வளவுபணம் கொடுத்தாலும் அதை

யும் செலவழித்துவந்தான். தகப்பனர் பெட்டிச்சாவியை கடைசியாக அவனிடமே கொடுத்துவிட்டார். பையன் 'ஒரு ரூபாய் எடுத்தால் நூறில் ஒரு ரூபாய் குறைந்துவிடுமே, ரூபாய் செலவானல் மேலும் பணத்திற்கென்ன செய்வது' என்று மனதில் நினைத்து வெகு சிக்கனமாய்ச் செலவுசெய்துவந்தான். அது போலவே வீட்டில் பெண்டிர்களிடத்தில் செலவுக்குப் பணத்தை ஒரு மொத்தமாய்க்கொடுத்துவிட்டால் பொறுப்பு அவர்களிடமிருப்பதால் சிறுகச்செலவுசெய்து எதாவது மீக்க வழிதேடுவார்கள். இந்த விஷயத்தில் ஸ்திரீகளுக்கு சுயேச்சை கொடுக்கப்படவேண்டும். புருஷர்கள் ஒவ்வொன்றிலும் தலையிட்டு வாதாடுதல் கூடாது. ஸ்திரீகள் செலவுசெய்யும் சிறு குற்றங்களைப் பார்க்காதது போலிருந்து மட்டாய்ச் செலவிடும்போது உற்சாகப்படுத்தி வரவேண்டும்.

(3) பண்டங்கள் ஒரு தரம் உபயோகப்படுத்துவதால் அழியுந்தன்மையுடையனவும், பல தரம் உபயோகித்தாலும் அழியாத வற்ற பொருள்களாயிருப்பது முண்டு. துணி, நெய், பால், அரிசி, தின்பண்டங்கள், முதல் வகையிற் சேர்ந்தன. நிலம், இன்ஜின், நகைகள், கெட்டிப் பாத்திரங்கள் பிற்கூறிய பகுதியில் சேர்ந்தன. இனமல், பழுக்கா பொம்மை, க்ளாஸ், முதலியவைகளை முற்பகுதியிலே சேர்க்கவேண்டும். பிற்கூறிய பொருள்களில் பணத்தை செலவிட்டால் முதலுக்கழிவு கிடையாது.

(4) நகை, ஆபரணங்களில் செலவிட்டால் முதலுக்கழிவில்லையானலும், (சிறிது தேய்தலும் உண்டு) மேலும் மேலும், கைத்தொழில், வியாபாரம், விவஸாயம், இவைகளில் செலவிட்ட பொருளைப்போல் லாபந்தருவதாய் நீடித்த ஸ்வபாவமுடையவைகளல்ல. நகைகள் இந்திய ஸ்திரீகளுக்கு ஸேவிங்ஸ் பாங்கிகளென்று ஆர். ஸி. தத் என்பவர் சொல்லுகிறர். இதை தாயாதிகளோ, கடன்காரர்களோ பாத்தியதை கொண்டாட முடியாது. உடையவர்கள் வேண்டும்போது அடகுவைத்து பணம் பெற்று கொண்டு பின்னிட்டு திருப்பிக் கொடுத்துவிடலாம் வஸ்திரம், புடவை இவைகளில் பணம் செலவிடுவதைவிட நகைகளில் செலவிடுவதே சிலாக்கியம். நகைகளில் செலவிடுவதைவிட குழந்தைகளின் படிப்பிலும், மற்றும் வருவாயுண்டாகும் தொழில்களிலும் பணம் செலவிடுதல் யுக்தமாகும். காசுமாலை, ராக்கடைபோன்ற பெருநகைகளைச் செய்யாமல் ஏதோ அழகுக்காக ஒரு கடியாரச்சங்கிலி, ஒரு காப்புவளை, இவைகளைச் செய்து கொண்டால் வீண்செலவு ஆகமாட்டாது.

பந்துக்களையும், ஊராரையும் திருப்திப் படுத்துவதற்காக டம்பமாய் விவாகச் செலவுகள் செய்தல் வீண்செலவு. இதைவிட மாப்பிள்ளைக்கு படிப்புக்காக வரதக்ஷிணை கொடுப்பது மேலாகும். ஒருபையன் முன்னுக்குவர ஹேதுவாகிறது.

இப்படிப்பட்ட தோரணைச் செலவுகளே சில ஸ்திரீகளுக்கு பிரியத்தைத் தரத்தக்கன. நாளைக்கு கையிலில்லாமற்போனல் யார்வந்து உதவுவார்கள்?

(5) ஏக குடும்பமாயிருப்பதால் செலவு குறைவுபடும். ஒருவருக்கு மாத்திரம் 20 ரூ. செலவானல் இருவருக்கு 30ரூ. ஆகும். மூன்று பேருக்கு 35 ரூ. ஆகும். போகப்போக செலவு இரட்டிப்பு, மூன்றுபங்காக ஆகவேண்டு மென்று நாம் எதிர்பார்ப்பதுபோல்ஆகிறதில்லை. பெரிய குடும்பமாயிருந்தால் பெருள்கூடிவரும். ஒவ்வொருக்கும் சொற்பச் செலவோடு பெரிய காரியங்கள் (விவாகம் முதலியன) முடியும்.

(6) பெரிய குடும்பங்களுக்கு பண்டங்கள் சேர்ந்தாற்போல் வாங்குவதால் நல்ல லாபமுண்டு. ஸாதாரண குடும்பத்திற்குக்கூட வரு

ஷாந்தரத்திற்கே பண்டங்கள் வாங்கப்படவேண்டும். விலை ஸரஸமாயிருக்கும். உற்பத்தி இடத்திலிருந்தே தருவித்துக்கொள்ளலாம். சரக்கும் நல்லதாயிருக்கும். துவரை, உளுந்து, முதலிய ஸாமான்கள் வாங்கி நாமே உடைத்து பருப்பாக்கினல் இன்னும் லாபமுண்டு.

(7) வியாதிவந்தபிறகு குணப்படுத்தினுலும், வியாதியைத் தடுப்பதே மேலாகும். "வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு" என்று பழமொழி வழங்குகிறது. கடுஞ்செட்டுப்பண்ணி வியாதியை ஸம்பாதித்துக் கொள்வதைவிட சிறிது தாராளமாய்ச் செலவு செய்தால் பின்னிட்டு அதிகச் செலவைத் தடுக்கலாம்.

(8) குடும்பத்தில் ஒவ்வொருவரும் அவரவரின் சக்திக்கேற்ற வேலையைச் செய்துவர வேண்டும். வீட்டில் பண்டங்களை வாங்குவதற்கு ஒருவரும், சமையல்செய்ய ஒருவரும், நிலங்களைப் பார்த்துக்கொள்ள இன்னெருவரும், மாடுகளைக் கவனிக்க ஒருவரும், பாக்கி வஸூல்செய்ய பின்னெருவரும், மேற்தணிக்கைசெய்ய ஒருவருமாக இருந்தால், லாபகரமாயிருக்கும். எதிலெதில் எவர் ஸாமர்த்தியசாலியோ அந்த வேலையில் அவர்களை அமர்த்தவேண்டும். சமையலுக் கொருவரும், சுற்றுக் காரியங்களுக்கொருவரும், பரிமாறச் சிலரும் இப்படியாக வேலையைப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும். ஆனல் ஐந்து நாட்டுப்பெண் கதை செய்யக்கூடாது. எல்லாரும் ஒற்றுமையாய் குடும்பத்தின் அபிவிர்த்தியை நாடவேண்டும்.

(9) எடுக்கப்பட்ட பண்டங்கள் எடுத்த இடத்திலேயே வைக்கப்படவேண்டும். இதனல் பொருள் சேதமாகாது. காலம் வீணில் கழியாது. கொடுக்கல் வாங்கல் முதலியவைகளில் சிறிது கண்டிப்பு வேண்டும். தாக்ஷிண்யமுள்ள பேர்கள் பணம் அதிகமாய்ச் சேர்த்ததாகத் தெரியவில்லை. தங்களுக்கு மனதில்லாவிட்டாலும் தாக்ஷிண்யத்திற்காக பணத்தை செலவு செய்வார்கள்.

வரும் வரும்படியில் சிறிது தொகையாவது மிகுக்கப் பிரயத்தனப்படவேண்டும். கையில் நோட்டு, அல்லது பவுனுயிருந்தால் நமக்கு செலவு செய்யமனம் வருவதில்லை. சில்லரையாயிருந்தால் பணம் பஞ்சாய்ப் பறந்துவிடுகிறது. மிகுந்த பணத்தை ஏலச்சீட்டு, ஸேவின்ஸ் பாங்கி முதலியவைகளில் போட்டு லாபத்தை யடையப் பிரயத்தினப்படவேண்டும். பின் வரும் செலவுகளை யோசனைசெய்து (கலியாணம் முதலியவை) முன்னமே சிறிது சிறிதாய் பணம் சேர்த்து வைக்கவேண்டும். பல துளி பெருவெள்ளமாகும்.

(10) கூடியவரையில் கடன் வாங்கக்கூடாது. பணத்தை முன்போட்டு பின்னே கொடுக்க சக்தியுண்டானுலும், லாபமிருப்பதாயிருந்தாலும் கடன் வாங்கலாம். ஒருதரம் கடன் வாங்க ஆரம்பித்தால் மேலும் மேலும் கடன் வாங்க புத்தி தோன்றும். கடன் பின்னிட்டு அடைந்தபாடில்லை. கடன் வாங்க ஆரம்பித்தால் செலவுக்குக் கைதாராளந்தான். பணத்தை மிகுப்பதில் புத்தி செல்லாது. பணம் கையிலில்லாதவன் கடன் வாங்க எப்படி வேண்டுமானுலும் கடன் பத்திரம் எழுதிக் கொடுக்கத் தயாராயிருப்பான். கடன் வைப்பதைவிட ரொக்க வியாபாரம் சிலாக்கியமாகும். காலக்கிரமத்தை அநுஸரிக்கவேண்டும்.

சில வீடுகளில் நகைப் பணமென்று ஸ்திரீகள் பொதுபண்டு, ரிஸர்வ் பண்டு மாதிரி மிகுந்த பணத்தை சேர்த்து வைக்கிறுர்கள். இதன் வட்டியிலிருந்து நகை செய்யப்படுகிறது. முதல் விருத்தியாகிறது. ஆபத்காலங்களில் தான் இந்த முதல் தொட்டு உபயோகப் படுத்தப்படும். ஸ்திரீகளுக்கு கலியாணத்தில் ஓதிவைத்த பணம், சிக்கனமாகச் செலவு செய்ததின் லாபம் இவைகள் தான் இதற்கு மூலதனம். இது மாதிரி சாவு பண்டு இருத்தல் நலம்.

கே. வி. சுப்பிரமணிய அய்யர்.



**THE NEW EMPEROR OF JAPAN.**

**ஜப்பான் தேசத்து புதிய சக்ரவர்த்தி.**

ஜூலைமாதம் பத்ரிகையில் ஜப்பான் தேசத்து சக்ரவர்த்தியைப் பற்றி எழுதினேம். இப்பொழுது அவரது குமாரராகிய ஹாரு நோமியா யோஷி ஹிடோ வைப்பற்றி சுருக்கமாக எழுதுகிறோம்.

இவர் 1879-ம் வருஷம் 31வ யன்று ஜனித்தார். அக்காலத்தில் பூர்வகாலத்து வழக்கங்கள் மறைந்து, அத்தேசத்தாரிடம் புதிய எண்ணங்கள் உதித்துக் கொண்டிருந்தன. இதர தேசங்களிலிருந்து ஜனங்கள் இத்தேசத்து கவர்ன்மெண்டாரிடம் உத்தரவு பெற்று வரத் தலைப்பட்டார்கள். ஜப்பானியர்களுக்கு கல்வி, சாஸ்திரம், கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளைக் கற்பித்து வரும்படி சக்ரவர்த்தியினிடமிருந்து உத்தரவு பெற்றார்கள். மேலும் 20 வருஷகாலம் ஜப்பான் தேசத்து ஜனங்கள் இதர தேசங்களுக்குச் சென்று அங்குள்ள புதிய விஷயங்களை யெல்லாம் கற்று தங்கள் தேசத்திற்கு வந்து, அவைகளை மற்ற ஜனங்களுக்கு போதித்தார்கள். இவ்விதம் செய்து வந்தமையால் ஜனங்கள் தங்களது சக்ரவர்த்தியின்மேல் மிக ப்ரியமாயிருக்கத் தலைப்பட்டார்கள்.

அக்காலத்தில் ஷோகன் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் சக்ரவர்த்தியைப் பேருக்குமாத்திரம் பொம்மை போல் வைத்துக்கொண்டு தாங்கள் எல்லா சுதந்தரங்களையும்பெற்று ராஜாதிகாரத்தை நடத்தி வந்தார்கள். ப்ரஜைகளுக்கு

இவ்வித நட வடிக்கை பிடிக்க வில்லை. உடனே ஜனங்கள் கலகம்செய்து ஷோகன் வம்சத்தாரை அப்புறப்படுத்தி, அவர்களிடத்தி லிருந்த ராஜ்பாதிகாரத்தைப் பிடுங்கி தங்கள் சக்ரவர்த்திக்குக் கொடுத்தார்கள். 1868-ம் வருஷ முதல் இறந்துபோன **முட்ஸுஹீடோ** தமது ராஜ்பத்தைப் பற்பல மார்க்கங்களில் விருத்தி செய்ய முயன்று ப்ரஜைகளுக்கு கல்வி போதித்து வர ஏற்பாடு செய்தார்.

இவ்விதம் செய்ததானது ப்ரஜைகள் மிருகம்போல் வாயை மூடிக்கொண்டிராமல் தங்கள் விவகாரம் முதலியவைகளைத் தாங்களே காலக்ரமத்தில் நடத்திவர காரண பூதமாயிற்று. மேலும் பார்லிமெண்ட் ஸ்தாபிக்கப்பட்டதென்று முன் சொன்னேமல்லவா? சக்ரவர்த்தியும் வெகுகாலமாக 162,000 சதுர மயிலுள்ள 55,000,000 ஜனங்களை தெய்வகடாட்சத்தால் ஆண்டுவந்த போதிலும், தம்மிஷ்டம்போல் ராஜ்யாதிகாரத்தில் ஒன்றும் செய்யாமல் மந்திரிகளுடைய யோசனைகளைக் கேட்டு ஸகல நடவடிக்கைகளையும் செய்துவர பார்லிமெண்ட் ஹேதுவாயிற்று. இக்காலத்தில் **யோஷிஹீடோ** சக்ரவர்த்தி ஸகல விஷயங்களையும் தம் கண்ணுல் பார்த்தும் கேட்டு மிருந்தமையால் பழைய கால வழக்கங்களைப் பின் பற்ருமல் காலதேச வர்த்தமானத்தை யொட்டி நடந்து வருவார் என்பதற்குச் சந்தேகமில்லையல்லவா?

ராஜா வம்சத்து குமாரர்களுக்குப் படிக்கத் தக்க வயதாகும்பொழுது அரண்மனைக்கு உபாத்தியாயர்கள் வந்து அவர்களுக்கு கல்வி போதித்து வரும் வழக்கம் குடிகொண்டிருந்தது. ஆனால் **யோஷிஹீடோ** ஜனித்த காலம் விசேஷமானது. இவரது தகப்பனர் தமது குமாரனை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினரேயொழிய உபாத்தியாயர்களை நியமித்து அரண்மனைக்கு வந்து தம் குமாரனுக்குப் போதித்து வரும்படி செய்யவில்லை.

இவர் சென்ற பள்ளிக்கூடத்தின் பெயர் **காகுஷு** இன் அதாவது பிரபுக்கள் படிக்கும் பாடசாலை எனப்பெயர். 1877-ம் வருஷத்தில் இறந்துபோன சக்ரவர்த்தியே இவ்வித பாடசாலையை ஸ்தாபித்து இதற்கு சில பிரபுக்களை கமிட்டி மெம்பர்களாகவும் நியமித்து, இதில் பிரபுக்களின் குமாரர்களும், குமாரத்திகளும் மாத்திரம் படித்து வரவும், இதை ஸரிவர நடத்திவரவும் ஏற்பாடு செய்தார். இவ்விதம் சில வருஷ காலம் நடந்துவந்தது. **யோஷுஹீடோவும்** சுறு சுறுப்பாகவும், வேளை தப்பாமல் பாடசாலைக்குச் சென்று தம் பாடங்களை நன்ருகப் படித்தும் வந்தாராம். 1884-ம் வருஷம் இப்பாடசாலை பொதுப் பள்ளிக்கூடமாகச் செய்யப்பட்டு, இதில் பிரபுக்கள், உத்யோகஸ்தர், தனவந்தர் முதலியவர்களுடைய பிள்ளைகளை யெல்லாம் சேர்த்துக் கொள்ள ஏற்பாடுண்டாயிற்று. ஆனல் பெண்களுக்குத் தனிமையாக ஒரு பாடசாலை 1885-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் பிரபுக்களுடைய பெண்மணிகள் சேர்ந்து படித்துவந்தார்கள். இவ்வித பொதுப் பாடசாலைக்கு சக்ரவர்த்தி தம் குமாரனை அனுப்பிவந்தது விசேஷ மல்லவா?

இது மாத்திரமா? தமது, குமாரனை மற்ற பிள்ளைகளுக்கு ஸமமாக நடத்தி வரும்படி திட்டம் செய்தாராம். **யோஷிஹீடோ** பாடசாலையில் உபாத்தியாயர் சொல்லிய வண்ணம் யாவற்றையும் கீழ்ப்படிந்து செய்துவந்தார். தம் பாடங்களை ஸரிவரப் படித்தும், தேகாப்பியாசம் வேளா வேளையில் மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து செய்தும், பற்பல விளையாடல்களை ஆடிக்கொண்டும் வந்தார்.

இவ்விதம் சில காலஞ் சென்ற பின் அரசகுமாரனுக்கு தேக அஸௌக்ய முண்டாயிற்று. டாக்டர்கள் அரச குமாரனை அரண்மனையிலேயே யிருந்து வரவேண்டு மென்று அபிப்

பிராயப்பட்டு சக்ரவர்த்தி யவர்களுக்குத் தெரிவித்தார்கள். சக்ரவர்த்திக்கு இது பிடிக்கவில்லை. டாக்டர்கள் சொல்லுவதால் அரை மனதுடன் ஒத்துக்கொண்டு அரண்மனையிலேயே யிருந்து படித்து வரத்தக்க ஏற்பாடு செய்வித்தார். டாக்டர்களும் அடிக்கடி அரசகுமாரனுடைய தேகஸௌக்யத்தை கவனித்து வந்தார்கள். அரசகுமாரன் சிறிது காலம் மட்டும் பிரபுக்கள் பாடசாலையில் படித்தபோதிலும், நற்குணங்களை யடைந்து ராஜ பதவியிலிருப்பதாக கர்வங் கொள்ளாமல் குடிடரசுக்குரிய எண்ணங்களை யடைந்தார் என்றே சொல்லலாம்.

அரச குமாரனுக்கு இரண்டு மூத்த ஸகோதரர்கள் இறந்துபோனமையால், யோஷிஹீடோ 188·-ம் வருஷம் 31-ம் தேதி பட்டத்துக்குரியவரென பகிரங்கமாய் தெரிவிக்கப்பட்டது. 1888-ம் வருஷம் நவம்பர் மாஸம் 3உ இளவரசரென யாவருக்கும் அறிவிக்கப்பட்டது. இவர் பட்ட மகிஷியினுடைய புத்திரனல்ல. பட்டமகிஷிக்குப் பிள்ளைகளில்லை. ஆனால் ஜப்பான் சக்ரவர்த்திக்கு வேறு 12 மனைவிமார்களுண்டு. அவர்களிலொருத்திக்குப் பிறந்த பிள்ளை இவர். பட்ட மகிஷிக்குப் புத்திரனில்லாமையால் இவர்மேல் மிக்க ப்ரியமாயிருந்துவருகிறார்கள். பட்ட மகிஷியும் இவரைத்தமது குமாரனாக பாவித்து வெகு பக்ஷத்துடன் நடத்தி வருகிறார்கள். முன் இறந்துபோன இருவர்களும் பட்ட மஹிஷியின் புத்திரர்களல்ல.

இவர் 1898-ம் வருஷம் வரையில் ராணுவத்தில் காப்டெனாகவும், பின்னிட்டு மேஜராகவுமிருந்தார். பின்னிட்டு கப்பற் படைக்கு லப்டினண்டு கமாண்டராகவும் நியமிக்கப்பட்டார்.

2 வருஷ மான பின்பு இவருக்கு விவாகம் நடந்தது. ஜப்பான் சக்ரவர்த்தியின் குமாரர்கள் அத்தேசத்திலுள்ள 5 முக்யமான பிரபுக்கள் குடும்பங்களிலுள்ள பெண்மணிகளைத்தான் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமாம். ஆகவே இவ்வித குடும்பங்களில் ஒன்றில் சேர்ந்த ப்ரின்ஸ் குஜோ மிச்சிடகாவின் குமாரத்தியை மணம்புரிந்தார். இப்பெண்ணரசி இவ்வரசனைப்போல் குடியரசில் மிக்க வாஞ்சையுள்ளவள். இவள் அரசகுமாரனுக்கு மனைவி ஆவாள் என்று ஒருவரும் நினைக்கவில்லையாம். ஏனெனில் இக்குடும்பத்தில் மூத்தவளை அரச குமாரன் மணம் புரிவான் என்று அநேகர் நினைத்திருந்தார்கள். அரண்மனையிலுள்ளவர்கள். இப்பெண்ணை ஒருவரும் அரச குமாரனுக்கு மனைவியாகயிருக்கக்கேட்க முன்வராமையால் இப்பெண்மணியின் பெற்றோர்கள் இப்பெண்மணிக்கும் வேறொருவனுக்கும் விவாகம் செய்துவைத்தார்கள். மேலும் இப்பெண்மணிக்குத் தாழ்ந்த வயதுள்ளவளுக்கும் அரச குமாரனுக்கும் விவாகம் செய்து வைத்தால் அவர்கள் துரதிஷ்டமுள்ளவர்களாயிருப்பார்களென்ற மூட நம்பிக்கை இருந்தால் இளைய பெண்ணுக்கும் அரசகுமாரனுக்கும் விவாகம் நடக்காதென்று எண்ணியிருந்தார்கள்.

ஆகவே குஜோ மிச்சிடகாவின் குமாரத்தியாகிய ராணி சாத கோவை அவள் ஒரு வேளை அவ்வுயர்ந்த பதவியை யடைந்தால் அதை வகித்துவரத் தகுந்த வழிகளைப் பழக்கிவைக்க முயலவில்லை. இவள் குழந்தைப் பருவத்தில் ஒரு ஊரில் ஒரு குடியானவன் குடும்பத்திலிருந்து வரும்படி அனுப்பப்பட்டாள். இவள் தலைக்கொன்றுமில்லாமலும், கால்களுக்கொன்றுமில்லாமலும் இங்குமங்கும் ஓடித்திரிந்து விளையாடிக் கொண்டிருந்தாள். அந்நாட்டுப்புறத்திலுள்ள ஏழைக் குழந்தைகளுடன் சேர்ந்து சந்தோஷத்துடன் தன் காலத்தைக் கழித்து வந்தாள். சிறிதுகாலஞ் சென்ற பின்பு டோகியோவிலுள்ள பிரபுக்களின் பெண்கள்

படிக்கும் பாடசாலைக்கு இவளை அனுப்பினார்கள். அங்கு இவள் படித்துக்கொண்டு, முக மலர்ச்சியுடன் பற்பல விளையாடல்களை யெல்லாம் ஆடிக்கொண்டு வந்தாள்.

இப்பெண்மணி இங்கு சிலகாலம் படித்து வருகையில் இளவரசுக்கு விவாகம் செய்ய வேண்டுமென்றும், இப்பெண்மணியை மனைவியாக வகிக்க இஷ்டமென்றும் ஒருநாள் திடீரென்று இப்பெண்மணியின் தகப்பனாருக்கு கடிதம் கிடைத்தது. இச்சமயத்தில்ராணி சதாகோவுக்கு வயது 15. உடனே இவள் தகப்பனார் தமது கிரகத்தில் நல்ல அழகான அறைகளை கட்டிவைக்கும்படி திட்டம் செய்தார். அவைகளில் பலஅலங்காரப் பொருள்கள் சேகரித்து வைக்கப்பட்டன. இவ்விடத்தில் இப்பெண்மணி விவாகம் ஆகும் வரையில் எட்டுமாதகாலம் தனிமையாகவஸித்து வந்தாள். தனிமையாகத்தான் சாப்பிடுவாள். இவளுக்காக ப்ரத்யேகமாக சமையல்செய்த அன்னம் முதலியவைகள் தினம் அலங்கார மான தாம்பாளங்களில் வைத்துக்கொண்டுவருவார்கள். இளவரசுக்கு இவளைக் கலியாணம் செய்யப்போவதாகக் கேட்டதுமுதல் இவள் தாய்தந்தைகளும், மற்றபந்துக்களும் தூரத்தில் நிற்பார்களாம். இவளுடன் கொஞ்சிக்குலாவி பேச அஞ்சுவார்களாம். இவளிடத்தில் அவ்வளவு மரியாதையாக யிருந்தார்கள். இவளுடைய பந்துக்கள் இவளை தங்கள் சக்ரவர்த்தினி என்று நினைத்து இவளை பூஜித்தும் இவளுக்குச் செய்யவேண்டிய வேலைகளை க்ரமமாகச்செய்தும் வந்தார்களாம். நேர்த்தியான புதிய உடுப்புகளை இவள் தாய் தந்தைகள் வாங்கி இவளுக்குக் கொடுத்தார்கள். அவைகளை ராணி தரித்துக்கொண்டிருந்தாள். பியரஸ்ஸ் அதாவது பெரியமனிதர்கள் பெண்களுடைய பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த இவ்விராணியை அங்குபோகாமல் நிறுத்தி, வீட்டிலேயே சிறந்த உபாத்தியாயர்கள் வந்து இவளுக்கு போதித்துவரும்படி ஏற்பாடு செய்தார்கள். இவளும் தனக்கு திடீரென்று ராணியாகும் பதவிக்குரிய விஷயங்களையும், அறிவை விருத்தியாக்கும் பல விஷயங்களையும் கற்றுவந்தாள்.

1900-ம் வருஷம் மேமீ 10உ இவ்விரு தம்பதிகளுக்கு விவாகம் நடந்தது. இச்சமயத்தில் அநேக புது ஆசாரங்கள் அநுஷ்டிக்கப்பட்டன. தமக்கு மனைவியாகவும், பட்ட மகிஷியாகவுமிருக்க இப்பெண்ணைத் தமக்கு விவாகம் செய்துவைக்கும்படியாய் பிள்ளை பெண்ணின் தகப்பனாரைக்கேட்டார். இது கோயிலில் பலிபீடத்திற்கு முன் நடந்தது. ப்ரின்ஸ் குஜமிச்சிடகா ரொம்ப ஸந்தோஷத்துடன் தமது குமாரத்தியை விவாகம் செய்து வைத்தார். ராஜகுடும்பத்தாரும், சில பிரபுக்களும், சீமாட்டிகளும் விவாகத்திற்கு வந்திருந்தார்கள். அழகான ஆடைகளைத் தரித்துக்கொண்டு தம்பதிகள் வண்டியில் உட்கார்ந்து அரண்மனைக்குச் சென்றார்கள். அங்கு இவர்கள் ஒரு தனிமையான இடத்தில் வஸித்தார்கள்.

அன்று ஸாயங்காலம் சக்ரவர்த்தி இவ்விவாக ஸம்பந்தமாக ஒரு விருந்து செய்வித்தார். இவ்விருந்துக்கு ராஜாங்க உத்யோகஸ்தர்களும், பிரபுக்களும், சீமாட்டிகளும் வந்திருந்தார்கள். ராணிவெண்ணிறமுள்ள உடுப்புகளைத் தரித்துக்கொண்டும், இளவரசு ராணுவ உடுப்பை அணிந்துகொண்டும் புன்சிரிப்புடன் விருந்து நடக்குமிடத்திற்கு வந்தார்கள். இவர்கள் இவ்விதம் வந்தது அதிக ஆச்சரியத்தையுண்டாக்கியதாம். ஏனெனில் அத்தேசத்திற்கு இது புது வழக்கமே.

விவாகம் ஆனதுமுதல் இதுவரையிலும் யோஷிஹீடோவும் அவர் மனைவியும் இணைபிரியாத் தோழர்களாயிருந்து வருகிறார்கள். இத்தம்பதிகள் ஒருமிக்கசேர்ந்து சாப்பிடுகிறார்கள். சேர்ந்து ஸவாரிசெய்கிறார்கள். ராஜாங்க

ஜனஸமூக விஷயங்களிலும் சேர்ந்து பிரியமிலிருக்கிறார்கள். இப்புதிய சக்ரவர்த்தி தம் மனைவி வண்டியில் தமக்கு முந்தி ஏறவேண்டுமென்று வற்புறுத்துகிறார். மற்ற ஸமயங்களிலும் இவ்விதமே செய்து வருகிறாராம். இது டம்பத்திற்காக வல்லவாம். சக்ரவர்த்தி தமது மனைவியை இவ்விதமே அரண்மனையிலும்ஸரி, வெளியிலும் ஸரி மரியாதையாக நடத்திவருகிறார்கள். இச்சக்ரவர்த்தினி ஒருவள்தான் சக்ரவர்த்திக்கு மனைவி. சக்ரவர்த்தி அநேக மனைவிமார்களை மணம் புரியும் முன்காலத்து வழக்கத்தைத் தள்ளிவிட்டார். அதாவது ஏக பத்னி விரதத்தை அநுஷ்டித்து வருகிறார் என்று சொல்வோம். இப்படி இவரிருப்பது ப்ரஜைகளுக்குச் சந்தோஷமும் ப்ரியமுமுண்டாகு மல்லவா?

இவர்களுக்கு மூன்று குழந்தைகளுண்டு. மூத்தகுமாரன் பேர் ஹர்ஷிடோ மிச்சிநோமியோ. இவன்தான் இப்பொழுது இளவரசு. இவனுக்கு வயது 11 ஆகிறது. இரண்டாவது குமாரன்பேர் யஸுஹீடோ அட்ஸுநோமியா, இவன் 1902-ம் வருஷம் ஜுன்௴ 25௳ பிறந்தான். மூன்றாவது குமாரன்பேர் நோபு ஹீடோ டேரோநோமியா. இவன் 1905-ம் வருஷம் ஜனவரி௴ 3௳ பிறந்தான். இக்குழந்தைகள் படித்துக்கொண்டு வருகிறார்கள்.

வெகுகாலமாக ஜப்பானில் ப்ரஜைகள் சக்ரவர்த்தியினுடைய முகத்தைப் பார்க்காமலும், அவர்பேரைச் சொல்லாமலும், பூஜித்து வந்தார்கள். இவர் அவ்வித பூர்வகாலத்து வழக்கப்படி நடவாமல், ப்ரஜைகளுடன் கலந்துவருகிறார். இவ்விதம் ஒரு சக்ரவர்த்தியும் இம்மாதிரி செய்ததில்லை. இவர் தெருக்களில் நடந்து ஜனங்கள் சொல்வதைக் கேட்க ப்ரியப்படுகிறார். அவர்களது நடைஉடை பாவனை கைத்தொழில் முதலியவைகளைத் தாமே இதரர்களுடைய உதவியின்றி அறிந்து கொள்கிறார். காற்றுக்காக வெளியில் தம் நாயுடன் உலாற்றப் போகும் போதுதாமே நாயைக் கட்டியுள்ள வாரைப்பிடித்துக்கொண்டு போவாரேயொழிய வேலைக்காரனை அவ்விதம் செய்து வரும்படி சொல்லமாட்டார். தாம் தனிமையாகவே பைஸிகிலில் ஏறிச்செல்வார், மோடார் வண்டியிலும் போவார். குதிரைஸவாரியும்செய்வார். தம்கூட பாடிகார்டு வரக்கூடாதாம்.

50 வருஷங்களுக்குமுன் ஸுமார் 10-அல்லது 12-பேர்தான் சக்ரவர்த்தியைப் பார்த்திருக்கலாம். இவருடைய தகப்பனார் தேச விருத்தியை நாடி பற்பலவழிகளில் தம் தேசத்தை விருத்தி செய்தபோதிலும் இவ்வழக்கத்தை விட்டுவிடவில்லை. இவர் பிள்ளையோ அடியோடே இதை நீக்கிவிட்டார் என்போம். இவர் இளவரசா யிருந்தபொழுதே இவ்விதம் செய்து வந்தார். இனி கேட்கவேண்டுமா?

ஜப்பான் சக்ரவர்த்தி வருஷம் 45-லக்ஷம் ரூ. பெற்றுவருகிறார். இது ராஜாக்களுக்கு மிகுந்த குறைந்ததொகையே. இவர் தகப்பனார் 6-கோடி ரூ. சேர்த்து வைத்திருந்தார். இவருக்கு இதில்முக்கால் பாகத்திற்கு மேல் கிடைத்ததாம். இவர் தகப்பனார் டாம்பீகமாயில்லாமலிருந்தார். அதிக செலவு வீணாகச்செய்யவில்லை. அதனால்தான் 6 கோடி ரூ. சேர்ந்தது. புதியசக்ரவர்த்தியும் தம் தகப்பனாரைப்போல் ஸாமானிய உடைகளைத்தரித்துக்கொண்டும், சிக்கனமாக செலவு செய்தும்வருகிறார். இவருக்கு ப்ரஜைகளிடத்தில் அனுதாபமுண்டு. அவர்களுக்குத் தம்மால் செய்யக்கூடிய நன்மைகளைச் செய்வார் என்பதற்குத் தடையில்லை. ஏனெனில் இவர் பற்பல ராஜாங்க ஸம்பந்தமான அலுவல்களைச் செய்திருக்கிறார். இவரது தகப்பனாரின் பிறந்த நாளாகிய 1901-ம் வருஷம் நவம்பர்௴ 3௳ கடற்படைக்கு லப்டினன்ட கர்னலாகவும், கமேண்டராகவும் நியமிக்கப்பட்டார். 1903-ம் வருஷத்தில் கடற்படைக்குகர்னலாகவும் காப்டினாகவும் நியமிக்கப்பட்டார்.

1909-ம் வருஷம் நவம்பர்௴ 3௳ ராணுவத்திற்கு லப்டினன்ட் ஜெனரலாகவும், வைஸ் அட்மிரலாகவும் நியமனம் பெற்றார். இவ்வித வேலையிலிருந்த பொழுது இவருக்குச் சம்பளமில்லை. கௌரவத்திற்கும் தமக்கு அநுபவம் உண்டாவதற்கும் இவ்வித வேலைகளில் பழகி வந்தார். பார்லிமெண்ட ஸம்பந்தமான விஷயங்களிலும் இவர் அநேக ஸங்கதிகளைத் தெரிந்துவந்திருக்கிறார். அப்போது போதுமான ஸாவகாச மிருந்தது. இதுவரையிலும் இவரைப்போல் ஸகல விஷயங்களிலும் தேர்ந்த ஒரு சக்ரவர்த்தியும் இருந்ததில்லையாம்.

ஆகையால் இவருடைய ஆட்சி நீண்டு செழித்தோங்கு மென்று நம்ப இடமுண்டு.

## SELECTIONS.
## விசேஷத்திரட்டு.

### THE IMPORTANCE OF ORGANIC MATTER IN OUR SOILS.

### நமது நாட்டிலுள்ள நிலவளத்திற்கு இந்திரிய வஸ்து அவசியமானது.

செடிகளும் பிராணிகளும் அழிந்து மட்குவதால் கறுநிறமான ஒரு வஸ்து உண்டாமென்பது கிருஷிகருக்கு அனுபவத்தில் தெரிந்தவிஷயம். இந்தக் கறுநிறமான வஸ்துவுக்கு இங்கிலீஷில் (Organic Matter) ஆர்கானிக் மாட்டர் என்றும் 'ஹியூமஸ்' (Humus) என்றும் வெஜிடபில் மோல்ட்' (Vegetable mould) என்றும் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இதற்குத்தான் தமிழில் இந்திரிய வஸ்துவென்று பெயரிடப்பட்டிருக்கிறது. தாவர ஜீவவர்க்கப் பொருள்களைச் சுட்டால் முதலில் அவைகள் கறுநிறமாய் மாறி பின்னால் சாம்பலாய்ப் போவது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அதாவது சூடு ஜாஸ்தியாகுமுன் நிதானமாய் சுடப்படும் பொழுது கறுநிறமாயிருந்து, ஜாஸ்தி உஷ்ணம் ஏற ஏற அவைகள் சாம்பலாய்ப் போகின்றன. செடிகளின் உறுப்புகளாகிய இலை, தண்டு, கொம்பு முதலியவைகளும், பிராணிகளின் உறுப்புகளும், மட்கும்போது அவைகளில் மேல்சொன்னபடி நிதானமான உஷ்ணம் ஏற்படுமானால் அப்பொருட்கள் முதலில் கறுப்பான பொருளாய் மாறும். அப்பால் நாளாவட்டத்தில் உஷ்ணத்தின் பயனால் அவைகளில் பெரும்பாகம் ஆவிரூபமாய் வெளிப்பட்டு ஆகாயத்திற் காற்றுடன் சேர்ந்து அவைகளிலுள்ள தாதுப்பொருள்கள் மாத்திரம் கடைசியில் சாம்பலைப்போலவே கொஞ்சமாய் நிலத்தில் மிஞ்சும். இக்காரணத்தால்தான் உஷ்ணதேசங்களில் அழிந்துபோன செடிகளும் பிராணிகளும் அதிசீக்கிரத்தில் மட்கிப்போகிறது. ஆகையால்தான் அப்பேர்ப்பட்ட தேசங்களிலுள்ள நிலங்களில் இந்திரியவஸ்து வெகு கொஞ்சமாயிருப்பதற்குக்காரணம். சீதளதேசங்களிலும், உஷ்ணதேசங்களில் உன்னதமான குளிர்ந்த மலைச்சிகரங்களிலும் உள்ள நிலங்களில் இந்திரியவஸ்து ஏராளமாயுண்டு. உதாரணமாக நீலகிரி, செர்வராய்மலை, பழநிமலையிலுள்ள நிலங்களில் ஜாஸ்தியுண்டு.

இவ்விந்திரிய வஸ்து வெகு ஜாஸ்தியாயிருக்கும் நிலங்களைக் குளிர் தேசங்களில், சாகுபடிக்கு லாயக்கில்லையென்று கழிக்கும் வழக்கமுண்டு. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சென்னும், பழமொழிப்படி இந்திரியப்பொருள் ஜாஸ்தியிருப்பதினால் குளிர் தேசங்களில் சில தீங்குகள் உண்டாகின்றன. அப்படியிருந்துங்கூட குளிர்தேசங்களில் பெரும்பாலும் இந்திரிய வஸ்து அதிகமாயுள்ள நிலம் சிரேஷ்டமாகவே மதிக்கப்படுகிறது. குளிர் தேசங்களிலுங்கூட இவ்விந்திரிய வஸ்துவுள்ள நிலங்களைச் சிலாக்கியகரமாய் மதிக்கிறார்களென்றால் உஷ்ணதேசமாகிய நமது நாட்டில் நாம் இந்திரிய வஸ்து ஜாஸ்தியுள்ள நிலங்களை எப்படி மதிக்கவேண்டும்?

இவ்விந்திரிய வஸ்துவை ஏன் இவ்வளவு ஜாஸ்தியாய் கொண்டாடவேண்டும்? அதனால் கிருஷிகருக்கு என்ன லாபம்? அது நம்முடைய நிலங்களில் சாதாரணமாய் எவ்வளவிருக்கிறது? அது எந்தத் திட்டத்திற்கு மேல்பட்டால் கெடுதியையுண்டாக்கும். இவ்வஸ்து குறைந்த நிலங்களில் இதை எவ்விதங்களில் ஜாஸ்தியாக்கலாம்? ஜாஸ்தியாயிருந்தால் எவ்வித உபாயங்களால் குறைக்கலாம்? இதன் அளவைக் கிருஷிகர் தெரிந்துகொள்ளக்கூடிய சுலபமான வழிகளேதேனுமுண்டாவென்றும் இன்னும் இதைப்போலொத்த விஷயங்களைக் கிருஷிகருக்கு மனதில் படும்படி செய்தாலொழிய இதைக் குறித்து அவர்கள் இயற்கையிலே கவனிக்கப்போகிறதில்லை. ஆகையால் இவைகளைக் குறித்துச் சுருக்கிச் சொல்லத் துணிந்தோம்.

நிலத்திலுள்ள இந்திரிய வஸ்துவின் முக்கிய பிரயோசன மென்னவென்றால் :—

(1) மழை ரூபமாய் பூமியில் விழும் தண்ணீரையும் ஆறு ஏரி கிணறு முதலிய இடங்களிலிருந்து பயிர்களுக்குப்பாய்ச்சும் தண்ணீரையும் விசேஷமாய்க் கிரகித்து, அதிக ஆழத்தில் வீணாய்க்கழிந்துபோகாதபடி கடல்பஞ்சு தண்ணீரை எப்படி ஏற்று வைத்துக் கொள்ளுகிறதோ அதே பிரகாரம் நிலைநிறுத்திக்கொண்டு பயிருக்கு அவசியமான ஈரத்தை ஊட்டும்.

(2) நமது கண்ணுக்குத் தெரியாமல் எப்போதும் ஆகாயத்தில் ஆவிரூபமாயிருக்கும் ஜலத்தை ஆகாயத்

திலிந்து இழுத்து நிலத்திலுள்ள பயிருக்கு ஈரத்தை ஊட்டும் சக்தியை யுடையது.

ஒரு குறிப்பிட்ட நிலத்தில் எவ்வளவு இந்திரிய வஸ்து இருக்கிற தென்பதை பின்வருமாறு தெரிந்து கொள்ளலாம் :—

மேடுபள்ள மில்லாமல் சமமாயும் ஒரே மாதிரி யாயும் மண்ணுள்ள 10 அல்லது 15இடங்களில் அரை அடிநீளம், அரை அடி அகலம், அரை அடி ஆழம் குழி கள் வெட்டி அக்குழிகளிலிருந்து மண்ணை எல்லாம் நன்றாய்க் கலந்து அதில் ஒரு சிறு கூடை நிறைய மண்ணை எடுத்து வெயில் படாமல் நிழலிலேயே உலர்த்தி அது நன்றாய் உலர்ந்த பிறகு அதில் நூறு குன்றுமணி எடை மண்ணை எடுத்து ஜலத்தில் மிதக் கத்தக்க ஒரு சிறு ஏனத்தில் போட்டு ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீர் ஊத்தி அதில் அந்த மண் ணைவத்திருக்கும் பாத்திரத்தை மிதக்கும்படி செய்து அப்பெரிய பாத்திரத்தை அடுப்பின்பேரில் வைத்துக் காய்ச்சவேண்டும். கொதிக்கும் ஜலத்தின் சூட்டி னால் மண்ணிலுள்ள ஈரம் ஆவியாய்ப் போகும். அத னால் அதன் எடை குறைந்துகொண்டே வரும். இரண்டு மூன்று மணி நேரத்திற்கு ஒருதரம் மண்ணை எடுத்து எடைபோட்டு எவ்வளவு குறைகிறதென்று பார்த்துக்கொண்டு மறுபடியும் தட்டில் முன்பிரகாரம் போட்டுக் காய்ச்சவேண்டும். இப்படியே அடிக்கடி எடைபோட்டுக்கொண்டு வந்தால் கடைசியில் மண் ணின் நிறை எவ்வளவு காய்ச்சினாலும் அது 95 குன் றிமணி இடைக்குக் குறையவில்லை யென்று வைத் துக்கொள்வோம். அப்படியானால் 100 குன்றிமணி எடை மண்ணில் 5 குன்றிமணி எடை ஈரம் உண் டென்று தீர்மானித்துக்கொள்ளலாம். இவ்வாறு முற் றிலும் ஈரம் வாங்கிய 95 குன்றிமணி மண்ணை ஒரு இரும்புப்பாத்திரத்தில் போட்டு ஒரு கும்மட்டி நெருப்பில் அதைப் பழுக்கக்காய்ச்சி அடிக்கடி எடை போட்டுக்கொண்டுவந்தால் மண்ணின் எடை குறைந் துகொண்டே வரும். இதையும் முன்சொன்ன பிர காரம் இனி சற்றும் குறைவுபடாத எடை கிடைக் கும்வரை காய்ச்சி அந்த எடையைக் கணக்கிட்டால் இந்திரிய வஸ்து இவ்வளவு இருக்கிறதென்ற நிதா னம் கிடைக்கும். அதாவது முன் 95 குன்றிமணி யிருந்த மண்ணின் நிறை 90 குன்றிமணிக்குக்குறைச் சலாய்ப் மோகவில்லையென்று வைத்துக்கொண்டால் அந்தமண்ணில் 100 குன்றிமணி இடைக்கு இந்தரிய வஸ்து ஐந்து குன்றிமணி தானிருக்கிறது. ஆகை யால் 100-க்கு 5 பங்குதான் அந்த நிலத்தில் இந்திரிய வஸ்து அமைந்திருக்கிறதென்று யூகிக்க இடம் கொடுக்கும்.

சாதாரணமாய் நமது நாட்டு நிலங்களில் இந்திரிய வஸ்து 100 பாகத்திற்குச் சராசரியிலே 5 பாகத்திற் குக் குறைவாகத்தா னிருக்கிறதென்று சொல்லலாம். சீதள தேசங்களிலுங்கூட 100-க்கு 15 பாகம் இந்தி ரியவஸ்து இருக்கவேண்டுமென்று அந்நாட்டு கிருஷி கர் விரும்பினால், உஷ்ணம் ஜாஸ்தியாயுள்ள நமது நாட்டு நிலங்களில் இந்திரிய வஸ்து எவ்வளவு ஜாஸ் தியாயிருக்கவேண்டுமென்பது நமது கிருஷிகருக்கு இப்போது நன்கு விளங்கும்.

சில வருஷங்களுக்கு முன் நமது நாட்டுப் பருத் திக் கரிசல் நிலங்களில் இந்திரிய வஸ்து அதிக ஜாஸ்தியாயிருப்பதால்தான் அப்பேர்ப்பட்ட நிலங் கள் கறுப்பு நிறம் உடைத்தாயிருக்கின்றனவென்றும், அதனால்தான் கரிசல் நிலங்கள் சிலாக்கியகரமானவை யென்றும் சாஸ்திரீகர்கூட எண்ணி யிருந்தார்கள். ஆனால் இது தப்பு அபிப்பிராயம் என்றும் அப்பேர்ப் பட்ட கரிசல் நிலங்களை மேல்சொன்ன பிரகாரம் ரசாயன பரீட்சைகள் செய்து பார்த்ததில் இந்திரிய வஸ்து அந்நிலங்களில் அதி ஜாஸ்தியாயில்லை யென் றும் டாக்டர் லெதர் (Dr. Leather) என்னும் ரசா யன சாஸ்திரி கண்டுபிடித்து விட்டார்.

நமது நாட்டுக்கரிசல் நிலத்தில் இந்திரிய வஸ்து செவ்வல் முதலான நிலங்களைவிட சற்று ஜாஸ்தி இருந்தாலும் 100-க்கு 6 அல்லது 7 பங்குக்கு மேலில்லையென்று திட்டமாய்க் கண்டு பிடித்திருக் கிறார். மணல்சாரி நிலங்களிலே இந்திரியப்பொருள் 100-க்கு 3 பங்குக்குறைந்து தானிருக்கிறது. மேல் நாட்டார் அவர்களுடைய நிலங்களிலிருந்து தக்க இலாபம் கிடைக்கும்படி பயிர் செய்வதில் முக்கிய மாய் கவனிக்கும் அம்சங்களில் நிலத்தில் இந்திரிய வஸ்து விருத்தியாக்குவது ஒன்று. 100-க்கு 15 பாகம் வரைக்கும் தாராளமாய் இந்திரிய வஸ்து இருக்கும் படி பிரயாசை எடுக்கிறார்கள். நமது வளமான நிலங் களில்கூட இயற்கையிலேயே இந்திரியப் பொருள் 100-க்கு 3 பங்குக்குமேல் போகிறதில்லை. நமது தேசமோ உஷ்ண தேசம். ஆகையால் இந்திரிய வஸ்துவின் பெரும்பான்மை ஆவியாய் ஆகாயத்தில் சிதறிப்போக இடமிருக்கிறது. இது காரணம் பற்றி

நமது தேசத்து நிலங்களில் இந்திரியவஸ்து மேல் நாட்டார் கணக்குப்படி இருக்கவேண்டுமென்றால் 100-க்கு 15 பாகத்திற்கு மேலிருந்தால்கூட கெடுதி சம்பவிக்காது. 'பதக்கு குடித்தால் உழக்கு தங்கு' மென்றுசொல்லும் பழமொழி இந்திரிய வஸ்துவுக்கு நன்றாய் பொருத்திச் சொல்லலாம். ஆகவே நமது நிலங்களுக்கு இந்திரிய வஸ்துவை ஜாஸ்தி சேர்க்க வேண்டுமென்ற அவசியம் எல்லாருக்கும் இதனால் நன்கு விளங்கும்.—கிருஷிகன்.

---

## VILLAGE PUNCHAYETS.

### கிராம பஞ்சாயத்துகள்.

கிராம பஞ்சாயத்துகள் முற்காலத்தில் இந்தியா வெங்கும் நிலைத்திருந்த நியாயஸ்தலங்கள். ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் பஞ்சாயத்துகள் உண்டு. ஒரு கிராமம் அல்லது பட்டணத்திலுள்ள ஐந்து முதியவர்களையும் மதிப்புள்ளவர்களையும் பஞ்சாயத்தார்களாக ஜனங்கள் தெரிந்தெடுத்துத் தங்களுக்குள் நேரிடும் விவாத வழக்குகளை அவர்களே விசாரித்துத் தீர்ப்பு சொல்லும்படிக்கு அவர்களுக்கு நியாய விசாரணை சம்பந்தமாக சகல அதிகாரமும் கொடுத்து வந்தார்கள். இந்தப் பஞ்சாயத்தார்கள் சாதாரணமாக ஜனங்களால் பெரியவர்களாக மதிக்கப்பட்டு வந்த படியாலும் படித்தவர்களாயிருந்த படியாலும இவர்கள் தீர்ப்பு சொல்லுகிறபடி குடிகள் பயந்து நடந்து வந்தார்கள். தீர்ப்பும் விசேஷமாக நியாயத்தை அநுசரித்ததாக இருக்கும். ஏனெனில் இந்தப் பஞ்சாயத்தார்கள் அநுபோகமுள்ளவர்களாக யிருந்ததுடன் தங்கள் கிராமத்திலுள்ள ஜனங்களுடைய நடவடிக்கைகளைத் தெரிந்திருந்தவர்களானதால் கக்ஷிக்காரர்கள் பொய் சொல்லி இவர்களை ஏமாற்றமுடியாது. இப்போதும் இந்தப் பஞ்சாயத்துகள் சில கிராமங்களில் தழைத்து வருகின்றன. அவ்வித கிராமங்களில் குடிகள், அமைதி, சாந்தம், சந்தோஷம் முதலியவற்றோடு வாழ்ந்து வருகிறார்கள். பஞ்சாயத்தார்கள் சொல்லுகிற தீர்ப்புக்கு வேறு எதிர் தீர்ப்பு கிடையாது. அப்பீல் இல்லை. பஞ்சாயத்து கூடுகிற இடமோ நல்ல செழித்த ஆல மரம்போன்ற மரங்களின் நிழலில். இங்கிலீஷ்காரர்களுடைய துரைத்தனம் வந்தவுடன் இந்தப் பஞ்சாயத்துகள் பறந்துவிட்டன. 10 ரூபா கடன் கொடுத்து வசூல் செய்யவேண்டுமென்றால், லாயர்களென்னும் சட்டம் ஒன்றை மாத்திரம் படித்து விட்டு அஹங்கரித்துத் திரியும் முதலைகளண்டை காசையுங் கொடுத்து காத்தும் இருக்கவேண்டும். வேலையைக் கவனிக்க முடியாது. எப்போதும் வழக்கு நினைப்பே பெரிய ஏக்கம். சாக்ஷிகளுக்குப் படிகட்டி அவர்களை எல்லாம் எங்கெங்கோ இருந்து இழுத்துக்கொண்டு வரவேண்டும். அப்படி வந்து எத்தனையோ தடவை கோர்ட்டார் வழக்கைத் தள்ளி வைத்து விடுகிறார்கள். விசாரணை காலத்தில் லாயர்கள் கெட்டிக்காரர்களாயிருந்தால் வழக்கோடு சம்பந்தமில்லாத ஆபாச கேள்விகளை யெல்லாம் கேட்கிறார்கள். இவ்வளவு ஆர்ப்பாட்டங்களெல்லாம் நடந்தும் நியாயம் கிடைக்கும் என்கிற நம்பிக்கை இல்லை. வழக்காளிகள் இந்தியர்கள், ஜட்ஜ் ஆங்கிலேயருமாக இருந்தால் இந்தியர்களுடைய நடவடிக்கைகள் தெரியாமல் சில சமயங்களில் தப்புத் தீர்ப்பு செய்து விடுகிறார்கள். கொஞ்சம் பெரிய வழக்காயிருந்தால் வருஷக் கணக்காக தீர்ப்பாகிறதில்லை. அவ்வளவு நாளைக்கும் பணச் செலவு, காலதாமதம், தொந்திரவு, கவலை, செய்துவரும் வேலையைக் கவனிக்க முடியாமை, லாயர்களோடு போராட்டம், இவ்வளவு அல்லல்களுண்டு. இங்கிலீஷ் கோர்ட்டுகளில் இன்னொரு குறையிருக்கிறது. இரண்டு கக்ஷிக்காரர்கள் வழக்குக்குப்போனால் சாதாரணமாக இரண்டு பேர்களிடத்திலும் உண்மையும் பொய்யும் கலந்திருக்கும். வாய்மையுள்ள நியாயாதிபதி இரண்டு பேர் சொல்லுவதையும் நம்பாமல் உண்மையை விசாரித்து நடுவு நிலைமையை அறிந்து சிறிது வாதியின் சார்பாகவும் சிறிது பிரதிவாதியின் சார்பாகவும் தீர்ப்பு சொல்லவேண்டும். இங்கிலீஷ் கோர்ட்டுகளில் விசேஷமாக இப்படி தீர்ப்பு சொல்லப்படுவதில்லை. ஒன்று வாதியின் பக்கமாவது அல்லது பிரதிவாதியின் பக்கமாகவாவது பூராவாகத் தீர்ப்பு சொல்லப்படுகிறது. கிராமப் பஞ்சாயத்தார்களாயிருந்தால் இவ்வித அநியாயத் தீர்ப்புகளுக்கு இடமிராது. நம்முடைய நல்லகாலத்தால் இவ்வித பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் இப்போது கவர்ன்மெண்டாருடைய உத்தரவால் அநேக இடங்களில் ஏற்பாடாகிவருகின்றன. முக்கியமான பெங்காலில் (வங்காளத்தில்) சில கிராமங்களில் இவ்வித பஞ்சாயத்துகள் சிருஷ்

டிக்கப்பட்டுவருகின்றன. இப்பஞ்சாயத்துகளைப் பல வாறு புகழ்ந்து அநேக இங்கிலீஷ்கார பண்டிதர் களும் பத்திரிகைகளில் எழுதி வருகிறார்கள். உதார ணமாக, ஜூன் மாதம் 8-ம் தேதி கல்கத்தாவில் வெளியான "காப்பிடல்" என்னும் முதற்றரமான ஆங்கிலேய பத்திரிகைப் பஞ்சாயத்துகளைப் புகழ்ந்து கூறுவது மன்றி அவைகளைக் கல்கத்தாவிலும் ஏற் படுத்தி விட்டால் ஜனங்களுக்கு மிகுந்த நன்மை யைக்கொடுக்கும் என்று கூறுகிறது. இங்கிலீஷ் கோர்ட்டுகளை சிறிதுசிறிதாகத் தொலைத்து விட்டு பஞ்சாயத்துகளை அவைகளுக்குப்பதிலாக ஏற்பாடு செய்துவிட்டால் அநேக விதங்களில் நன்மையுண்டு. முதலாவது, நியாய விசாரணைக்காக செலவாகிவரும் பெருந்தொகைகள் மீதியாகும். 4000,5000 ரூபா சம்பளம் கொடுத்து ஜட்ஜிகளை ஏற்பாடு செய்வது அநாவசியமாகும். பர்மாவில் நடந்த "கெட்டா" கேசுக்கு லக்ஷக் கணக்கில் ரூபாய் செலவாயிற்று. பெங்காளத்தில் மிதன்பூர், ஹௌரா, முதலிய கேசு களில் செலவான தொகைகள் எத்தனையோ லக்ஷ ரூபாய்கள். இவ்வளவும், கிராம பஞ்சாயத்துகள் சிருஷ்டிக்கப்பட்டால், தேசத்துக்கு லாபம். இரண் டாவது, சிலஹிந்துக்குடும்பங்கள் எப்போது பார்த் தாலும் வழக்கு வழக்கு என்று சொல்லி அழிந்து போகும் பரிதாபக்காக்ஷிகள் அருமையாகிவிடும். மூன் றாவது, வேலையில்லாது திரியும் பீ. ஏ, எம். ஏ. பரி க்ஷைகளில் தேர்ந்தவர்கள் சட்டப்பரிக்ஷைகளுக் காகப் படிப்பதை விட்டு விட்டு உபயோகமும் சாரமு மான கல்விகளைக்கற்றும் புத்திமான்களாக ஆவ தோடு தேசத்துக்கும் நன்மையைச் செய்துவருவார் கள். நான்காவது 'சட்ட புத்தகங்கள் என்னும் உப யோகமில்லாத நூல்களை அப்படியேகொண்டுபோய் கடலிலுல் எறிந்துவிட்டு வந்துவிடலாம். இப்படிச் செய்வதால் உலகத்தில் அணுமாத்திரங்கூட ஞானம் குறைந்துவிடாது. ஆறாவது இப்போது அங்கிலேய கோர்ட்டுகளில் கிடைக்கும் தீர்ப்புகளைப் பார்க்கி லும் பஞ்சாயத்தார்கள் சொல்லுவது மிகவும் நியா யத்தைப் பொருத்ததாயும் ஜனங்களுக்குத் திருப்தி கரமாகவும் இருக்கும்.—சுதேச பரிபாலினி.

## KINDERGARTEN.

## கிண்டர் கார்ட்டன்.

கிண்டர் கார்ட்டன் என்னும் பதத்தின் அர்த்தம் அநேகருக்குத் தெரிந்தும் தெரியாமலும் இருக்க லாம். ஜர்மனியா தேசத்துப்பாஷைச் சொல்லாகிய இதற்குச் சிறுவர்கள் தோட்டம் என்பது பொருள். கிண்டர்கார்ட்டன் என்பது ஒரு பாடத்தின் பெய ரன்று. அது ஒருமுறை. கிண்டர்கார்ட்டன் என் பது, பிள்ளைகளின் குணங்களை நன்றாக அறிந்து அவற்றிற்குத்தக்கப்படி அவர்களைவளர்க்கும் முறை யேயொழிய வேறன்று. தோட்டக்காரனானவன் விதை விதைப்பதற்கு முந்திப் பூமியைச் சரியான படி பண்படுத்துகிறான். பிறகு தோட்டத்திலுள்ள ஒவ்வொரு செடிக்கும் தக்கவாறு எருப்போட்டுத் தண்ணீர் பாய்ச்சி, ஏறும் கொடிகளுக்கு ஆதாரமாகக் கொள் கொளம்புகள் நட்டுச் சில செடிகளின்மேல் சூரிய உஷ்ணம் அதிகம் படாதபடி சிறுபந்தல்கள் போட்டு வைக்கிறதையும் பார்க்கிறோம். இப்படிச் செய்வதனால் நமக்குத் தெரிகிற தென்னவென்றால், தோட்டக்காரனானவன் இயற்கைத்தன்மையை அறி ந்து அதற்கு விரோதமாக ஒன்றும் செய்யாமல் அதற் குச் சார்பாகவே ஒவ்வொரு காரியத்தையும் நடத் தித்தன்னுடைய சிறு செடிகளைப் பிரயோஜனமுள்ள பெரிய மரங்களாக வளர்க்கிறான். இதுபோலவே, தோட்டக்காரனாகிய உபாத்தியாயன் தன்னுடைய தோட்டமாகிய வகுப்பில் இருக்கும் சிறுசெடிகளைப் போன்ற பிள்ளைகளினுடைய இயற்கைக் குணங் களைச் செவ்வனே அறிந்து அவைகளுக்கிணங்கத் தக்கபடி கற்பித்து அவர்களை அறிவால் வளர்க்க வேண்டும் என்பது.

உபாத்தியாயன் ஒவ்வொரு பிள்ளையின் மனோ தத்துவ தேக தத்துவ நிலைகளை நன்குணர வேண்டி யது அவசியம். பிள்ளைகளைச் சிறு குழந்தைகளென்று பாவிக்க வேண்டுமேயன்றிச் சிறு மனிதர்களென்று பாவிக்கக்கூடாது. சாதாரணமாய்க் குழந்தைகளுக்கு ஆட்டத்திலும் அதிகப்பிரீதி, ஆதலால் அவர்களுக்கு இஷ்டமான ஆட்டம் பாட்டு முதலான விளையாட்டு களை ஆதாரமாகக் கொண்டு அவ்விளையாட்டுகளின் மூலமாகக் கல்வி கற்பிக்கவேண்டும். ஜர்மனி தேசத்துப் புலவர் சிரோமணியாகிய பிரடரிக் புரோ பல் என்பவர் குழந்தைகளின் இயற்கைக் குணங்களை

நன்குணர்ந்து அவற்றிற்கு ஏற்றபடி தகுந்த விளையாட்டுப்பொருள்களை (கொடைகளை) ஏற்படுத்தினர்.

பிள்ளைகளின் ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய இவைகளைத் திட்டம் செய்வது அவசியம். இவ்வைம்பொறிகள் அறிவை விருத்தி செய்யக்கூடிய ஐந்து சிறு வாசற்படிகளான படியால், அவைகளை முதலிற்பயிற்சிசெய்து விடுவோமாகில், அறிவானது குழந்தைகளுக்கு அவற்றின் வழியாய் விருத்தியாகும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. இவ்வைம்பொறிகளின் வழியாய்க் குழந்தைகளின் இயற்கை விருப்பங்களை நிறைவேற்றி அறிவைப் புகட்டுவதே கிண்டர்கார்ட்டன் என்னும் முறையின் முக்கிய நோக்கம். புரோபலின் கொடைகளெல்லாம் குழந்தைகளின் மனதைத் திருப்தி செய்வதற்கேயன்றி, மற்றைப்படி, பிள்ளைகள் விளையாட்டாக அலங்காரமான ரூபங்களை மட்டும் செய்வதற்கல்ல. புரோபலின் கொடைகள்தான் கிண்டர் கார்ட்டன் என்று சொல்லுவதும் தவறு. அவைகள் கிண்டர் கார்ட்டன் முறைக்குச் சாதனங்களாகும். மேலும், அக்கொடைகளைப் பள்ளிக்கூடங்களில் அத்தியாவசியமாய் வைக்கவேண்டுமென்றும் சொல்லக்கூடாது. அப்படி அக்கொடைகளை நமது பள்ளிக்கூடங்களில் வைக்கவேண்டுமென்றால் புரேபால் ஏற்படுத்தியபடியே அவைகளை வைப்பது தவறு. இக்கொடைகளைப் புரோபல் ஜர்மனியா தேசத்துப் பிள்ளைகளுக்கு ஏற்றபடி அமைத்து வைத்தார். நம் தேயத்தின் பழக்க வழக்கங்களுக்கு ஏற்றபடி இக்கொடைகளை அமைத்துக்கொள்ள வேண்டியது. எப்படி யென்றால், நமது தேசத்தில் பனைமரங்களும்தென்னைமரங்களும் அநேகமாய் இருக்கின்றன. ஆதலால் பனை ஓலைகளும் நமக்குச் சுலபமாகக் கிடைக்கும். காகிதம் நமக்கு அவ்வளவு எளிதில் கிடைக்காது. ஆகையால், புரோபலின் காகிதம் வனைதல் என்னும் கொடைக்குப் பதிலாக நாம் ஓலைவனைதல் என்னும் ஓர் கொடையை அமைத்துக் குழந்தைகளை விளையாடச் செய்வோமாகில், அதனால் பிள்ளைகள், உபயோகமுள்ள பொருள்களாகிய கூடை பாய் முதலியவைகளைச் செய்ய வல்லவர்களாவார்கள். இதனால் பிள்ளைகளின் அறிவும் விருத்தி யடையுமன்றோ?

நமது பள்ளிக்கூடங்களில் எவ்விதமான கொடைகளை வைத்தால் திருப்திகரமாக இருக்கும் என்று பார்ப்போம். இவ்விதக் கொடைகளை வைக்கவேண்டுமென்றுதிட்டம் செய்வதற்கு முன் நாம் கவனிக்க வேண்டியது யாதெனில்:—

(1) சாதாரணமாய்க் கிடைக்கக் கூடியவை எவை?

(2) விலை நயமாய்க் கிடைக்சக் கூடியவை எவை? என்பவையே. பனையோலையானது அதிகமாகவும் விலை நயமாகவும் கிடைக்சக்கூடிய தென்று முன்னமே கூறினேம். மணலும் களிமண்ணும் சாதாரணமாய்க் கிடைக்கக் கூடியவையே. இவ்விரண்டு பொருள்களினால் மணலாட்டமும் களிமண் வனைதலும் போதிக்கலாம். காப்பிக் காகிதம் என்று சாதாரணமாய் வழங்கும் முரட்டுக்காகிதமும் சற்று விலை நயமாய்க் கிடைக்கிறது. இக்காகிதத்தில் சித்திரம் வரைதலும் காகிதங்களை மடித்துப் பற்பல வுருவங்கள் அமைத்தலும் போதிக்கலாம்.—கிண்டர் கார்டன் சஞ்சிகை.

---

## Mr. DHADHABHAI'S BILL.
## மிஸ்டர் தாதாபாயின் மசோதா.

ராஜப் பிரதிநிதிச் சட்ட சபையில் ஆனரபில் மிஸ்டர் தாதாபாய் ஸ்திரீகளையும் பெண் குழைந்தைகளையும் துன்மார்க்கத்தில் பிரவேசிக்கும்படி செய்வதைத் தடுக்கும் நோக்கத்துடன் ஒரு முக்கியமான பில் கொண்டு வந்திருக்கிறார். தேசத்தில் பலவிடங்களில் வயது வந்த பெண்களையும் சிறு பெண்களையும் கூட, பலவிதங்களாய் விபசாரத் தொழில் செய்து சம்பாதிக்கத் தயார் செய்யும் வழக்கம் இருந்து வருவதை நேயர்கள் அறிவார்கள். இந்த வழக்கம் சில வருஷங்களுக்குமுன்னால் இருந்ததைவிட இப்போது அதிகமாகி வருகிறதென்பதில் சந்தேகமில்லை. கோவில்களுக்கு தேவதாசிகளென்று சிறு பெண்களைப் பொட்டுகட்டுகிற வழக்கம் தென்னிந்தியாவில் இருந்து கொண்டிருக்கிறது. விபசாரத் தொழிலுக்காகப் பெண்களைச் சேர்க்கிறவர்களும் அத்தொழிலுக்காக வீடுகள் வைத்துக்கொண்டிருக்கிறவர்களும் அநேகம் பேர் இருக்கிறார்கள். இது வட இந்தியாவில் விசேஷமாய் இருந்து வருகிறது. சில பெண்களுக்கு விவாகம் செய்வதுபோல் செய்து விபசாரம் செய்யவிடப்படுகிறார்கள். விலை மாதர்கள் பலர் சிறுகுழந்தைகளை ஸ்வீகாரம் செய்துகொள்வதுபோல் செய்து கொண்டு இத்தொழிலில் பயிற்று

விக்கிறார்கள். சில பெண்கள் வைப்புகளாக ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கு மாற்றப்படுகிறார்கள். குழந்தைப் பருவத்திலேயே அல்லது புத்திமயக்கம் செய்து சில பெண்கள் கெடுக்கப்படுகிறார்கள். இதைத்தவிர அனேக விட புருஷர்கள் சிறு பெண்களை மோசடியாய்த் தங்கள் இஷ்டத்துக்கு உட்படச் செய்கிறார்கள். இம்மாதிரிக் காரணங்களால் இத்தேசத்தில் பல குற்றமற்ற பெண்கள் ஒழுக்கங்கெட்டு ஆயுளெல்லாம் துன்மார்க்க ஜீவனம் செய்யவேண்டியிருப்பதுமல்லாமல் சமுகத்தின் நல்ல ஒழுக்கத்துக்கே பெரும் ஆபத்து நேரிடுகின்றது.

இப்படி நேரிடுவதைக் கவர்ன்மெண்டார் அறிந்து, பல வருஷங்களாக இதைத் தடுக்க முயற்சி செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் இம்முயற்சிகள் இதுவரையில் நிறைவேறவில்லை. சமீபத்தில் இந்திய ஜனங்களில் படித்த வகுப்பாருக்கு இந்த விஷயத்தில் புதிதான ஊக்கம் தோன்றியிருக்கிறது. சில வருஷங்களுக்கு முன்னால் லார்ட்மார்லி இந்தியா செக்ரிடரியாயிருந்தபோது அவர் இந்தத் தீங்கைப் பற்றி இந்தியாக் கவர்ன்மெண்டு கவனிக்கவேண்டுமென்று எழுதினார். அப்போது கோதாவரி, குண்டூர், கிருஷ்ணா ஜில்லாக்களில், பல விடங்களிலுள்ள 40 நாட்டியப் பெண்கள் சேர்ந்து பெண்களை ஸ்வீகாரம் செய்யும் வழக்கத்தைத் தடுக்கச் சட்டம் செய்வதை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்ட ஒரு மனுவை எல்லூர் ஆனரபில் மிஸ்டர் M. ராம சந்திரராவ் பிரசுரம் செய்வித்தார். இம்மாதிரி இந்த துராசாரத்தைக் குறைக்க, படித்தவர்கள் மாத்திரமல்லாமல் சாதாரணமாய் விவேகிகள் சகலருக்கும், இந்தக் கெட்ட தொழிலை அனுசரிக்கிறவர்களுக்குக்கூட, புதிதான அபிப்பிராயம் உண்டாயிருக்கிறபடியால், கவர்ன்மெண்டார் மறுபடியும் இதைப்பற்றி யோசித்து சமுகத்தின் நன்மையின் பொருட்டுச் சட்டம் செய்யக் காலம் வந்துவிட்டது. இது வரையில் பினல் கோடையும் கிரிமினல் ப்ரோஸிஜர் கோடையும் நம்பியிருந்தது பயன்படவில்லை. ஏனெனில் இந்த சம்பந்தமான பல குற்றங்கள் இவைகளின்படி குற்றங்களென ருசுப்படுத்தல் கஷ்டமாயிருக்கின்றன. இப்படி யிருந்தும், கவர்ன்மெண்டார் சட்டத்தை வேண்டினபடி மாற்றாமலிருந்தது தேசாசாரங்களில் அவர்கள் பிரவேசிக்க அஞ்சுவதைக் காட்டினபோதிலும், இப்போது உத்தியோகஸ்த ரல்லாத ஒரு சட்டசபை மெம்பர் கொண்டுவந்திருக்கும் ஒரு மசோதாவைக் கவர்ன்மெண்டார் முழு ஒற்றுணர்ச்சி யுடனும் அங்கீகரித்திருப்பது திருப்திகரமானது. உத்தியோகஸ்தரல்லாத மெம்பர் இதில் முயற்சி செய்வது ஒருவாறு பொருந்தியதாயினும் சாமானிய ஜனங்கள் இந்த விஷயத்தில் புதுச்சட்டம் செய்யப்பட்டால் அந்தச் சட்டத்தைக் கவர்ன்மெண்ட் செய்ததாகவே கொள்வார்கள். ஆயினும், கவர்ன்மெண்டுக்கு இதனால் கேடொன்றும் சம்பவியாது. ஏனெனில், விபசாரத் தொழில் தேசத்தில் அதிகரிப்பதை எந்த ஹிந்துவும் தாங்கமாட்டான். அதைக் குறைப்பது அவசியமில்லையென்றும் சொல்லமாட்டான். கேவலம் தீங்கு செய்யும் சுபாவமுள்ளவர்களும் இந்தத் தொழிலால் லாபம் பெறுகிறவர்களும் மாத்திரம் கவர்ன்மெண்ட் செய்யும் முயற்சிக்கு விரோதம் செய்வார்கள். ஜனங்கள் எல்லோரும் அதைப் புகழ்வார்களே யன்றிக் குற்றம் சொல்லமாட்டார்கள்.

மிஸ்டர் தாதாபாய் இந்த சம்பந்தத்தில் வேறொரு முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேசினார். கெட்ட வழிகளில் ஜீவனம் செய்யும் பெண்களை அவைகளினின்று மீட்டுவிட்டால் அவர்களுக்கு நல்ல தொழில் எப்படிக் கற்பிப்பதென்று மிஸ்டர் தாதாபாய் தம் பேச்சில் உதகரித்தார். கவர்ன்மெண்ட் தரப்பில் பேசின ஸர் ரெஜினல்ட் கிராடாக்கும் இதைப்பற்றித் தம் பதிலில் பேசினார். இந்த பில் சட்டமாய் நிறைவேறி கெட்ட வழிகளிலிருந்த பெண்கள் நல்லவழிகளுக்குவரும்போது, தேசத்தில் பலவிடங்களில் இப்படிப்பட்ட பெண்களின் சம்ரக்ஷணைக்காக அதிகமான சொசைடிகள் ஸ்தாபிக்கப்படுமென்று இருவரும் சொன்னார்கள். இப்போதே சில விடங்களில் அநாதைக் குழந்தைகளின் சம்ரக்ஷணைக்காகச் சொஸைடிகள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி சட்டம் அனுஷ்டானத்துக்கு வரும் பட்சத்தில், மேற்படி சொஸைடிகள் அதிகமாகும் என்று நம்புவது தவறாகமாட்டாது. ஆயினும் இத்தகைய நல்ல விஷயத்தில் கவர்ண்மெண்ட் சிறிது பணம் செலவு செய்து தொழிற் சாலைகள் ஸ்தாபித்து இந்தப் பெண்களுக்கு நல்ல தொழில்களைக் கற்பிப்பது வீண் செலவாகமாட்டாது. எப்படியாயினும், தேசத்தில் துன்மார்க்கம் பரவும்படி பார்த்திருப்பதற்கு நியாயமே இல்லை. நல்ல வழிகளிற் புகுந்து பிழைக்க விரும்பும் ஸ்திரீகளுக்குத் தொழில் அகப்

படாமற் போகாது. கல்கத்தாபோன்ற சில விடங்களில் ஜெயில்களிலிருந்து வெளிவரும் சிறுவர்களுக்கு நல்ல தொழில்கள் சம்பாதித்துக் கொடுக்கும் சொஸைடிகள் ஏற்பட்டிருக்கின்றன. நல்ல ஜீவனம் செய்ய விரும்பும் பெண்களுக்கு மட்டுமா சகாயம் செய்ய தர்ம பிரபுக்களும் சொஸைட்டிகளும் முன்வர மாட்டார்கள்?

கவர்ன்மெண்டுக்காகப் பேசின ஹோம் மெம்பராகிய ஸர் ரெஜினல்ட் கிராடாக் ஆனரபிள் மிஸ்டர் தாதாபாயின் பில்லை மாகாணக் கவர்ன்மெண்டுகளுக்கு அனுப்புவதோடு கூட இந்தியாக் கவர்ன்மெண்ட் சில பிரேரணைகள் செய்து அவைகளையும் அனுப்புவார்களென்று சொன்னார். இந்தியன் பினல் கோடிலும் இந்தியன் கிரிமினல் ப்ரோஸீஜர் கோடிலும் இந்த விஷயமான செக்ஷன்களைத் தக்கபடி மாற்றுவார்கள். மேலும், இப்போதிருக்கிற சட்டப்படி 12-வயதுக்குக் கீழ்ப்பட்ட ஒரு பெண்ணின் சம்மதமிருந்தாலும் அவளுடன் அவள் புருஷன் சம்பந்தப்படுவது ரேப் என்னும் குற்றமாகக் கொள்ளப்படுகிறது. விவாகமான ஸ்திரீ புருஷருக்குள் சம்பந்தம் இனியும் இப்படியே இருக்குமாயினும் அன்னிய புருஷன் எவனாயினும் 18-வயதுக்குக் குறைந்த பெண்ணுடன் சம்பந்தப்படுவானானால் அது சட்டப்படி குற்றமாகக் கருதப்படும். இந்த மாறுதல்களும் வேறு சில புது நிபந்தனைகளும் செய்து மாகாணக் கவர்ன்மெண்டுகளுக்கு அனுப்புவார்கள். இதன் மத்தியில் சட்ட சபை மெம்பர்களும், படித்த வகுப்பாரும் பொதுவாய் விவேகிகள் அனைவரும் இந்த மேன்மையான விஷயத்தில் கவர்ன்மெண்ட் பிரவேசிப்பதை ஜனங்கள் கெட்ட விதமாய்க் கிரகிக்காமல் கவர்ன்மெண்டின் நல்லெண்ணத்தை எடுத்துக்காட்ட முயலுவார்களென்று ஸர் ஆர். கிராடாக் வேண்டிக் கொண்டார், இப்படி வேண்டிக்கொண்டது வீணாகாதென்று நிச்சயமாய் நம்புகிறோம். கவர்ன்மெண்ட் இதுவரையில் ஆசாரத்திருத்த சம்மந்தமான சட்டங்கள் எத்தனையோ செய்திருக்கிறார்கள். இப்போது ஜனங்களுக்குப் புது உணர்ச்சி உண்டாயிருப்பதால் கவர்ன்மெண்டின் நோக்கங்களும் காரியங்களும் தப்பெண்ணத்தை யுண்டுபண்ண மாட்டாவென்று நாம் நிச்சயமாய் உறுதி சொல்லுவோம்—சுதேசமித்திரன்.

## Seeds Sold by the Madras Agricultural Department.

## சென்னை ராஜதானி விவஸாய டிபார்டுமெண்டு விற்கும் விதைகளின் அட்டவணை.

| விதையின் பெயர். | விதைக்கப் பட்ட காலம். | பருவமாகும் நாட்கள். | ரூபாயுக்கு எவ்வளவு. பட்டணம் படி. | ரூபாயுக்கு எவ்வளவு. பவுன் நிறை | விற்கும் காலம். | ஷரா. |
|---|---|---|---|---|---|---|
| **தெற்குப் பிரிவு.** | | | | | | |
| மிளகாய் (தெற்கு கனடாமாதிரி ... | ... | ... | ... | ... | ... | கொஞ்ச அளவுதான் கிடைக்கும். |
| சோளம் (இருங்கு தினுசு) ... | . . | ... | 10 | 28.7 | ... | ... |
| பருத்தி (கம்போடியா தினுசு) ... | ... | ... | ... | 91.33 | ... | 10 பவுண்டுக்கு 9 பைசா. |
| பருத்தி (கருங்கண்ணி தினுசு) ... | ... | ... | ... | 24.7 | ... | 247 பவுண் கொண்ட பெட்டி ரூ. 10. |
| காராமணி (அமெரிக்கா) தினுசு ... | ... | ... | ... | ... | ... | கொஞ்ச அளவு கிடைக்கும். |
| கம்பு (தென் ஆற்காடு உள்ளூர் தினுசு) | ... | ... | 8 | 24 | ... | ... |
| கம்பு (திருநெல்வேலி தினுசு) ... | ... | ... | 8 | 24 | ... | ... |
| கம்பு திரான்சுவால்நீளக்கதிருள்ளவை | ... | ... | 8 | 30 | ... | ... |
| கம்பு ( ஷை குள்ளக் கதிருள்ளவை) | ... | ... | 8 | 30 | ... | ... |
| தயின்சா (வங்காள தினுசு) .. | | ... | $2\frac{2}{3}$ | ... | ... | பட்டணம் படி ஒன்று 6 அணா. |
| ஷை (உள்நாட்டு தினுசு) ... | ... | ... | $2\frac{2}{7}$ | ... | ... | பட்டணம் படி ஒன்று 7 அணா. |
| இஞ்சி ... | ... | ... | ... | 10 | ஜன | ... |
| நிலக்கடலை உள்நாட்டுமொரீஷஸ் ... | ... | ... | 10 | 15 | ... | நீர் பாய்ச்சியும், மழை பெய்தும் பயிர் செய்யவும் ஷை விதைகள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன. |
| ஷை (செனிகல் தினுசு) ... | ... | ... | 10 | 15 | ... | |
| ஷை (மடகாஸ்கர்) ... | ... | ... | 10 | 15 | ... | |
| கினியாபுல்வேர் ... | ... | ... | ... | ... | ... | சொற்ப அளவு இனாமாகக் கொடுக்கப்படும். |
| கொளிஞ்சி ... | ... | ... | 8 | 24 | ... | ... |
| மக்காச்சோளம் ... | ... | ... | 5 | 16 | ... | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பிரேசில் மக்காச்சோளம் ... | ... | ... | 5 | 16 | ... | ... |
| ஈரவெங்காயம் (தென் ஆற்காடு விதை) | ... | ... | விலை மாறகூடியது. | ... ... | ... ... | 2 பவுண்டு பட்டணம் வீசை கொண்டதின் விலை ரூ 1-8-0 யிலிருந்து ரூ 5 வரை. |
| நெல் (பங்கு தினுசு) ... | ... | 4, 4½ மீ | 10 | 25 | ... | ... |
| ஷை (ராஸ்கடம் தினுசு) ... | ... | 3 மீ | 8 | 20 | ... | ... |
| ஷை (சப்பல்பூர் தினுசு) ... | ... | 3½ மீ | 10 | 25 | ... | ... |
| ஷை (சொர்னவாரி தினுசு) ... | ... | 3 மீ | 10 | 25 | ... | ... |
| ஷை கருடன் சம்பாதினுசு ... | ... | 5½, 6 மீ | 10 | 25 | ... | ... |
| ஷை (மிளகு சம்பாதினுசு) ... | ... | 3,5½ | 10 | 25 | ... | ... |
| ஷை (துய்யமல்லி தினுசு) ... | ... | ஷை | 10 | 25 | ... | ... |
| ஷை வெள்ளை சிருமணி தினுசு ... | ... | ஷை | 10 | 25 | ... | ... |
| ஷை (சிகப்புச் சிருமணி தினுசு) ... | ... | ஷை | 10 | 25 | ... | ... |
| ஷை சடைச்சம்பா (தென் ஆற்காடு தினுசு) ... | ... | 5 மீ | 10 | 25 | ... | ... ... |
| ஷை (கேயமா தினுசு) ... | ... | ஷை | 10 | 25 | ... | ... |
| ஷை (தவளகண்ணன் தினுசு) ... | ... | ஷை | 10 | 25 | ... | ... |
| ஷை (ஜீரகேசலா தினுசு) ... | ... | 6 மீ | 10 | 25 | ... | ... |
| கேள்வரகு (தென் ஆற்காடு உள்நாடு) ... | ... | .. | 8 | 24 | ... | ... |
| ஷை (திருநெல்வேலி உள்நாட்டு) ... | ... | ... | 8 | 24 | ... | ... |
| ஷை மைசூர் தினுசு ... | ... | ... | 8 | 24 | ... | ... |
| ஷை (60 நாள் தினுசு) ... | ... | ... | 8 | 24 | ... | ... |
| கரும்பு (மொரீஷஸ் சிகப்பு) ... | ... | ... | 1000 விதை ரூ. 3. | ... ... ... | பிப்ர ஏப்ரி ... | ... ... ... |
| ஷை (மொரீஷஸ் சாம்பல்தினுசு) ... | ... | ... | | | | |
| ஷை பார்படாஸ் 208 ... | ... | ... | | | | |
| சனல் ... | ... | ... | 5⅓ | ... | ... | .. |
| தினை (தென் ஆற்காடு உள்நாடு) ... | ... | ... | 8 | 24 | ... | ... |
| | | ... | | | | |
| கோயம்புத்தூர் சென்ட்ரல் பாரம். | ... | ... | | | ... ... | ... ... |
| சோளம் (தலைவிரிச்சான் தினுசு) ... | ஜூன் கடசி | 5 மீ | 8 | 25 | | |
| ஷை (அமெரிக்கா தினுசுகள்) ... | | | | | | கொஞ்ச அளவுதான் கிடைக்கும். |
| ஷை ரெட்காப்பிர் .. | ஜூலை | ஷை | ... | ... | ... | ... |
| ஷை (புளிப்பில்லாதது) ... | ,, | ஷை | ... | ... | ... | ... |
| ஷை (வெள்ளைக்காப்பிர்) | ,, | ஷை | ... | | | ... |
| நெல் (ரதை சம்பாதினுசு) ... | ,, | 4,5 மீ | 8 | 20 | ... | ... |
| ஷை (சின்னசம்பா தினுசு) ... | ,, | ... | 8 | 20 | ... | ... |
| ஷை (தர்ப்பசன்ன அக்குல்லு) .. | ,, | 4½ மீ | 8 | 18 | ... | ... |
| காராமணி அமெரிக்கா புலி காராமணி | செப் | 4 மீ | 4 | 13 | .. | ... |
| சணல் (பச்சிலை எருவுக்கு) .. | ஏப்பிமே | 2,3 மீ | 5 | 16 | ... | ... |

நோட்டு 1. மேலே கூறப்பட்டுள்ள விலைகள் அறிக்கையில்லாமலே மாற்றப்படும்.

நோட்டு 2. ஜனங்கள் தங்களுக்கு விதைகள் வேண்டுமென்றால் திருச்சினாப்பள்ளி, தெற்கு டிவிஷன் டிபுடி டைரெக்டர் ஆப் அக்ரிகல்சேர் அவர்களுக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம். கோயம்பத்தூர் சென்டரல் பாரத்தில் கிடைக்கக்கூடிய விதைகள் கோயம்பத்தூர் விவஸாய காலேஜ் ப்ரின்ஸிபல்லுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜீ. ஏ. டி. ஸ்டூவர்ட், ஆக்டிங் டைரெக்டர் ஆப் அக்ரிகல்சர்.

# AGRICULTURE.

## விவஸாயம்.

### Grass and Fruit Trees.

புல்லும் பழ மரங்களும்.—ப்ரஷ்யா தேசத்தில் ஸமீபத்தில் கதே என்பவருடைய தோட்டத்தில் சில பழ மரங்கள் அடர்ந்த புல்லின் மத்தியில் நன்றாய் வளராமலிருந்தன. இரண்டு மரங்களை வேரோடு பறித்துப் பார்த்ததில் அவைகளின் வேர்கள் வளாராமல் அதிக ஆழமாய் பூமியில் பரவவில்லை. வேர்களில் சில கொஞ்சம் கறுப்பாகவும் இருந்தன. பக்கத்து நிலத்தில் அதே மாதிரி பழமரம் ஒன்று அதே விதமான நிலத்தில் கொழுமையாய் வளர்ந்திருந்தது. இரண்டாவது சொன்ன மரம் முன் மரங்களின் ஜாதியே. அதே வயதுங்கூட. இரண்டு நிலங்களும் ஒரே மாதிரி. ஆனால் நன்றாயிருந்த மரத்தடியிலுள்ள நிலம் நன்றாய் உழுது களையெடுக்கப்பட்டிருந்தது. இதனால் கதே என்பவர் முதல் சொன்ன மரம் புல்களினால் அடிபட்டுப் போய்விட்டதென்று சொல்லுகிறார். ஆகையினால் பழ மரங்களைச்சுற்றி புல்களை வளரவிடக்கூடாது.

### Farmyard Manure.

தொழு எரு.—இந்த எரு பொதுவாய் எல்லாப் பயிர்களுக்கும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் அதை முதல்தர எருஎன்று சொல்லமுடியாது. ஏனென்றால் அதில் பயிருக்கு வேண்டிய உணவு பதார்த்தங்கள் சிற்சில கூடவும் குறையவுமாக இருக்கின்றன. சில பூமிகளுக்கு "பொடாஷ்" என்னும் சாம்பல் காரம் அவ்வளவு ஜாஸ்தியாய் வேண்டியதில்லை. ஆனால் மாட்டுச்சாணியிலோ "பொடாஷ்" ரொம்ப ஜாஸ்தியாயிருக்கிறது. ஆகையினால் பயிருக்குத் தகுந்தபடி தொழு எருவோடு வெவ்வேறு உரமுங்கலந்து போடவேண்டியது அவசியம்.

### Fish Guano.

மீன் உரம்.—மலையாளக் கடற்கரையில் மீன் உரம் தயாரித்து வருகிறார்கள். இது எப்படி செய்யப்படுகிறதென்றால், மீனைப் பிடித்து அதிலிருந்து எண்ணெயை இறக்கிவிட்ட பிறகு பாக்கியிருக்கும் பதார்த்தமே மீன் எரு. பச்சை மீனை எடுத்து தண்ணீரை வற்றப்பண்ணி அதைப் பொடிசெய்வது 1862-ல் லோஹார்ட் என்பவர் கண்டு பிடித்தார். இதே பிரகாரமே மலையாளத்திலும் செய்துவருகிறார்கள்.

### Single Planting of Paddy.

ஒற்றை நெல் நடவு.—ஒற்றை நெல் நடவு எல்லா நிலத்திலும் பிடிப்பதில்லை என்று வெ. ப. திருமலையப்ப முதலியார், எழுதுகிறார். 1 ஏக்கர் 800-பட்டணம் படிக்குக் குறையாமல் தானியம் ஸாதாரணமாய்க் காணுமாகில் மட்டும் ஒற்றை நெல் நடவு கிளை வெடித்து அதிக தூர் கட்டி தக்க பலனளிக்கிறதாம். 800 பட்டணம்படிக்கிறங்கி தானியங் காணுமேயாகில் 3-4 நெல் ஒன்றாகவைத்துநடுவதே கப்புங்கவறுங் கிளைத்து பலனளிக்கிறது. இந்த நிலத்தில் ஒற்றை நெல் அதிகமாய்க் கிளைப்பதில்லை. சில ஸமயம் பயிர் அழன்றும் போகிறதாம்.

### Area Cultivated.

ஸாகுபடி விஸ்தீரணம்.—1320-ம் பஸலியில் ராஜதானி முழுவதிலும் ஸுமார் 38,085,000 ஏக்கர் விஸ்தீரணம் ஸாகுபடியாயிற்று. அதில் நெல் 10,754,010 ஏக்கரும், சோளம் 5,175,224 ஏக்கரும், கம்பு 3,920,586 ஏக்கரும், கேழ்வரகு, 2,489,331 ஏக்கரும், எள் 815,100 ஏக்கரும், வேர்க்கடலை 934,135 ஏக்கரும், ஆமணக்கு 97,823 ஏக்கரும், கரும்பு 94,879 ஏக்கரும், பருத்தி 2,317,045 ஏக்கரும், அவுரி, 81,464, ஏக்கரும், புகையிலை 218,315 ஏக்கரும் ஸாகுபடியாயின.

### Foot and Mouth Disease of cattle.

மாட்டுக் கோமாரி நோய்.—மாடுகளின் வாயில் ஒருவித ரணம் உண்டாகி அவைகள் ஆகாரம் எடுத்துக்கொள்ள முடியாமல் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு வருந்தி திடீரென்று மரித்துப்போகின்றன. அதற்கு கோமாரி நோய் என்கிறார்கள். இங்கிலாந்தில் இது அதிகரித்துவிட்டதின்பேரில் இப்போது ஒரு கமிஷன் நியமித்து அதன் காரணத்தையும் அது உண்டாகும் வழியையும் ஆராய இங்கிலாந்தில் ஏற்பாடாயிருக்கிறது. சாஸ்திர நிபுணர்கள் அடங்கிய ஷை கமிஷன் இந்தியாவுக்கும் வந்து போகும்.

### Madras Agricultural Experts.

சென்னை விவஸாய நிபுணர்கள்.—சென்னைவிவஸாய நிபுணர்கள் ஸர்க்கார் பிரசுரங்களில் ஒவ்வொரு ஸமயம் ஒவ்வொரு பேர் கொடுத்து அழைக்கப்படுகிறார்களென்றும், அவர்கள் எப்போதும் குறிப்பிட்ட

ஒரு பேரால் அழைக்கப்பட்டால் நலமாயிருக்கு மென்றும் ரெவினியூ போர்டார் கவர்ன்மெண்டாருக் கெடுத்துக்காட்ட, கவர்ன்மெண்டார் சென்னை விவஸாய நிபுணர்கள் கவர்ன்மெண்ட் அக்ரிகல்சரல் கெமிஸ்ட் (விவஸாய ரஸாயண சாஸ்திரி), கவர்ன்மெண்ட் மைகாலஜிஸ்ட் (காளான் நிபுணர்), கவர்ன்மெண்ட் எண்டமாலஜிஸ்ட் (பூச்சி நிபுணர்), கவர்ன்மெண்ட் பாடனிஸ்ட் (தாவர சாஸ்திரி), என்று ஒரே மாதிரிப் போரால் அழைக்கப்பட வேண்டுமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள்.

**Experiments in Paddy Culture**

**நெல்பயிர் செய்வதில் சில பரீட்சைகள்.**—மைஸூர் விவஸாய டிபார்ட்மெண்டார் நெல்லில் பரீட்சைகள் செய்ததில் பின்வரும் விஷயங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

1. நெல் ஸாகுபடி அறுவடையான பிறகு வயலை உடனே உழுவதைக்காட்டிலும் தாளைவிட்டு வைத்து, பிறகு நடுவதற்கு முன் தண்ணீரைப் பாய்ச்சி உழுவதுதான் நலம்.

2. ஆழ உழுவது மேல் உழவைக்காட்டிலும் எப்பொழுதும் ஒரே விதமாக ப்ரயோஜனமாகவில்லை.

3. நெல் ஸாகுபடியில் பச்சை உரமிடல் மிகப்பிரயோஜனத்தைத் தரத்தக்கது. நெல் ஸாகுபடி செய்வதில் அறுவடைக்கு 10, 15 நாளுக்கு முன்னேயே பச்சைத்தழை விதைகளை விதைக்கவேண்டும். ஸன் ஹெம்பு என்னும் சணலும் காராமணியும் பச்சை உரத்திற்குத் திறமானவைகள்.

4. ஆமணக்குப் பிண்ணாக்கை உரமாய் உபயோகப்படுத்துவதால் செலவு அதிகரிக்கிறது. ஆமணக்குப் பிண்ணாக்கை பச்சையுரம் முதலிய உரங்களோடு சேர்த்து உபயோகப்படுத்துவது நலம்.

5. வெடியுப்பை உபயோகிப்பதால் அதிக லாபமொன்றும் கிடைக்கவில்லை. அதனல் நஷ்டமே ஆயிற்று.

6. செயற்கை உரங்களை உபயோகிப்பதால் அதிக மாஸூல் கிடைத்தபோதிலும் அதற்குப் பிடிக்கும் அதிகச் செலவால் மொத்தத்தில் நஷ்டமே ஏற்படுகிறது.

7. பொதுவாய், இந்திரிய வஸ்துக்களும் நைட்ரொஜனும் ஜாஸ்தியாயுள்ள உரங்கள் மற்றெல்லாவற்றையும் காட்டிலும் சிறந்தவைகள். ஒன்றும் தெரியாதவர்கள்தான் ரஸாயன எரு விசேஷ மென்பார்கள். இது விலை ரொம்ப கிராக்கி. எலும்புத்தூளை எருவாகப் போட்டுப் பார்க்கலாம்.

**A Sugar Cane Experiment.**

**கரும்புப் பயிர் சோதனை.**—கோயமுத்தூர் விவஸாய காலேஜுக்கும், ஆராய்ச்சி ஸ்தாபனத்திற்கும் பக்கத்தில் பல தேசத்துக் கரும்புகளைக் கொண்டுவந்து அவ்வூர் பூஸாரத்திற்குப் பொருந்தும்படி அவைகளைப் பயிராக்குவதற்காகவும், கட்டிடம் முதலிய செலவுகளின் பொருட்டும், இரண்டு லட்சத்து இருபத்தையாயிரம் ரூபாயைச் செலவுசெய்ய கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். பங்களா வசதியுடன் மாதம் ஒன்றுக்கு 1800 ரூபாய் சம்பளங் கொடுத்து சென்னைக் கவர்ன்மெண்டின் பொருளாதார தாவர சாஸ்திர நிபுணரான டாக்டர் வி. ஏ. பார்பரை அதன் மேல்விசாரணைக் கர்த்தராக நியமித்திருக்கிறார்கள்.

ஸெண்ட்ரல் விவஸாயப் பண்ணை ஸ்தாபனமான நாள் முதல், சோதனைப் பயிர் செய்வதற்காக சில துண்டு பூமிகளில், மொரீஷியஸ் சிவப்புக் கரும்புக் கழி, மொரீஷியஸ் மற்றொரு ஜாதிக்கழி, 208-ம் நெம்பர் பார்படோஸ் கரும்புக்கழி, இவைகளை நட்டு, தகுந்த எருப் போட்டு, ஸாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. சென்ற வருஷம் விஸ்தாரமான பூமியில் மேற்கண்ட கரும்புக்கழிகள் பயிராக்கப்பட்டன. அப்பயிர்களை, மாதந்தோறும் கோயமுத்தூர் விவஸாய சங்கத்தின் மெம்பர்கள் சென்று சோதனை செய்ததில், அவைகள் சிறப்பாகத் தழைத்தோங்கி வளர்ந்து வந்ததைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கரும்புகள் ஆலையில் கொடுத்து நசுக்கப்படும்பொழுது அவ்வூரிலுள்ள பல ரயித்துகள் அவ்விடத்திற்கு வந்து கரும்புஆலையிற்கொடுத்து நசுக்கப்படுவதும், சாறு பிழியப்படுவதும், அது கொப்பறைக்குக் கொண்டு போகப்பட்டுக் காய்ச்சி வெல்லம் சர்க்கரை முதலியவைகள் உண்டாகப்படுவதுமான நூதனமுறைகளைக் கவனித்துப்பார்த்து, அம்முறைகளைத் தாமும் தங்களுடைய ஸொந்தப் பண்ணைகளில் கையாடி வருகிறார்கள். மேற்கண்ட சாலை ஸ்தாபனப்படுவதுடன் சிங்க நல்லூருக்கு ஸமீபத்தில் கரும்புக் கழிகளை ஆலையிற் கொடுத்துச் சாறுகப்பிழிந்து வெல்லம் செய்ய யந்திரசாலை ஒன்று ஸ்தாபனம் செய்யப்பட்டு, வேலை நடந்தேறி வருகிறதாகையால் விவஸாய இலாகாவும சர்க்கரைத் தொழிலும் செழித்தோங்கும் என்பதில் ஸந்தேகமில்லை.

# COMMERCE.
## வியாபாரம்.

### Sugar in India.

இந்தியாவில் சர்க்கரை.—இந்தியாவின் வியாபாரக் குறிப்புகளிலிருந்து 1911-12ளூத்தில் இத்தேசத்தில் உண்டுபண்ணப்பட்ட சர்க்கரை 3,00,000 டன்கள் என்றும், இறக்குமதியான சர்க்கரை 4,13,400 டன்கள் என்றும் தெரியவருகிறது. ஆகையால் இவ்வுலகில் சர்க்கரை ஏராளமாய் உண்டுபண்ணப்படுவதும், இறக்குமதி செய்யப்படுவதும்! நம்மிந்தியாவிலேதான். ஜாவா, மோரீஷ் என்ற இடங்களிலிருந்து தான் நமக்கு சர்க்கரை வருகிறது. ஐரோப்பாவில் "பீட்" என்ற ஒரு வகைக் கிழங்கிலிருந்து சர்க்கரை எடுக்கிறார்கள். இந்தியர்களுக்கு இந்த சர்க்கரை பிடிப்பதில்லை. நமக்கு வரும் சர்க்கரை கரும்பிலிருந்து எடுக்கப்படுகிறது. 1902-1903 முதல் இந்தியாவில் இறக்குமதி யாகிவந்த சர்க்கரை இப்பொழுதுதான் முதல் தடவையாகக் குறைந்திருக்கிறது. 119.88 லட்சம் பெறுமானமுள்ள 23,97,313 அந்தர் குறைந்துபோயிருக்கிது. இந்தியா தனக்குத்தானே சர்க்கரை செய்துகொள்ளும் பொருட்டு பாடுபட்டுவருபவர்களுக்கு மேற்கூறியது சந்தோஷத்தையும் தைரியத்தையும் விளைவிக்கும். இப்பொழுது கரும்பும், சர்க்கரை செய்யும் விதமும் உயர்தரமாயில்லாததனால் ஏராளமாய் சர்க்கரை உண்டுபண்ண முடியவில்லை. சர்க்கரை தின்பது இப்பொழுது ஒரு மனிதனுக்கு 1.96 ராத்தலிலிருந்து 6.79 ராத்தலுக்கு அதிகரித்திருப்பதால் சர்க்கரைத் தொழில் நன்றாய் விருத்தியடைய இடமுண்டாயிருக்கிறது.

### Business Enterprise in India.

இந்தியாவில் வியாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற ஜூலை மாஸத்தில் அடியில்கண்ட விவரப்படி 24 கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன. இதைக்கொண்டு இந்தியாவில் அந்த மாஸத்தில் வியாபார ஊக்கம் எவ்வள விருந்ததென்று தெரிந்து கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 2 | பாங்கிகளும் கடன் கொடுக்கும் கம்பெனிகளும் ... | 40,00,000 |
| 5 | இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் ... | 6,60,000 |
| 1 | அச்சிடுவதற்கும் பிரசுரங்கள் செய்வதற்குமான கம்பெனி ... | 10,000 |
| 12 | வியாபாரக்கம்பெனிகள் (மேற்சொன்னவைகளைத்தவிர) ... | 22,15,000 |
| 1 | அரிசிமில் கம்பெனி ... | 25,000 |
| 1 | தேயிலை ஸாகுபடி கம்பெனி ... | 10,00,000 |
| 2 | ஸாகுபடி செய்வதற்கான கம்பெனிகள் (மேற்சொன்னவைகளைத்தவிர) ... | 15,75,000 |
| 14 | மொத்தம்... | 94,85,000 |

### English Exports.

இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதி.—இங்கிலாந்திலிருந்து அன்னிய தேசங்களுக்கு ஏற்றுமதியாகும் சரக்குகளின் மதிப்பு பின்வருமாறு.

| | பவுன். |
|---|---|
| இந்தியா | 522,46,000 |
| ஜெர்மனி | 392,84,000 |
| ஆஸ்திரேலியா | 308,81,000 |
| யுனைடெட் ஸ்டேட்ஸ் | 275,19,000 |
| ப்ரான்ஸ் | 242,83,000 |
| தென் ஆப்பிரிக்கன் யூனியன் | 201,80,000 |
| கனடா | 197,15,000 |
| அர்ஜெண்டைன் | 186,02,000 |
| ருஷியா | 135,15,000 |
| இத்தாலி | 132,12,000 |
| ஹாலந்து | 131,12,000 |
| சீனு | 121,32,000 |
| ப்ரேஜில் | 119,38,000 |
| ஜப்பான் | 118,69,000 |
| பெல்ஜியம் | 113,73,000 |
| ஈஜிப்ட் | 103,00,000 |
| நியுஜீலாந்து | 98,09,000 |
| துருக்கி | 93,96,000 |
| ஸ்வீடன் | 63,47,000 |
| சிலி | 61,39,000 |

மேற்கண்ட அட்டவணையினால், இந்தியாவானது இங்கிலாந்துக்கு அதிக தூரத்திலிருந்தும் இங்கிலாந்து தேசத்துச் சரக்குகளை அதிகமாக வரவழைத்துக் கொள்ளுகிறது என்பதாகத் தெரிகிறது. இங்கிலாந்துடன் போட்டிபோட்டு வியாபாரஞ்செய்யும் ஜெர்மனி தேசமானது இங்கிலாந்திலிருந்து சரக்குகளை வரவழைத்துக் கொள்ளுவதில் இந்தியாவுக்கு இரண்டாவதாக இருக்கிறது என்பதை கவனிக்கவேண்டியது. சொற்ப ஜனத்தொகையுள்ள ஆஸ்திரேலியா கண்டம் மூன்றாவதாக இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

# INDUSTRY.
## கைத்தொழில்.

**Wood Pulp.**

மரச்சோறு—மரத்தைத் துண்டு துண்டாய் நறுக்கி அறைத்து மசியலாக்கி அந்த மசியலைக் கொண்டு காகிதம் செய்கிறார்கள். அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் வருஷமொன்றுக்குச் செலவாகிற மரச்சோறு 8,00,000 டன். ஜெர்மெனியில் 2,00,000 டன். கனடாவில் 1,00,000 டன். ஸ்வீடனில் 1,00,000 டன். ருஷியாவில் 2,50,000 டன்.

**The Cigarette Industry.**

ஸிகரெட் செய்யும் தொழில்.—ஸிகரெட் உபயோகித்தலும் காப்பி பருகுதலும் இப்போது வெகு ஸகஜமாகி விட்டன. இதில் ஸிகரெட்டுகள் அமெரிக்கா முதலிய அன்னிய நாடுகளிலிருந்து பிரதி வருஷமும் எத்தனையோ லட்சம் ரூபாய் போல இங்கு இறக்குமதியாகிக்கொண்டிருக்கின்றன. மாங்கிர் என்ற நகரம் கங்கைக் கரையிலுள்ளது. இங்கு இந்தியரால் ஸ்தாபிதமாயுள்ள ஸிகரெட் தொழிற்சாலையில் சென்ற வருஷம் நாற்பதினாயிரம் பெட்டிகள் தயாரிக்கப் பட்டன. ஒவ்வொரு பெட்டியிலும் ஐம்பதாயிரம் ஸிகரெட்டுகள் அடக்கம் செய்யப்பட்டன. நம்மிந்தியர்கள் காலத்திற் கேற்றதுபோல நடை யுடை பாவனைகளிலும் மாறிக்கொண்டு வருகிறார்கள். அதைப் போலவே புது முறையான தொழில்களைத் தெரிந்தெடுத்து அவற்றைக் கையாண்டு வர்த்தகாபி விருத்தியை நாடி அதனால் க்ஷேமப்படப்பார்ப்பதே காலத்திற் கேற்ற யுக்தியாகும்.

**Fruit Industries.**

பழக் கைத்தொழில்.—ஆஸ்திரேலியா கவர்ன்மெண்டார் "முற்றம் பிர்ட்ஜ்" என்னும் ஊருக்கு ஸமீபத்திலுண்டாகும் பழங்களைவாங்கி அவைகளை தோல் உரித்து, டப்பிகளில் அடைத்து, ரொம்பநாள் இருக்கும்படியான பண்டங்களாக செய்யப்போகிறார்கள். முதல் முதல் இத்தொழில் அவ்வூர் விவஸாய டிபார்ட்மெண்டாரால் நடத்தப்பட்டுவரும். பின்பு ஜனங்கள் கையிலேயே ஒப்புவித்து விடுவார்கள். இதேமாதிரி நமது கவர்ன்மெண்டார் ஏன் செய்யக் கூடாது?

**Some Industries for India.**

இந்தியாவிற்கு சில கைத்தொழில்கள்.—"பயோனியர்" என்னும் பத்திரிகை இத்தேசத்தில் புதுக் கைத்தொழில்கள் உண்டுபண்ண முடியுமென்றும் அவை இன்னின்னவைகளென்றும் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறது.

சுதேசி, சுதேசியம் என்று இந்நாட்டு ஜனங்கள் வாய்சலிக்கப் பேசுகிறார்களேயொழிய காரியத்தில் ஒன்றுமில்லை. இந்தியா நூற்றுக்கணக்கான வருஷங்களாக இரும்புக்கத்தி வகைராக்கள்செய்து கொண்டு வந்தபோதிலும் சென்றவருஷத்தில் மொத்த இறக்குமதியில் நூற்றில் 13.4 பாகம் கத்தி முதலியவைகள். மற்ற தேசங்களெல்லாம் முன்னே ஓட நாம் மட்டும் அதே இடத்திலேயே நின்றுகொண்டிருக்கிறோம். ஆனாலோ இந்தியாவில் இந்தத்தொழில் விருத்தியாக ரொம்ப இடமிருக்கிறது. அப்படி ஆவதற்குத் தக்க மனிதர்கள்தான் தேவை.

செம்பு விலை ஜாஸ்தியாகும்போது இந்தியாவில் இனாமல் பாத்திரங்கள் ஜாஸ்தியாய் இறக்குமதியாகின்றன. இப்படி போனவருஷம் நூற்றுக்கு 328. பங்கு அதிகமாக இறக்குமதியாயிருக்கின்றன. இனாமல் ஸாமான்கள் ஆஸ்திரியா ஹங்கேரி என்னும் தேசங்களில் செய்யப்பட்டு இத்தேசத்திற்கு அனுப்பப்பட்டுவருகின்றன. இந்த ஸாமான்கள் செய்வது பெரியவித்தை ஒன்றுமில்லையாதலால் இந்தத் தொழிலும் இந்தியாவில் செய்யத்தக்கது.

இதேமாதிரிதான் இரும்பு எஃகு வியாபாரமும். இது போனவருஷத்தில் மொத்த இறக்குமதியில் நூற்றுக்கு 7.3 பங்கு ஆகிறது. ஆனால் டாடா இரும்புச்சாலைகள் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறபடியால் இனிமேல் இரும்பு இறக்குமதி குறைய வேண்டும். டாடா இரும்புச்சாலை இந்தியாவில் இதுவரையிலும் ஏற்படுத்தப்பட்ட கைத்தொழில்கள் எல்லாவற்றைக்காட்டிலும் மிகப்பெரியது.

**The Tata Silk Farm.**

டாடா பட்டுப்பண்ணை.—பெங்களூரில் ரக்ஷணிய ஸைனியத்தாரால் நடத்தப்படுகிற டாடா பட்டுப்பண்ணையிலிருந்து ஒரு பேல் பட்டு லண்டன் பட்டுக்காட்சியில் வைக்கப்பட்டது. லண்டனிலுள்ள ராயல் பட்டுச் சங்கத்தார் பெங்களூரிலிருந்து வந்த பட்டை அந்தப் பொருட்

காட்சிக்கு வந்த அனைவரும் அக்கரையாய்க் கவனித்தார்களென்று புகழ்ந்து எழுதியிருக்கிறார்கள். ராஜ தம்பதிகளும் ராஜகுடும்பத்தைச்சேர்ந்த மற்றவரும் அந்தப்பட்டைப் பிரியமாய்ப் பார்த்தார்கள். அந்தப் பட்டு ஐரோப்பாவில் நன்றாய் விலையாகுமென்றும், பட்டுக்குப் பேர்போன இட்டலி அல்லது ப்ரான்ஸ் தேசத்திலுள்ள பட்டு நூற்காரரிடம் பெங்களூர் பண்ணையிலிருந்து பட்டை நூற்காமல் அப்படியே யெடுத்து அனுப்பவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்களாம்.

## ECONOMICS.

## பொருளாதாரம்.

### Some Census Statistics.

சில ஜனகணிதக் குறிப்புகள்.—கல்கத்தாவைச் சுற்றியுமுள்ள சேரிகளிலும் ஹௌராவிலும் 10-லக்ஷம் ஜனங்களிருக்கிறார்கள். இது முன் ஸென்ஸஸை விட 100-க்கு 10 ஜனங்கள் அதிகமாகிறது. பம்பாயிலும் 10-லக்ஷம் ஜனங்களே. அங்கு முன்ஸென்ஸஸைவிட 100-க்கு 26 ஜனங்கள் அதிக மென்ன வேண்டும். ஹைதிராபாத்தில் 100-க்கு 12-அதிகம். ரங்கூனில் 19 அதிகம். சென்னையிலோ அதிகமுமில்லை குறைவுமில்லை. கராச்சியில் 30-அதிகம். டாக்காவில் 21 அதிகம். ஹிந்துக்கள் மொத்த ஜனத்தொகையில் 100 க்கு 19-பங்கு இருக்கிறார்கள். இவர்களில் அதிக விருத்தியைக் காணோம். இதற்கு சிசுமரணமும் விதவாவிவாஹமின்மையும் காரணங்களாம். கிறிஸ்தவர்கள் இப்பொழுது 40 லக்ஷம் பேர் இருக்கிறார்கள். 10 வருஷம் முன் 30-லக்ஷமே இருந்தார்கள். 10-வருஷத்துக்கு முன் 1000 ஜனங்களில் 98-ஆணும் 7 பெண்ணுமே படிக்கத்தெரிந்தவர்களாயிருந்தார்கள். இப்பொழுது 1000 த்திற்கு 106 ஆணும் 77-பெண்ணும் படிக்கக் கூடியவர்களாயிருக்கிறார்கள். லக்ஷம் ஜனங்களுக்கு 26-பேர் பித்தர்களாயும், 64-பேர் செவிட்டு ஊமைகளாயும், 142-பேர் குருடர்களாயும், 35 பேர் பெரு வியாதிக்காரராயு மிருக்கிறார்கள்.

### The Cotton Excise Duty.

பருத்தி ஸாமான்களுக்கு தீர்வை.—லாகூர் ப்ரொபெஸர் பீ. ஜீ. ஷா என்பவர் இந்தியாவில் செய்யப்படும் பருத்தி ஸாமான்களின்மேல் போட்டிருக்கும் தீர்வையைப் பற்றி எழுதியிருக்கிறார். பருத்தி ஆலைகள் ஜாஸ்தியாகிக் கொண்டு வருவதையும், அந்தத் தொழிலில் முதலாளிகள் ஜாஸ்தியாய்ச் சேருவதையும் பார்த்து பருத்திஸாமான்களுக்கு தீர்வை போடுவதால், அந்தத்தொழில் வளர்ச்சி குறைந்ததாகத் தெரியவில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். இருந்தாலும் தீர்வைபோடா திருந்த பட்சத்தில் தொழில் வளமையானது, இப்போது தீர்வை போட்டிருந்தும் இருக்கிற நிலைமையைக்காட்டிலும் சீக்கிரமாயும், திறமையாயுமிருக்கக்கூடு மென்பதில் ஸந்தேகமில்லை. சில பருத்தி ஸாமான்களின்மேல் போட்டிருக்கும் தீர்வைகளை யாதொரு தடையுமில்லாமல் வஜா செய்துவிடலாம். இந்தியாவில், இந்தியரானாலும் ஸரி, வெள்ளைக்காரரானாலும் ஸரி, இப்பேர்ப்பட்ட தீர்வைகள் விதித்திருப்பது கேவலம் அனாவசிய மென்றும், மான்சஸ்டர் துணிகள் வியாபாரம் அபிவிருத்தியாவதற்கே வழியென்றும், எண்ணி வருகிறார்கள். இதுவிஷயமாக ராஜநீதியைப்பற்றி இங்கே பேசவில்லை. இந்தமாதிரி தேசத்தில் உற்பத்தியாகும் ஸாமான்களின்மேல் போடும் தீர்வைகள் லோகாசாரத்துக்கே விரோதமாயிருக்கின்றன. இங்கிலாந்தில், ஏற்றுமதியானாலும் ஸரி, இறக்குமதியானாலும் ஸரி, வரியே விதிக்கக்கூடாது என்று ஒரு பகுதி வியாபாரிகள் சொல்லுகிறார்கள். அவர்கள் தாத்பரியம் என்னவென்றால் இந்த மாதிரியாகத் தங்கள் தேச வியாபார ரக்ஷணைக்காகவென்று அயல்நாட்டு ஸாமான்களின்மேல் அயல் நாட்டார் வரி விதிக்கும் ரீதியானது அந்ததேசத்துக்கே கெடுதியை விளைவிக்கும் என்பதே. இந்த மாதிரியான யுக்திகளெல்லாம் இங்கிலாந்தில் நடவாது. இப்படி அவர்கள் சொல்லி வந்தாலும், எந்தமாதிரியான வரிகளையும் விதிப்பது பிசகு என்று சொல்லும் லாங்காஷயரிலுள்ள தறிக்காரர்களும் நெசவுக்காரர்களும் தங்கள் சரக்குகள் இந்தியாவிற்கு ஏற்றுமதியானால் இந்தியாவில் ராஜாங்கச் செலவுக்காக நூற்றுக்கு மூன்றரைக்குமேல் வரிவிதிக்கா வண்ணமும், அதே ஸமயத்தில் இந்தியாவில் செய்யப்படும். ஸ்வதேச சரக்குகளின்மேலும் விதித்திருக்கும் வரி குறையாமல் போட்டு வரவும், ரொம்பவும் தகுந்தஜாக்கிரதை எடுத்துவருகிறார்கள். இந்தமாதிரி ஸ்வதேச உற்பத்தி சரக்குகளின்மேல் வரி விதிப்பது அனாவசியமுமன்றி, தகுதியானதுமன்று.

# CO-OPERATION.
# கோவாபரேஷன்.

### Co-operative Credit.

ஐக்கியநாணயம்.—இங்கிலாந்தில் இப்பொழுது 44 ஐக்கியநாணயச் சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன. 1910-ம் வருஷத்தில் 31 ஸொஸைட்டிகள் ரிப்போர்ட்டு அனுப்பின. இவைகளில் 663 மெம்பர்கள் இருந்தார்கள். மொத்த முதல் 663 பவுன். 5 முதல் 6 வரையிலும் கடன்கள் பேரில் வட்டி வாங்கினார்கள்.

### Agricultural Co-operation.

விவஸாய கோவாபரேஷன்.—ஐக்கியநாணயச் சங்கங்கள் இரண்டுவித காரணங்களுக்காக ஏற்படுத்தப்பட்டன, (1) ஸ்வல்ப விவஸாயிகள் விவஸாய விஷயமாய் தங்களுக்கு வேண்டிய பணத்தை ஸ்வல்ப வட்டிக்குப் பெறவேண்டுமென்பது ஒன்று (2) ஏழை விவஸாயிகள் அனுவசியமாய் கடன்களைவாங்கி தங்களை வீணாக கெடுத்துக்கொள்ளாதபடி பாதுகாப்பது இரண்டு.

ஐக்கியநாணயச் சங்கங்களால் அநேகவித உண்மைகள் வெளிப்படுகின்றன. முதல் முதலில் ஒற்றுமையும், செட்டும், தன்காரியத்தைத் தானே பார்த்துக்கொள்ளுதலும் ஏழைத்தொழிலாளிகளுக்குள் ஏற்படுகின்றன. ப்ரொபஸர் நிக்கல்ஸன்சொல்லுகிறார்:—“இட்டாலி தேசத்தில் இச்சங்கங்கள் அதன் மெம்பர்களை குடிவழக்கத்தினின்று நீக்கி புத்தியையும் ஊக்கத்தையும் கொடுத்திருக்கிறது.” பங்காளத்திலும் இதேமாதிரி இச்சங்கங்களின் உதவியால் ஊர்களில் ஸுகாதார விருத்தியும், சில்லரைச் சண்டை சச்சரவு ஒழிதலும், பஞ்சாயத்துகளால் ஊருக்கு வேண்டியவைகள் செய்யப்பட்டுவருகிறதும், இன்னும் எவ்வளவோ ஸௌகரியங்களும் ஏற்பட்டிருக்கின்றனவாம்.

### Co-operative Conference.

ஐக்கிய நாணயக் கான்பரேன்ஸ்.—ஐக்கிய நாணயக் கான்பரென்ஸ் ஒன்று வருஷந்தோறும் கூடிவருகிறது. இந்த வருஷத்துக் கான்பரென்ஸ் ஸிம்லாவில் அக்டோபர் மாதம் 28-ந்தேதி கூடும். இந்தியா கவர்ன்மெண்ட் ரெவினியூ இலாகா ஸெக்ரெட்டேரி மிஸ்டர் மக்லாகன் அக்கிராசனம் வகிப்பார். அதற்கு எல்லா மாகாண ஐக்கிய நாணயச்சங்க ரெஜிஸ்ட்ரார்களும் வருவார்கள்.

### Tanjore District Co-operative Conference.

தஞ்சாவூர் டிஸ்ரிக்ட் கோவாபரேடிவ் கான்பரேன்ஸ்.—இந்தக் கான்பரென்ஸ் சென்ற வருஷம் நீடாமங்கலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அதற்குப் பிரஸிடெண்ட் மிஸ்டர் டி. ரங்காசாரியார். அந்தக் கான்பரென்ஸ் இந்த வருஷம் தஞ்சாவூர் நிக்கல்ஸன் டவுன் பாங்கில் அக்டோபர் மாதம் கடைசி தேதியிலாவது நவம்பர் மாதம் முதல்தேதியிலாவது கூடும். ஆனரெபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் அந்த மீட்டிங்கில் அக்கிராஸனம் வகிப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார். அந்த ஜில்லாவில் இப்போது 15 ஐக்கியநாணயச் சங்கங்கள் ஒழுங்காக நடந்துவருகின்றன.

### Sowcars' Rates of Interest

ஸாவ்கார்கள் வட்டி விகிதங்கள்.—இவை அதிகமா யிருப்பதற்கு மூன்று காரணங்களிருக்கின்றன. இவைகளில் முதலாவது, விவஸாயிகளுக்கு ஒரு வருஷத்தில் பல தடவைகளிலே பணம் வேண்டியிருக்கிறது; மேலும், அவர்களெல்லாருக்கும் பணம் தேவையாயிருப்பதோடுகூட ஏககாலத்திலே, அதாவது விதை விதைக்கும் பருவம், ஸாகுபடிசெய்யும் பருவம், கிஸ்திப்பணம் கட்டவேண்டிய கால முதலிய பருவங்களிலே அந்தப்பணத்தின் பெரும்பாகம், தேவையாயிருக்கிறது. அவர்களெல்லாருக்கும் கடன் கொடுப்பதற்குப் போதுமான பணம் ஸாவ்காரிடத்திலில்லை. ஆகவே ஸாவ்கார் தன்னுடைய பணத்தைக் கொடுக்கும்போது தனக்கு மெத்தவும் அநுகூலமான ஷரத்துக்கள் ஏற்படுத்திக் கொள்ளுகிறான். வியாபார விஷயத்திலே ஒரு ஸாமான் ஸப்ளை குறைவாயிருந்து அது அதிகமாய்த் தேவையாயிருக்கும்போது, அந்த ஸாமானின் விலையானது எப்படி அதிகமாகிறதோ, அப்படியேதான் இதுவுமிருக்கிறது.

இரண்டாவது, ஸாவ்கார் தான் கொடுத்த பணத்தைத் திரும்பப் பெறும் விஷயத்தில் ஏற்படும் கஷ்டமே இன்னொரு காரணமாகும். ஸாவ்கார் தான் கொடுத்த கடன் தொகை திரும்பி வராமல் போகிற பக்ஷத்தில் அந்த நஷ்டத்தை ஸரிப்படுத்திக்கொள்ளும்பொருட்டு வட்டி வீதத்தை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டியவனாயிருக்கிறான்.

மூன்றாவது, கடைசியாக ஸாவ்காரும் மனுஷனாகப் பிறந்தவனே; அவனும் நம்மைப்போல் ஒரு குடும்பத்தை ஆதரிக்கவேண்டியவனாயிருக்கிறான். கடன் கொடுத்துப் பணம் சம்பாதிப்பதையே அவன் முற்றிலும் நம்பியிருக்கிறான்; ஆகவே, அவன் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளப்பார்க்கிறான்.

# BANKING.

## பாங்கி வியாபாரம்.

### Savings Banks in Burma.

பர்மாவில் ஸேவிங்ஸ் பாங்கிகள்.—பர்மாவில் 271 ஸேவிங்ஸ் பாங்கிகள் இருக்கின்றன. சென்னையிலோ 1,764 பாங்கிகள் இருக்கின்றன. பர்மாவில் ஒவ்வொரு பாங்கியிலும் ஸராஸரி 237 பேர்கள் டிபாவிட்டு செய்கிறார்கள். பங்காளத்தில் ஒவ்வொரு டிபாவிட்டர் கணக்கிலும் ஸராஸரி 118 ரூ. இருக்கிறது. ஆனால் பர்மாவில் ரூ. 79 தான் இருக்கிறது. பம்பாயில் ரூ. 160 ஆகிறது. சென்னையிலோ ரூ. 62 தான் ஆகிறது. இந்த கணக்குகளிலிருந்து என்ன ஊகிக்கலாம்? இவைகளெல்லாம் ஒவ்வொரு மாகாணத்தினுடைய ஐசுவரியத்தைக் குறிப்பிடுகின்றனவா? பர்மாவில் 64,464 டிபாவிட்டர்களில் 23,901 பேர்களை வீட்டு வேலைக்காரர்களென்று சொல்லலாம். மாஸச்சம்பளம்பெறும் உத்தியோகஸ்தர்களில் 11,700 பேர்கள், மாஸச்சம்பள மில்லாமல் பலவித ஸம்பாத்தியமுள்ளவர்களில் 2,756 பேர்கள். மொத்த டிபாவிட்டர்களில் 3213 பேர்கள் வியாபாரிகள். 518 பேர்கள் தான் விவஸாயிகள்.

### Salem District Urban Bank, Limited.

சேலம் டிஸ்டிரிக்ட் அர்பன் பாங்கி லிமிடேட்.—இந்த பாங்கியில் ஒருலக்ஷ ரூபாய் முதலும், கொடுபட்ட ஷேர் காபிடல் போன வருஷம் 30,000 ரூபாயும், மொத்த டெபாவிட்டுகள் ரூபாய் 107383-4-11ம், இந்தியன் பாங்கியிலிருந்து வாங்கின கடன் 1,64, 396-4-8 ம், பாங்கி கடனைக் கொடுத்த தொகை மொத்தம் ரூபாய் 3,06,684-7-2 மாக இருந்தன. மாகாணத்திலுள்ள பாங்கிகளில் இந்த ஒரு டிஸ்டிரிக்ட் பாங்கி தான் மற்ற கீழ்ப்பட்ட ஐக்கிய நாணயச் சங்கங்களை ஒழுங்காய்ப் பரிசோதித்து வருகிறது. வருஷக் கடைசியில் இதன் லாபம் ரூபாய் 5,562-7-8, கொடுபட்ட ஷேர் காபிடலுக்கு முதலுக்கு நூற்றுக்கு 9 விகிதம் டிவிடென்ட் கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. பாங்கியின் ரிஸர்வ் பண்ட் வருஷக் கடைசியில் 1,392-5-11 ஆயிருக்க, முன்னுலிருந்ததையும் சேர்த்து மொத்தம் ரூபாய் 3,451-1-0 ஆயிற்று. ரெஜிஸ்டிரார் அவருடைய ஆடிட் ஆர்டரில் ஸெக்ரிடரி மிஸ்டர் டி. ஆதி நாராயண செட்டியார் சிரத்தையுடன் கஷ்டப்பட்டு வேலை செய்தாலும், டிபாவிட் செய்கிறவர்கள் இந்த பாங்கில் டிபாவிட் செய்ய யோசிக்கிறார்களென்றும், காலாந்தரத்தில் இவர்கள் இப்படிப்பட்ட சங்கங்களில் தாராளமாய் டிபாவிட் செய்யக்கூடுமென்று நம்புவதாகவும் சொல்லுகிறார்.

### Trichinopoly Urban Bank, Limited.

திருச்சினுப்பள்ளி ஜில்லா அர்பன் பாங்கி லிமிடேட்.—திருச்சினுப்பள்ளி அர்பன் பாங்கியின் 1911-12 ம் வருஷத்து ரிபோர்ட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. மெம்பர்களால் டிபாவிட்டு செய்யப்பட்ட தொகை பிரஸ்தாப வருஷத்தில் ரூபா 1,25,801 ; முந்திய வருஷத்தில் ரூபா 40,955-3-0 ; மெம்பர்கள் அல்லாதவர்களால் டிபாவிட்டு செய்யப்பட்ட தொகை ரூபா 22[illegible],734-13-3 ; முந்திய வருஷத்தில் ரூபா 84,370-7-0 ; கிராம நாணயச் சங்கங்களுக்கும் மற்ற பாங்கிகளுக்கும் கொடுக்கப்பட்ட கடன் தொகை ரூபா 4,42,138-0-1 ; முந்திய வருஷத்தில் கொடுக்கப்பட்ட கடன் தொகை ரூபா 2,01,3[illegible]3-6-3 ; இண்டியன் பாங்கியிலிருந்து ரூபா 30,000 கடன்வாங்கி இருப்பதாகக் கணக்கால் அறிகிறோம். இவ்வருஷத்தில் இந்த அர்பன் பாங்கியின் முயற்சியால் 26 கிராமச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. முந்திய வருஷங்களில் ஸ்தாபிக்கப்பட்டு இருப்பவைகளைச் சேர்த்து இப்பொழுது 72 சங்கங்கள் இருக்கின்றன அர்பன் பாங்கியில் இச்சங்கங்கள் வாங்கி இருந்த கடன் தொகைகளை கெடுத் தேதிகளில் தவறாமல் திரும்பக் கொடுத்திருக்கின்றன. லாபத்தில் செலவு நீக்கி மிஞ்சினது ரூபா 3835-0-4. பாங்கியின் பைலாப்படி இந்த லாபத்தில் கால் பங்காகிய ரூபா 958-12-1 இருப்புடன் சேர்க்கப்படும். அரைக்கால் பங்கு ரூபா 479-6-0 செக்ரடெரிக்கு இனுமாகக் கொடுக்கப்படும். பாங்கிக்கு முதலாக ஏற்பட்டது ஒரு பங்கு ஒன்றுக்கு ரூபா 500 வீதம் ரூபா 50,000. அந்த 500 ரூபாயைப் பத்து தடவையாகக் கேட்ட காலங்களில் கொடுக்கவேண்டும். இதுவரையில் ரூபா 19,500 செலுத்தப்பட்டிருக்கிறது. லாபத்தில் பத்தில் ஒன்று பங்குக்காரர்களுக்கு டிவிடெண்டாகக் கொடுக்கப்படும். பாங்கியின டைரெக்டர்களில் பலர் பாங்கியின் விஷயங்களில் ஒருவித சிரத்தையும் எடுத்துக்கொள்ளாதவர்களாயிருப்பதால் அவர்களை நீக்கி பாங்கியின் க்ஷேமத்துக்காகப் பாடுபடக்கூடியவர்களை நியமிப்பது நல்லது.

# INSURANCE.
# இன்ஷியூரென்ஸ்.

## Bachelors and Married Men.

பிரம்மசாரிகளும், கலியாண மானவர்களும்.- பிரம்மச்சாரிகளைவிட கிரஹஸ்தர்கள் நீண்ட ஆயுளுடையவர்கள யிருக்கிறார்கள். குற்றவாளிகளில் பிரம்மச்சாரிகளைவிட கிரஹஸ்தர்கள் குறைவு. இக்காரணங்களால் ஜனஸமூக நன்மையைக் கருதுமிடத்தில் கிரஹஸ்தாச்ரமமே விரும்பத்தக்கது என்று ஒரு ஜெர்மன் சாஸ்திரியார் அபிப்பிராயப்படுகிறார்.

## Policies against Rain.

மழைக்காக இன்ஷியூரென்ஸ் பாலிஸிகள்.—இன்ஷ்யூரென்ஸில் எவ்வளவோ விதம். லைப் இன்ஷ்யூரென்ஸ், நெருப்புப் பிடித்தால் இன்ஷ்யூரென்ஸ், கால்நடைகள் இறப்பதற்கு இன்ஷ்யூரென்ஸ், என்று பலவிதம். இவைகளெல்லாவற்றையுங் காட்டிலும் மழை இன்ஷியூரென்ஸ் என்று சீமையில் புதிதாக ஏற்பட்டிருக்கிறதாம். அதன் ஏற்பாட்டின்படி மழை ஜாஸ்தி பெய்து ஏற்படும் நஷ்டங்களுக்கு அந்தக் கம்பெனி பாலிஸி ஹோல்டர்களுக்கு ஈடு கொடுப்பார்களாம். அந்தக் கம்பெனி பாலிஸிகள் நாலு வகைப்படும்; இந்த நாலு வகைகளிலும் பாலிஸி ஹோல்டர்களுக்குப் பணம் கொடுக்கப்படும்:—(1) நாளுக்கு 20 அங்குலம் மழைக்கு அதிகமாக பிரதி வாரமும் இரண்டு நாளுக்குமேல் மழை பெய்தாலும் (2) நாளுக்கு 20 அங்குலத்துக்கு மேற்பட்டு மழை பெய்யும் ஒவ்வொரு நாளுக்கும் (3) பிரதி வாரமும் நாளுக்கு 15 அங்குலத்துக்கு மேல்பட்டு முதல் நாள் தவிர இரண்டாம் நாளுக்கும் அதற்கு அடுத்த நாளுக்கும் (4) நாளுக்கு 20 அங்குலம் மேனிக்கு சேர்ந்தாற்போல் நாலு நாளைக்கு மழை பெய்யும் பட்சத்திலும். இந்தமாதிரியான இன்ஷியூரென்ஸை இந்தியாவிலும் நடத்திவர ஒரு கம்பெனி ஏற்பாடு செய்தால் எவ்வளவோ கிருஷிகர்கள் இன்ஷியூர் செய்வார்கள். ஆனால் இங்கே இன்ஷ்யூர் செய்வதாயிருந்தால் அங்கே அதிவிருஷ்டிக்காக இன்ஷியூர் செய்ய, இங்கே அநாவிருஷ்டிக்காக இன்ஷ்யூர் செய்வார்கள்.

## Mortality of Handfed Infants.

கையினால் எடுத்து ஆகாரம் ஊட்டப்படும் குழந்தைகளின் மரணம்.—இங்கிலாந்திலுள்ள ஹல் என்னும் பட்டணத்து வருஷா வருஷக்கணக்கை ஐந்து வருஷத்துக்குகடைசி மூன்று மாதங்களுக்கு எடுத்துப் பார்த்ததில்கையினால்எடுத்து ஆகாரம் ஊட்டப்பட்ட குழந்தைகளில் 991 இறந்து விட்டன. அப்படியில்லாமல் முலைப்பால்சாப்பிட்டு போஷணம் பண்ணப்பட்ட குழந்தைகளில் 190 குழந்தைகள்தான் இறந்தன. இதேமாதிரி ஜர்மெனியிலும் கணக்குகளை சோதித்துப் பார்த்ததில் கோடைகாலத்தில் குழந்தைகள் ரொம்ப இறப்பதாகவும்,அப்படி இறக்கும் குழைந்தைகளில் முலைப்பால் சாப்பிட்டு வளரும் குழந்தைகளைக் காட்டிலும் கையால் எடுத்து ஆகாரம் ஊட்டப்பட்ட குழந்தைகள் ஜாஸ்தியாய் இறப்பதாகவுந் தெரிகிறது.

## Advise to Insurance Agents.

இன்ஷியூரென்ஸ் ஏஜண்டுகளுக்கு புத்திமதி.—தாமஸ் பக்னர் என்பவர் பின்வருமாறு எழுதுகிறார்:—

1. இன்ஷியூரென்ஸ் செய்யச் சொல்லப்போகிற மனிதனை நீ நன்றாய் தெரிந்துகொள்.

2. என்ன விதமான பாலிஸியை எடுக்கச்சொல்ல வேண்டுமென்று நிதானித்துக்கொள்.

3. உன்னுடைய கேசைப்பற்றிய விவரங்களை எல்லாம் ஜாக்கிரதையாய் அறிந்துகொள்.

1. நீ இன்ஷியூர் செய்யச் சொல்லப்போகும் மனிதனுடைய தொழில், அவனுடைய வரும்படி, அவனுடைய குலம் கோத்திரம், அவனுக்கு எது ப்ரியம் அப்ரியம் என்ற விஷயங்கள்,அவன் எப்பொழுது ஸாவகாசமாயிருப்பான், என்ற விஷயங்களையெல்லாம் முன்னதாகவே நன்றாய் அறிந்துகொள்.

2. நன்றாய் யோசனைசெய்து உன்மனிதனுக்கு தகுந்தாற்போல் ஒரு பாலிஸியை சிபார்சுசெய்.

3 அந்த பாலிஸியை திருப்பி திருப்பி பார்த்து அதைநன்றாய் அறிந்துகொள். அறிந்துகொண்டு பின்னும் உன் மனிதனிடத்தில் போய்சொல்லு.

இப்படி உன் மனிதனிடத்தில் சொல்லப்போகிறதற்குமுன் எப்படி ஒரு வக்கீல் தனக்கு எதிர்கட்சியில் வந்திருக்கிற வக்கீல் என்னென்ன ஆக்ஷேபணைகள் சொல்லுவன் என்று எதிர்பார்த்து தன்னை தயார் செய்து கொள்ளுவானோ அப்படியே உன் மனிதனை நீயும், உனக்கு பிரதிவாதி யென்று நினைத்து அவன் இன்னின்ன ஆக்ஷேபணைகள் சொல்லுவான் என்று ஊகித்து அவ்வாக்ஷேபணைகளை ஒரு காகிதத்தில் மனதில் நன்றாய்ப் பதியும்படி குறித்துக்கொள்.

ஒவ்வொரு ஆக்ஷேபணைகளுக்கும் உன்பதிலை நீ ஆலோசனை செய்து குறித்துக்கொள். அதை நன்றாய்ப் பார்த்துப் பார்த்து உன் மனதில் திடப்படுத்திக்கொள்.

உனக்கு தைரியமும் ஸமயமும் தெரியவேணும். எப்படி இருந்தாலும் முன் ஆலோசனை செய்து கொண்டு போனால் எவ்வளவோ உசிதமானது.

# EDUCATION.
## வித்யா விஷயம்.

### State Technical Scholarships for 1912.

கவர்ன்மெண்டு கைத்தொழில் ஸ்காலர்ஷிப்புகள்.—இந்தியா கவர்ன்மெண்டார் 1912-ம் வருஷத்தில் கீழே குறித்திருக்கும் 10 ஸ்காலர்ஷிப்புக்களை கீழ்க்கண்டவர்களுக்கு ஐரோப்பாவில் போய் படிக்கும்படி கொடுத்திருக்கிறார்கள்.

மதராஸ்.—டி. ஸகராம்ராவ், எலக்ட்ரிக் என்ஜினீரிங்; டி. ஸதாசிவம், ராஸாயன முறைகளை வேலைகளுக்கு உபயோகித்தல், துணிகள் செய்தல்; டி. என் நாகர்காட்டி, கடுதாசி செய்தல்; இ. வி. ஹெனரீக்ஸ், சிற்பவேலை, இந்தியாவில் 2 வருஷம் படித்த பிறகு ஒரு வருஷத்திற்கு ஐரோப்பாவிற்குச் செல்லுவார்.

பெங்காளம்.—பி. ஆர். டன்கன், யந்திர ஸம்பந்தமானவும், மின்ஸார ஸம்பந்தமானவுமான என்ஜினீரிங்; சந்திரசேகர் ஸர்க்கார், மேற்படி.

பஞ்சாப்.—லட்சுமிதாஸ்.

பர்மா.—மௌங்பாசிட், யந்திர ஸம்பந்தமானவும் மின்ஸார ஸம்பந்தமானவும் என்ஜினிரிங்.

பீஹாரும் ஒரிஸாவும்.—பூபா நந்ததாஸ், யந்திர ஸம்பந்தமானவும் மின்ஸார ஸம்பந்தமானவுமான என்ஜினீரிங்.

மத்திய மாகாணங்கள்.—கே. வி. மித்ரா, மின்ஸார ஸம்பந்தமான என்ஜினீரிங்.

### The Bombay Commercial College.

பம்பாய் கவர்ன்மெண்டார் விளம்பர மொன்றில் கீழே சொல்லப்பட்டவர்கள் அவரவர்கள் பேருக்கு நேரே குறிப்பிட்ட பணத்தை வியாபார காலேஜிக்காக இனாமாய்க் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(1) ஸர்ஜக மோகநதாஸ் உர்ஜீவன்தாஸ் ரூ. 2,25,000.

(2) வாடியா தர்ம ட்ரஸட்டிகள் ரூ.4,800 வருஷமொன்றுக்கு.

(3) ஸர்சீனுபாய் மாதவால், ரூ 100,000.

(4) பம்பாய் சேம்பர் ஆப் காமர்ஸ், ரூ. 1500 வருஷமொன்றுக்கு.

(5) மில் சொந்தக்காரர்கள் சங்கம், வருஷம் ரூ. 1,000.

(6) இந்தியன் மர்ச்செண்ட்ஸ் சேம்பரும் பீரோவும் என்கிற இந்திய வியாபாரச்சங்கம், ரூ.1000 வருஷத்துக்கு.

(7) பம்பாய் ஜவுளி வியாபாரிகள் சங்கம், ரூ. 1000 வருஷத்துக்கு.

(8) மில் சொந்தக்காரர்கள் சங்கம், ஆமதாபாத் ரூ. 1000 வருஷத்துக்கு.

### Electrified Children.

மின்ஸாரம்பட்ட குழந்தைகள்.—ஸமீபத்தில் ஸ்டாக்ஹோம் என்ற நகரில் குழந்தைகள் வளர்ச்சியில் மின்ஸாரம் என்ன செய்யக்கூடும் என்று பரீக்ஷைபார்த்தார்கள். ஒரு அறையில் 50 குழந்தைகளை அடைத்து அவ்வறையில் சுவர்களில் எல்லாம் மின்ஸாரக்கம்பிகளைப் போட்டு மின்ஸாரத்தை அவ்வறையில் விடுத்தார்கள். வேறு 50 குழந்தைகளை மின்ஸாரம் இல்லாத மற்றொரு அறையிலும் விட்டுவைத்தார்கள். ஆறுமாதத்திற்கு அப்புறம் மின்ஸார அறையில் இருந்த குழந்தைகள் 2 அங்குலம் வளர்ச்சி அடைந்திருந்தார்கள். மற்றொரு அறையில் இருந்த குழந்தைகள் $1\frac{1}{2}$ அங்குலந்தான் வளர்ந்திருந்தார்கள். மேலும் மின்ஸாரம்பட்ட குழந்தைகள் ஜாஸ்தி நிறையிருந்தார்கள். படிப்பிலும் கூர்மையாய் இருந்தார்கள். மற்ற குழந்தைகள் அப்படி இல்லை.

மின்ஸாரம்பட்ட குழந்தைகள்பொதுவாய் சுருசுருப்பாயும் புத்திகூர்மையாயும்காணப்பட்டார்கள். தேகத்தில் வலிமையும் ஜாஸ்தியாயிற்று. மின்ஸார ரூமில் சொல்லிக்கொடுத்த வாத்தியாரும் ரொம்ப நன்றாய் சொல்லிக் கொடுத்தாராம்.

### The Madura Technical Institute.

மதுரை டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்.—மதுரை டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் என்ற தொழிற் கல்விச்சாலையில் திருத்தங்கள் செய்ய ஆனரெபில் மிஸ்டர் சாட்டர்ட்டன் செய்திருந்த பிரேரணைகளை சில மாறுதல்களுடன் கவர்ன்மெண்டார் அங்கீகரித்து விட்டார்கள். நெசவுத்தொழில் சாயம் போடும் தொழில் இவைகளை மதுரைப் பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்றும், பாத்திர வேலைசெய்யக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை யென்றும் சொல்லியிருக்கிறார்கள். தான் கற்ற தொழிலைச்செய்து ஸம்பாதிப்பதற்கு வேண்டிய பொருளுதவியைத் தானே செய்து கொள்ளக்கூடியவர்களுக்கு மட்டுந்தான் உயர்தரத் தொழிற் படிப்பு சொல்லிக் கொடுக்கவேண்டுமென்று கவர்ன்மெண்ட் உத்தரவில் வற்புறுத்தப் பட்டிருக்கிறது. ஏனெனில் ஸ்காலர்ஷிப்புகள் பெற்றுப் படித்தவர்கள் பிற்காலத்தில் தாங்கள் கற்ற தொழிலைச் செய்து பிழைக்கவில்லை யென்று தெரியவருகிறதாம்.

# ECONOMIC PRODUTCS.
## விலையுள்ள பொருள்கள்.

**Tamarind Seed.**

புளியங்கோட்டை.—அநேகர் புளியங்கொட்டை உபயோகமுள்ள தல்ல வென்று எண்ணி வீணய்ப் போட்டு விடுகிறார்கள்.

பஞ்ச காலத்தில் ஏழைகள் புளியங்கொட்டையைத் தின்பார்கள். தின்பதற்கு முன், அதைத் தண்ணீரில் நன்ருய் ஊறவைத்து, பிறகு வேகவைக்க வேணும். சிலர் முதலில் வறுத்துப் பிறகு வேகவைப்பார்கள். வேகவைத்த கொட்டையிலிருந்து மேல் தோலையெடுத்து விட்டால் உள்ளே யிருக்கும் பருப்பு தின்பதற்கு உருசியாயிருக்கும். சில வேளைகளில் அந்தப் பருப்பை வெயிலில் உலர்த்தியாவது அல்லது, இருப்புச் சட்டியில் வறுத்தாவது, மாவாக்கி அந்த மாவைக்கொண்டு சில தின்பண்டங்கள் செய்வதுண்டு.

ஆயுர்வேத வைத்திய சாஸ்திரப்பிரகாரம் புளியம் பருப்பின்மாவு வாதநோயைக் கண்டிக்குமாம். யுனானி வைத்திய சாஸ்திரப்படி இந்தமாவு, படை, தேமல், முதலியவைகளைக் கண்டிக்குமாம்.

புளியங் கொட்டையை இடித்து தண்ணீரில் காய்ச்சி கூழ்போல் எடுத்து வைத்துக்கொண்டால், அது பசையாய் உபயோகப்படும். புஸ்தகம் கட்டவும், ஒடிந்துபோன மரத்துண்டுகளை ஒன்ருேடொன்று சேர்க்கவும் இந்தப் பசை உபயோகப்படுகிறது. பட்டு வஸ்திரம் நெய்பவர்களும், குதிரை ஜேணம் தைப்பவர்களும் இந்தப் பசையை உபயோகிப்பதுண்டு.

**Banana Flour.**

வாழை மரம்:—வாழைக்காயிலிருந்து வாழைமா செய்யலாம். இம்மாவைப்பற்றி "லான்ஸெட்" என்னும் வைத்தியப்பத்திரிகை பின்வருமாறு சொல்லுகிறது: வாழைக்காயிலிருந்து செய்யப்படும் "பாஞனின்" என்னும் மா தேகத்திற்குபுஷ்டியைக்கொடுத்து சீக்கிரத்தில் ஜீரணமும் அடைகிறது. இதன் மா புதிய வாழைப்பழத்தைப் போல் வாஸனையாயும் ருசியாயும் இருக்கிறது. இம்மாவிலிருந்து பண்ணப்பட்ட ரொட்டியும் மிகத்திறமாய் இருக்கிறது. கோதுமையைக் காட்டிலும் வாழை மாவில் கொழுப்பு பதார்த்தம் ஜாஸ்தியாய் இருப்பதனல் வாழைமா கோதுமைமாவைக்காட்டிலும் சிலாக்கியம். ஸமீபத்தில் ஒரு டாக்டர் வாழைமாவை குழந்தைகளுக்கு பாலோடு கலந்து கொடுக்கலாம் என்று சொன்னார். உடம்புக்கு ஸௌகரியத்தோடுங் கூட இதன் விலை ஸரஸம். பாலும் வாழைமா சேர்ப்பதினல் சீக்கிரம் ஜீரணம் அடைகிறது.

**Bamboo Pulp for Paper Making.**

காகிதம் செய்வதற்கு மூங்கில்கூழ்.—டேராடூனிலுள்ள காட்டுச்சோதனை ஸ்தாபனமென்ற பாரஸ்டு ரிஸர்ச் இன்ஸ்டிடூட்டைச் சேர்ந்த மிஸ்டர் டப்ளியு. ரெயிட் என்பவர் மூங்கில் கூழ் காகிதம் செய்வதற்கு உதவுமா வென்று பல சோதனைகள் செய்து, இப்போது அது நன்ருய் உதவுமென்று தீர்மானித்து விட்டார். இந்தியக் காடுகளில் மூங்கில்களும் பல விதமான புல்களும் நல்ல காகிதம் செய்வதில் உதவும் படியான கூழாக்கக் கூடினவையா யிருக்கின்றன. இந்தக் கூழினல் உயர்ந்த காகிதம் செய்யக்கூடுமென்றும், அப்படிச் செய்வதில் காகிதத்தை வெளுப்பாக்குவதின் செலவினல் நஷ்டமுண்டாக்கக் கூடியதா யிருந்ததென்றும், இப்போது அந்த நஷ்டமுண்டாகாமல் ஓர் உபாயம் கண்டு பிடிக்கப்பட்டுப் போயிற்றென்றும், ஆகையால் இந்தியாவில் காகிதம் செய்வதற்கு இனி தடைக ளில்லையென்றும் மிஸ்டர் ரெயிட் எழுதுகிறார். காகிதத் தொழில் இந்தியாவில் லாபமாகச் செய்யவேண்டுமானல் மேற்கண்ட கூழ், எங்கே மூங்கில்களும், புல்லுகளும், அகப்படுமோ அங்கு செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்து காகிதத்தொழில்கள் நடக்கும் பட்டணங்களுக்கு அது கொண்டு வரப்படவேண்டும். இவ்விதமாகக் காகிதத் தொழில் கூழ்செய்யும் தொழிலாகவும் காகிதம் செய்யும் தொழிலாகவும் இரண்டாகப்பிரியும். இந்தியாவில் இந்தச்சரக்கு செய்வதற்கு வேண்டிய இயற்கைப் பொருளாகிய மூங்கில்கள், புல்கள் முதலியவை வேண்டினமட்டும் காடுகளில் கிடைப்பனவாயிருக்க, அவைகள் இப்போது வீணக்கப்பட்டு, இந்தியாவுக்கு வேண்டிய காகிதங்கள் அன்னிய தேசங்களிலிருந்து வருகின்றன. இந்தியாவில் மட்டும் காகிதத் தொழில் ஸ்தாபிக்கப்பட்டுபோனல், அதில் இந்நாட்டில் உபயோகமாகக்கூடிய காகிதம் முழுவதும் செய்யப்படுவதோடு, அதை அன்னியதேசங்களுக்கு அனுப்பவும் கூடும். இனி முதலாளிகள் காட்டுப்பக்கங்களில்கூழ் செய்யும்தொழிலை யாரம்பிப்பார்களானல் பட்டணங்களில் காகிதத்தொழில் செய்ய முதலாளிகள் முன் வருவார்கள்.

# BUSINESS METHODS.
## வியாபார முறைகள்.

### Salesmanship.

**விற்பனை ஸாமர்த்தியம்.**—வெளுத்ததெல்லாம்பா லாகாது. அதுபோல கடைவைக்கிறவர்களெல்லாரும் வியாபாரம் செய்வதில் திறமையுடையவர்களாகமாட்டார்கள். அந்தத்திறமை சிலருக்கு மாத்திரமேஉண்டு. விற்பனை செய்வதில் கெட்டிக்காரனுக வேண்டுமானால் அதையும் ஒரு வித்தையாக எண்ணவேணும். இதைப்பற்றி அறியவேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. இருந்தாலும் ஜனங்கள் தங்களுக்குக் தெரியுமென்று சொல்வதெல்லாம் கொஞ்சந்தான். விரிவாக எடுத்துச்சொல்வதும் கஷ்டமான காரியந்தான்.

அநேக ஸமயங்களில் வியாபாரிகளுக்கே விற்பனை செய்யும்போது பிரமிப்பு உண்டாகிறது. கடைக்கு வரும் சில மனிதர்களிடத்தில் வியாபாரிகளும் ஸாதாரணமாய்ப்போகிற சுவடைவிட்டு, புதுமாதிரியான வழியில் செல்லவேண்டி வருகிறது. அநேக கஷ்ட நிஷ்டூரங்களும் நடுவே நடுவே ஸம்பவிக்கின்றன. வியாபாரஞ் செய்வதை ஒரு வித்தையென்று சொன்னோம். அது என்னவென்றால், கடைக்கு வருகிறவர்களை வெறுங்கையோடு போகாமல் ஏதேனும் ஸாமான்கள் வாங்கிக்கொண்டு போகும்படி செய்யும் வல்லமையே. சில பேர்கள் யாதொரு தூண்டுகோலுமில்லாமல் கடைக்கு வந்தால் வந்த சுவடு தெரியாமலே வேண்டிய ஸாமான்களை வாங்கிக்கொண்டுபோய் விடுவார்கள். இப்பேர்ப்பட்ட மனிதர்களிடம் வியாபாரிகளுக்கு தொந்திரவே இல்லை. அவர்களுக்கு திருப்தியாகும்படிக்கு ஸாமான்யமாய் கொஞ்சம் மரியாதைவழிகளில் எவரும் நடந்துகொள்ளலாம். ஆனால், அப்பேர்ப்பட்ட மனிதர்கள் கொஞ்சந்தான். அந்த மாதிரியான மனிதர்களிடத்தில் சில அபூர்வமான குணங்களுண்டு. அந்த குணங்களைத்தெரிந்துகொண்டு, மறுபடியும் அவர்கள் தம் கடைகளில் வியாபாரம் செய்யும் விதமாய் அவர்களை உபசரிக்கவேணும். இந்தமாதிரி யுக்திகளெல்லாம் செய்வதில் கொஞ்சம் சாதுரியம் வேண்டும்.

விற்பனை செய்வதில் வேறொரு தந்திரமும் உண்டு. இதை விசேஷமாய் கடைகளுக்கு ஸாமான்வாங்கும் உத்தேச மில்லாமலே வரும் ஜனங்களிடத்தில் உபயோகிக்கவேண்டும். அதென்னவென்றால், கடைக்கு வருபவர்களை ஸாமான் வாங்கும்படி அவர்கள் மனதில் ஒரு எண்ணத்தை உண்டு பண்ணுவதும், அந்த எண்ணம் அவர்கள் மனதில் பதிந்துவிட்டது என்று தெரிந்ததும், ஸாமான்களை வாங்கத்தான் வேண்டுமென்று அவர்களுக்குள் ஒருவிதமான அபிப்பிராயத்தைக் கொள்ளச் செய்வதும், அபிப்பிராயம் கொண்டபிற்பாடு ஸாமான்களை வாங்குவதற்கு ஆர்டர் கொடுக்கும்படி செய்வதுமாம். இதற்கு வேண்டிய யுக்திகளை ஸரிவர உபயோகிப்பது ஸாமான்யமல்ல. ஏதோ யந்திரத்தை முடுக்கிவிட்டால் தானாகவே வேலை செய்வதுபோல் நினைக்கக்கூடாது.

### Good Advice.

**நல்ல புத்தி மதி.**—அதிகாலையில் எழுந்திரு. முன் ராத்திரியிலேயே படுக்கைக்குப்போ. இதன் நடுவே உள்ளகாலத்தை வீண்போக்காமல் உபயோகமான வேலைகளைச் செய்.

இக்காலத்தில் யோசனை செய்வதற்கே நாழிகிடையாது. எவனொருவன் ரொம்ப நாழியோஜனை பண்ணாமல் சுருக்க காரியத்தைச் செய்கிறானோ அவன்தான் விருத்திக்கு வருவான்.

விளம்பரம் செய்தால் உன் வியாபாரத்தை நீ விருத்திபண்ணிக் கொள்ளலாம்; விளம்பரம் செய்யவிட்டால் உன் வியாபரமே கெட்டுவிடும்.

சுத்தமாய் இருந்தால் துரு ஏறாது. எந்தயந்திரம் ஜாஸ்தியாய் கவனிக்கப்படுகிறதோ அதுதான் நீடித்தகாலம் நிற்கிறது.

தனவான்கள் என்பவர்கள் தேவதைகளும் அல்ல, மகா மேதாவிகளு மல்ல. அவர்கள நம்போல் மனிதர்கள்தான். ஆனாலோ நம்மைப்போல் அல்லாமல் கொஞ்சம் முந்திக்கொண்டு நினைத்ததை முடித்து விருத்தி அடைந்தவர்கள்.

சும்மாயிருந்துவிட்டு நாளைக்கு நல்லகாலம் வருமென்றிருப்பது மகாதப்பு. உனஸாமான்களை விற்க வேண்டுமானால் அவைகளைப்பற்றி உடனே விளம்பரம் செய், உடனே நல்லகாலம் வரும்.

கசாபிசா என்று எல்லாவிஷயத்திலும் பயித்தியம் பிடித்தாற்போல் அலையாதே; ஒரேகாரியத்தை தீக்ஷண்யமாய்வைத்துக்கொண்டு அதை செய்து முடி.

நல்ல ஸமயங்கள் வந்தால் அதை விட்டுவிடாமல் நன்றாய் உபயோகப்படுத்தி விடு.

# FRAUDS AND FAKES.
## மோசங்களும் பித்தலாட்டங்களும்.

**Swadeshi Cloth.**

சுதேசித்துணி.—ஏன் கொஞ்ச வருஷங்களுக்கு முன்னிருந்ததுபோல் இப்பொழுது சுதேசித்துணிகள் வியாபாரமாவதில்லை யென்பதற்கு பின்வரும் காரணம் சொல்லப்படுகிறது. மில்காரர்கள் எவ்வளவு ஜாஸ்தியாய் துணிகள் நெய்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அவர்களுக்கு கமிஷன் ஜாஸ்தியுண்டு. ஆகையால் துணியின் குணத்தையே கவனிக்காமல் கனத்தையே கவனித்து அதிகக் கஞ்சிபோட்டு வந்தார்கள். இது ஜனங்களுக்குப் பிடிக்காமல் சீமைத்துணிகளையே மறுபடியும் வாங்க ஆரம்பித்துவிட்டார்கள். எந்த ஜனங்கள் சுதேசி வேணுமென்றார்களோ அவர்கள்கூட இப்பொழுது சுதேசித்துணிகளை வெறுக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்று ஒரு பத்திரிகை கூறுகிறது.

**Food Adulteration.**

ஆகாரங்களோடு கலப்படஞ் செய்தல்.-மதராஸ் கவர்ன்மெண்டார் இம்மாகாணம் முனிஸிபாலிட்டிகளை ஆகார மருந்துப் பண்டங்களில் கலப்படஞ் செய்து மோசடியாய் விற்பதைத் தடுக்க ஏதாவது சட்டம் ஏற்படுத்தவேண்டியது ரொம்ப அவசியமாவென்று கேட்டிருக்கிறார்களாம். ஐக்கிய மாகாணங்களில் இது மாதிரியான சட்டம் ஏற்பட ஒரு பில் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தியாவின் எல்லா மாகாணங்களிலும் இந்த மாதிரியான சட்டம் அவசியம்.

**Cotton Frauds.**

பருத்தியில் மோசங்கள்.—பீராரிலும் மத்திய மாகாணங்களிலும் பருத்தி வியாபாரம் செய்வோர்கள் பருத்தியில் நிறையத் தண்ணியை ஊற்றி அதன் எடையை ஜாஸ்திப்படுத்துகிறார்களாம். இதைத் தடுப்பதற்காக கவர்ன்மெண்டார் முயற்சிசெய்து வருகிறார்களாம். பருத்தி வாங்குவோர்கள் நன்றாய் பரிசோதனைசெய்து தண்ணீர் இருந்தால் அதைப் பற்றி கவர்ன்மெண்டாருக்கு ரிபோர்ட்டு செய்தால் கவர்ன்மெண்டார் மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்கள். நம் ராஜதானியின் வடக்கு பாகங்களில் வெடி உப்பையும் பருத்திக் கொட்டையையும் பருத்தியில் போட்டு பேல்களை ஜாஸ்தி எடையாய்க் காட்டுகிறார்களாம்.

இன்னும் கொட்டை அடிப்பதற்காக பஞ்சு யந்திரத்திற்குள் போகும் முன்னமேயே பல தினுஸான பருத்திகளை ஒன்றாய்ச் சேர்த்து விடுகிறார்கள். இது பெரிய பிசகு. ஏனெனில் பருத்தியின் திறம் கெட்டுப்போவதுடன் பலவித பருத்திகளின் கொட்டைகள் ஒன்று சேர்ந்து கொட்டையின் திறமும் கெட்டுவிடுகிறது. இக்கொட்டையே பின்பு விதைக்கு உபயோகப்படுகிறது. இப்படி பலவிதப் பருத்திக்கொட்டைகளை ஒன்றாய்ச்சேர்த்தால் அவ்விதைகளினின்று பின்பு நல்ல பருத்தி கிடைக்கமாட்டாது.

இப்படிக் கெல்லாம் செய்வதனால் மொத்தத்தில் பஞ்சும் கெட்டு இந்தியாவில் உண்டாகும் பருத்திக்கே கெட்டபேர் உண்டாகிவிடும். இப்படியெல்லாம் மோசம் செய்வது ஒரு க்ரிமினல் குற்றம் என்று ஏற்படுத்தவேண்டும்.

**Adulteration of Ghee.**

நெய்யோடு கலப்படம் செய்தல்.—ஆகார பதார்த்தங்களில் எல்லாவற்றையும் காட்டிலும் நெய்யோடுதான் ஜாஸ்தி கலப்படம் செய்து விற்கிறார்கள். நெய் சமையலுக்காக ஐரோப்பியர்களாலும் சுதேசிகளாலும் ரொம்ப ஜாஸ்தியாய் உபயோகப்பட்டு வருகிறது. அப்படி இருந்தும் ஸாதாரணமாய் கடைகளில் நல்ல நெய் அகப்படுவதே கிடையாது. நாளுக்கு நாள் விலைமட்டும் உயர்ந்துகொண்டு வருகிறதே ஒழிய நல்ல நெய் கிடைப்பது மிகவும் அரிதாய்ப்போய்விட்டது. பொதுவாய், கொழுப்பு, கடலெண்ணெய், நல்லெண்ணெய், ஆளிவிதை எண்ணெய், இவைகளை நெய்யோடு கலந்து,கலந்த பதார்த்தத்தை நல்ல நெய் என்று விற்கிறார்கள். ஸமீபத்தில் இன்னும் ஒரு மோசம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இம்மோசம் ஜாஸ்தி பரவினால் ஜனங்களுக்கு ரொம்ப கெடுதி உண்டாகும். இது என்னவென்றால், பெட்ரோல் ஜெல்லி என்றும் பாரபின் வாக்ஸ் என்றும் சொல்லப்படும் கெரொஸின் எண்ணெயிலிருந்து எடுக்கப்படும் ஒரு எண்ணெயை நெய்யோடு கலந்து விடுகிறார்களாம். துர்நாற்றமே தெரிகிறதில்லை. இதை நெய்யோடுகலப்பதினால் ஜீரணசக்தி குறைந்து அநேக வியாதிகளுக்கு காரணமாகிறது. இப்படி கலப்பதை கவர்ன்மெண்டார் தடுக்கவேண்டியது அத்தியாவசியம். இந்த புதிய கலப்படம் இன்னும் ஜாஸ்தியாய்ப் பரவவில்லை. ஆகையினால் உடனே இதைப்பற்றி தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் இம்மோசத்தை நிறுத்தி விடலாம்.

# MACHINERY AND INVENTION.
## யந்திரங்களும் நூதன கற்பிதமும்.

**The Uses of the Magnet.**

**காந்தத்தின் உபயோகம்** :—நாம் ஸாதாரணமாய் விளையாட்டாக உபயோகிக்கும் ஒரு சிறு காந்தம், குண்டூசிகள், ஊசிகள் இவைகளைத் தூக்குவதையும், உலோகத் துண்டுகளைக் குதிக்கப் பண்ணுவதையும் பார்த்து ஆச்சரியப்படுகிறோம். அது போலவே, மிகவும் பெரிய சாந்தமானது அனேகம் டன் பளுவுள்ள இரும்பு, எஃகுத் துண்டுக் குவியல்களை வெகு தூரத்திலிருக்கிற உருக்குமிடத்துக்கு ஸுலபமாயும் அது சீக்கிரத்திலும் கொண்டுபோய்ச் சேர்க்கிறதைப் பார்த்தால் அதிக ஆச்சரியத்தை விளைவிக்கிறது. தற்காலத்தில் காந்தத்தின் மகிமை வியாபார விஷயத்தில் மிகவும் பயன்படுகிறது. ஒருகாந்தம் 5½ டன் நிறையுள்ள இரும்புத்தூண்டைத் தூக்கும் சக்தியுடையதாயிருக்கிறது. இரும்பாலைகளில் இக்காந்தத்தின் சக்தியால் அதிக சூடான இரும்பும் தூக்கப்படுவதால், ஏககாலத்தில் 50 மனிதர்களிருந்து செய்யும்படியான ஒரு வேலையை ஒரு காந்தத்தைக்கொண்டு முடித்துவிடலாமென்று மிஸ்டர் ஜார்ஜ் இ. வால்ஷ் என்பவர் ந்யூயார்க்கில் பிரசுரமாகும் "ட்ரிப்யூன்"பத்திரிகைக்கு எழுதுகிறார்.

இக்காரணத்தோடு ஸ்கல் கிராக்கர் என்ற கருவியை உபயோகப்படுத்தினால் இன்னும் அதிக விருத்தியைக் காணலாம். ஸ்கல் கிராக்கர் என்பது ஒரு பெரிய இருப்புக்குண்டு. துண்டுத் துணுக்காயுள்ள இரும்புகளை யுருக்குவதற்காக உயரத்திலிருந்து இதைத் தொங்கவிட்டு, அங்கிருந்து அதிவேகமாய் விழச் செய்வதால் அத்துணுக்குகள் பொடியாகி அதிஸன்னமாய்ப் போகின்றன. காந்த சக்தியினால் இந்தப்பளுவான இருப்புக்குண்டை மேலும் கீழுமாக விழச்செய்வதால் இருப்புத்துண்டுகள் உருக்குவதற்குப் பக்குவமாய்விடுகின்றன. இதன்றியும் இக்காந்தம் அந்த இரும்புத் தூள்களை உருக்கு மிடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. இப்பேர்ப்பட்ட அருமையான வேலைகளெல்லாம் மனிதர் கையால் செய்து முடிப்பதென்றால் எவ்வளவு காலம் செல்லுமோ அதைவிட நூற்றில் ஒரு பங்கு காலத்தில் காந்த சக்தியால் செய்து முடிகின்றது.

கொஞ்சகாலமாக இரும்பாலைகளில் சிறு துண்டுகள் பெரிய துண்டுகளோடு சேர்ந்து அதனால் உண்டாகும் ஆபத்தை நீக்கிவிடுவதற்கும் இக்காந்தம் உபயோகப்படுகின்றது. நவதான்யங்களைப் பொடிசெய்யும் யந்திரங்களில் தான்யங்களோடு கலந்துபோகும் இரும்புத் துண்டுகள் யந்திரத்தில் அறை படுவதால் நெருப்புப் பொறி கிளம்பி வெடி யுண்டாகிறது. இந்தக் காந்தங்களை உபயோகித்தால் இரும்புத் துண்டுகளில் எவ்வளவும் தப்பிப் போகாது. மேலும் சுரங்கத்தில் செய்யும் வேலைக்கும் காந்தம் அத்யாவசியமாயிருக்கிறது. இதனால் அநேக ஆயிர ஜனங்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். பெரும்பாறைகளை யுடைத்து உலோகத்தைச சேகரிக்கும்போது, கையால் எடுக்க முடியாததும், கண்பார்வைக் கெட்டாததுமான சிறு உலோகத் துண்டுகளெல்லாம் இப்போது சேதப்படாமல் எடுத்து உருக்கப்படுகின்றன. இன்னும் பூமியிலிருக்கும் புதையல்களை எடுப்பதற்கும் இக்காந்தமே அதிக உபயோகம். உதாரணமாக, ஒரு கப்பலிலிருந்த ஆணி மூட்டைகள் ஜலத்தில் 120-அடி ஆழத்தில் வீழ்ந்து எவராலும் எடுக்க முடியாமற் கைவிடப்பட்டன. அவைகளைக் காந்தப் பரிக்ஷையிற் றேற்றின ஒருவர் வெகு சுளுவில் காந்தத்தைக் கொண்டு எடுத்துவிட்டார்.

பெரிய காந்தங்கள் உபயோகப்படுவதுபோல் சிறு காந்தங்களும் பிரயோசனப்படுகின்றன. கைவிரல்களால் சுலபமாய் எடுக்கமுடியாத சிறு உலோகத்துண்டுகளை எடுப்பதற்கு எல்லாத்தொழில்களிலும் சிறு காந்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. ஔஷத விஷயத்தில் இக்காந்தமோ கண்ணில்பட்ட சிறு இரும்பு அல்லது எஃகுத் துரும்புகளை எடுப்பதற்கும், தேகத்தில் சாதாரணமா யெடுக்கமுடியாயல் தைத்திருக்கும் ஊசிகள் அல்லது உலோசத்துண்டுகள் இவற்றை எடுப்பதற்கும் உபயோகமாகின்றது. வகை தெரியாமல் ஒருடஜன் ஊசிகளை விழுங்கின ஒரு தையற்காரன், இவ்விதமான சிகிச்சையால் காப்பாற்றப்பட்டான். இன்னம் வைத்திய முறையிலும், புண், பிளவை இவைகளின் சதை வளர்ப்பைத் தின்பதிலும், இரத்த சம்பந்தமான வியாதிகளைக கண்டிப்பதிலும் உபயோகப்படுகிறது. ஒருவன் பிச்சுவாவினாலோ, ஈட்டியாலோ குத்துப்பட்டு, அதன் நுனி தன் உடலில் தங்கிவிட, அதைக் காந்தத்தால் எடுத்துவிட்டான். அனேக வருஷங்களாக ஒருவனுக்கு மோவாய்க் கட்டையில் உண்டாயிருந்த புண் ஆறாமலே யிருந்து, கடைசியாக காந்த சிகிசசையால் அனேகம் எஃகுப்பொடிகள் அந்தப் புண்ணினின்றும் எடுபட்டுச் சொஸ்தமாயிற்று.—சுதேசமித்தரனில் வி. கெ. எம்.

# LAW.
## சட்டம்.

### Money Order Coupon.

மணியார்டர் கூபன்.—இப்போது மணியார்டர் கூபன்களை ஒரு ரிக்கார்டாக உபயோகிக்க முடிகிறதில்லை. ஏனெனில் நாமே ஒரு மணியார்டர் பாரத்தைக் கிழித்து கூபனில் எழுதிக்கொண்டால், அதற்கும் தபாலாபீஸால் டிலிவரியான கூபனுக்கும் வித்தியாஸம் காணோம். ஆகவே ஷ கூபனில் ஒரு டிலிவரி முத்திரை குத்தப்பட்டால் அது ஒரு ரிக்கார்டாகவும், போஸ்டாபீஸால் டிலிவரியான தென்பதற்கு முத்திரை அத்தாட்சியாகவும் இருக்கும். டிலிவரி முத்திரை போட இடமில்லையே என்று கருதக்கூடும். பின்பக்கத்தை முத்திரை குத்துவதற்கு உபயோகப்படுத்தலாம். இதை போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

### Exorbitant Interest.

அநியாய வட்டி.—குறித்த தேதியில் பணம் கொடுக்காத பக்ஷத்தில் நூற்றுக்கு முன்னூறு வீதம் வட்டி கொடுக்கவேண்டு மென்னும் ஷரத்தானது தண்டனையாக எண்ணப்படும். அது செல்லமாட்டாது.

### Difference between Lawyers and Judges.

ஜட்ஜிகளுக்கும் வக்கீல்களுக்கு முள்ள வித்தியாஸம்.—

(1) ஜட்ஜிகள் ஒருவருக்கொருவர் கூடுமான வரையிலும் உதவிசெய்து கொள்ளுவார்கள். வக்கீல்கள் ஒருவரை யொருவர் தாழ்த்த வழிதேடுவார்கள்.

(2) ஜட்ஜிகள் எங்கேபோனாலும் மதிக்கப்படுகிறார்கள்; வக்கீல்களோ அலக்ஷியஞ்செய்யப்படுகிறார்கள்.

(3) ஜட்ஜிகளுக்கு மாஸ மாஸம் சம்பளம் வருகிறது; சம்பளமும் சீரானதாயிருக்கும் வக்கீல்களுக்கு பீஸ்கிடைக்கிறது; ஆனால் விசேஷமாய் ஸ்வல்பமாயிருக்கிறது.

(4) ஜட்ஜிகள் சம்பளங்களை உயர்த்தவேண்டிய விஷயங்களில் வக்கீல்கள் மெஜாரிட்டியாய்ப் பேசுவார்கள். ஆனால் வக்கீல்களுடைய பீஸை உயர்த்தும் விஷயத்தில் ஜட்ஜிகள் மெஜாரிட்டியாய் தடைசெய்வார்கள்.

(5) ஜட்ஜிகள் மடஸாம்பிராணிகளா யிருந்தாலும் மிகப் படித்தவரென்றே ஜனங்கள் சொல்லுவார்கள். லாயர்கள் மஹாமேதாவிகளா யிருந்தாலும் ஒன்றும் தெரியாதவர்களென்று எண்ணப்படுவார்கள்.

(6) ஜட்ஜிகள் சிலஸமயங்களில் தப்பிதம் செய்கிறார்கள். அதற்காக வக்கீல்கள் தாங்கள் ஜவாப்தாரியாகவேண்டி வருகிறது.

(7) ஜட்ஜிகளுக்கு எல்லாவித ஸ்வதந்தரமுமுண்டு; லாயர்களுக்கு ஒருவித ஸ்வதந்தரமும் கிடையாது.

(8) ஜட்ஜிகள் வக்கீல்களை அவமதிப்பாய் சோபிக்கலாம். வக்கீல்கள் தலைவணங்கி அப்படியாவென்று புன்னகை செய்யவேண்டும்.

(9) ஜட்ஜிகள் எஜமான்கள், லாயர்கள் அவர்களுடைய ஊழியக்காரர்கள்.

(10) ஜட்ஜிகள் தங்களுடைய ஒதுக்கத்தினால் உயர்வையடைகிறார்கள். வக்கீல்கள் தங்களுடைய கடிய உழைப்பினால் உயர்வையடைகிறார்கள்.

(11) ஜட்ஜிகளுடைய பேருக்கு அழிவில்லை. வக்கீல்களுடைய பேர் அவர்களோடேயே போய்விடுகிறது.

(12) ஜட்ஜிகள் பப்ளிக் உத்தியோகஸ்தர்கள். வக்கீல்களோ பப்ளிக் வேலைக்காரர்கள்.

(13) லாயர்களில் கொஞ்சம்பேர் பணக்காரர்களைத்தவிர அநேகமாய் ஏழைகளே ஜாஸ்தி.

இவர்கள் இரண்டுபேர்களுக்கும் இவ்வளவு வித்யாஸங்கள் இருந்தபோதிலும் லாயர்கள் செய்கை ஆச்சரியிக்கத்தக்கதே. லாயர்கள் தங்களுடைய ரக்ஷணைக்காக ஒரு சங்கம் ஏற்படுத்துவதுவழக்கம். ஏற்படுத்தினதும் முதல் முதலில் அவர்கள் செய்வதென்ன வென்றால், தங்களுக்கு மத்தியில் ஜட்ஜிகளை வரவேற்று அவர்களுக்கு தக்க மரியாதை செய்வதேயாம். இந்த மரியாதையின் அறிகுறி என்ன வென்றால், ஜட்ஜிகளும், வக்கீல்களுடைய நிலைமையை உயர்த்துவதிலும் அவர்களுடைய உரிமைகளை ஆதரிப்பதிலும், உதவி புரிவார்களென்பதே. வக்கீல்களுக்கு தங்களுடையவும் ஜட்ஜிகளுடையவுமான உரிமைகள் முழுமையும் எதிரிடையாயும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதும் இருக்கின்றன என்பது தெரிந்தும் இந்தமாதிரி செய்கிறது ஆச்சரியந்தான் என்று ஒருவர் எழுதுகிறார்.

# MEDICINE.
# வைத்தியம்.

**Training School for Nurses.**

இந்தியத் தாதிமார்களைப் பழக்க ஒரு ஸ்கூல்.—ஆமிதாபாத் விக்டோரியா ஜூபிலி ஆஸ்பிடலை யொட்டி இந்திய ஸ்திரீகளைத் தாதிமார் வேலைக்கும் மருத்துவச்சி வேலைக்கும் பழக்க ஒரு ஸ்கூல் ஸ்தாபிப்பதற்கு ரூபாய் 1,15,000 ஆமிதாபாத் கோடீசுவரப் பிரபுவாகிய ஸர் சினுபாய் மாதவலால் கொடுத்திருக்கிருரென்று தெரிகிறது. பம்பாய் கவர்ன்மெண்டார் 30,000 ரூபாய் செலவு செய்து அந்த ஸ்கூலுக்குக் கட்டிடம் கட்டுவார்களெனப்படுகிறது. அந்த ஸ்கூல் 7-வது எட்வர்டின் பேரால் அழைக்கப்படும்.

**Hygienic Principles Concerning the Skin.**

தோலைப்பற்றிய ஸுகாதார ஒழுங்குகள்—சரீரமெங்கும் தோலினல் மூடப்பட்டிருக்கிறதென்பது யாவரும் அறிந்த விஷயம். இது அவசியம் என்பது நன்கு விளங்கும். மரத்திற்குப் பட்டை எப்படி அவசியமோ, அதுபோல் உடலுக்குதோல் அவசியம்.

1. தோலானது எண்ணிறந்த வியர்வை தாரைகளால் மூடப்பட்டிருக்கும். வியர்வையில் கலந்திருக்கும் தண்ணீரையும், நோயைப் பிறப்பிக்கும் சில கிருமிகளையும், மற்றும் சரீரத்தில் நிமிஷந்தோறும் உண்டாகும். நஞ்சு வஸ்துக்களையும், இத் தாரைகள் வெளியே அப்புறப்படுத்துகின்றன. சரீரமெங்கும் இவைகள் ஒன்ருேடொன்று நெருங்கி யிருக்கிறதினல் ஒவ்வொன்றும் தன் தன் தொழிலைச் செய்வது அவசியம். இல்லாவிட்டால் மேற்படி தாரைகள் அழுக்கு வஸ்துக்களால் அடைபட்டிருந்தால், சரீர கசிவுகளை வெளியே தள்ளுகிற மற்ற அவயவங்களுக்கு இரட்டிப்பான வேலை ஏற்படுகிறது.

2. தோலின் இன்னெருதொழில் ஸ்பரிச உணர்ச்சி. தோலின் உள் தகடுகளில் நரம்புகளின் முனைகள் சந்திக்கின்றன. விரல்நுனி, உள்ளங்கை, உதடு, உள்ளங்கால், இவைகளில் மற்ற பாகங்களை விட அதிகமாய்க் காணலாம். இதை ஒவ்வொருவரும், தாமே நேரில் பரிசீலனை செய்து அறிந்து கொள்ளலாம்.

3. சீதோஷ்ணத்தை ஸமப்படுத்தல் மற்ருெரு தொழில். தோலின் உள் அடுக்குகளில் இருக்கும் ரத்தக் குழாய்கள் சரீரத்தின் உஷ்ணத்தை மிதமாக்கவோ அதிகரிக்கச் செய்யவோ உதவுகிறேன். மிதமான ரத்த ஓட்டம் தேகமெங்கும் இருக்கவேண்டுமானல் தேகாப்பியாஸம் அவசியம். தேகாப்பியாஸத்தினல் ரத்தம் அதிக தீவிரமாய் ஓடுகிறது மல்லாமல், வியர்வை தாரைகளும் இரட்டிப்பான வேலையைச் செய்யக்கூடும்.

4. வியர்வையின் அவசியம். வியர்வை காண்கிற வரையிலும், சிலர் தேகாப்பியாஸம் செய்கிறதில்லை. இது பெருந்தப்பு. சுடச்சுட வெந்நீர் ஸ்நானம் செய்கிறதினலுண்டாகும் வியர்வையைவிட தேகாப்பியாஸத்தினல் உண்டாகும் வியர்வை அதிக சிலாக்கியம். முந்தினமுறையைவிடப் பிந்தின முறையில் அதிகமான விஷ ஸத்துகள் வெளியேறுகின்றன.

5. ஸ்நானத்தின் அருமை. ஒவ்வொருநாளும் ஏதாவதொரு விதமான ஸ்நானம் செய்வது அவசியம். தோலில் அதிகமான ரத்தம் ஓடவேண்டுமானல் குளிர்ந்த ஜலத்தில் இரண்டொரு நிமிஷம் ஸ்நானம் செய்யவேண்டும். நெடுநேரம் ஸ்நானம் செய்தால் அதிக ரத்தத்தைக்கொண்டு போகாமல் அதைக் குறைத்துவிடுகிறது. சரீரசுத்திக்கு இளஞ்சூடான தண்ணீர் அவசியம்.

6. சிலருக்கு மற்றவர்களைவிட மிருதுவும் கூச்சமுமுள்ள தோல் இருக்கலாம். அவ்வித ஜனங்கள் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்து குளிர்ந்த ஆகாயத்தில் தங்கள் தேசத்தைத் திறந்து வைப்பது மிக்க பலந்தரும்.

7. சில சரீரங்கள் அதிக வரட்சியும் சடை சடையுமாயிருக்கும். இதற்குக் காரணம் மலபந்தம் அல்லது நீர்தாரைகள் தங்கள் வேலையை ஸரியாய் செய்யாதிருத்தல். பத்தியமான ஆகாரம் அவசியம். புதிய காய்கறிகள், புதிய பழவர்க்கங்கள் உபயோகித்தல் வேண்டும். சுத்தமான ஆகாயத்தில் தினந்தோறும் தேகாப்பியாஸம் செய்தல் ஆவசியம்.

8. "உம்முடைய மூளை தெளிவாய்த் தோன்ருவிட்டால், அதாவது உம்முடைய மூளை சேர்போல குழம்பாயிருந்தால், உம்முடைய தோல் தெளிவாய் இருக்கிறதா என்பதை தயவுசெய்து கவனியும்." தாற்பரியம் என்னவெனில், உம்முடைய தோலும் மற்ற அவயவங்களும் கழிவு ஸத்துக்களைக் கிரமமாய் வெளியே தள்ளுகின்றனவா என்பதைக் கவனிப்பதேயாம்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### Carrying a Mountain.

மலையைத் தூக்குதல்.—ஆறுமாசம் வயிறு நிறையச் சோறு போட்டால் மலையைத் தூக்குவேன், என்று ஒருவன் உறுதியாய்ச் சொன்னான். சொல்லவே ஊரார் எல்லாரும் பணம் சேகரித்து ஆறு மாசம் அவனுக்கு ஆவல்தீர ஆகாரம் அளித்தார்கள். பிற்பாடு அவன் ஸாமர்த்தியத்தைப் பரீக்ஷிக்கும் பொருட்டு ஊராரெல்லாரும் அவனை இட்டுக்கொண்டு இரண்டு மைல் தூரமிருந்த மலைக்குப்போய் அதைத் தூக்கும்படி சொல்ல, "நீங்களெல்லாரும் சேர்ந்து மலையை எடுத்து என் தலையில் வைக்கும் பக்ஷத்தில், நான் தூக்குவதில் தடையில்லை" என்று அவன் பதில் சொன்னான்.

### The Traveller and Tin Smith.

கன்னானும் வழிப்போக்கனும்.—கன்னான்—வழியில் எதிர்ப்பட்ட பாட்டைசாரியுடன் "அண்ணே! அண்ணே! எவூர் இங்கிருந்து எவ்வளவு தூரம் இருக்கிறது?

பாட்டைசாரி—சுமார் இருபது மைல் இருக்கும்.

கன்னான்—இருபது மைல் எதப்பா! அவ்வளவு தூரம் இராதென்று தோன்றுகிறது.

பாட்டைசாரி—பனிரெண்டு மைலுக்குக் குறையாது.

கன்னான்—நாலு மைலை விட அதிகமாக இராதென்று தோன்றுகிறது.

பாட்டைசாரி—எனக்கும் அப்படியே தோன்றுகிறது.

கன்னான்—அவ்வூரே நீ அறியாய்போலும்.

பாட்டைசாரி—ஆம், நான் அவ்வூரானே அல்ல.

### Mother and Child.

தாயும் குழந்தையும்.—

தாய்.—குழந்தாய்! நான் படிக்கிறேன். நீ சப்தம் செய்யாமலிருந்தால் காலணா தருவேன்.

குழந்தை—அம்மா! நான் கத்தாம லிருக்கிறேன். பிறரையும் கூச்சல் போடாவண்ணம் பார்த்துக்கொள்ளுகிறேன்.

தாய்.—அப்படிச்சொல். என் கண்ணே! உன் புத்திக்கு மெச்சினேன். (முத்தமிட்டும் படிக்கிறாள்.)

காக்காயொன்று காகாகா என்று கத்துகிறது. குழந்தை அதனிடமோடி "கத்தாதே! ஐயோ கத்தாதே! என் காலணா போய்விடுமே! கத்தாதே. என்று கெஞ்ச காக்காய் முன்னிலும் அதிகமாய்ச் சப்தமிடவே, குழந்தை கோ வென்று கத்திற்று. தாய் திடுக்கிட்டு என்னடா கண்ணே என்று வினவினாள். காக்காயால் தன் காலணா போய்விட்டதென்று குழந்தை விம்மி விம்மி அழுதது. தாய் சிரித்து மகனையணைத்து ஸமாதானம் செய்தாள்.

### A Story about Lord Carmichael.

லார்டு கார்மைக்கேலைப்பற்றிய ஒரு கதை.—தமது சுற்றுப் பிரயாணத்தில் ராஜஷாய்க்குப் போய்க்கொண்டிருக்கையில் ஓரிடத்தில் அவர் இறங்கினவுடன் ஒரு பிச்சைக்காரன் கூட்டத்தை இடித்துக்கொண்டு முன்னே போய் கையை நீட்டினான். நீட்டவே ஒரு நொடிப்பொழுது கூட யோசிக்காமல் லார்டு கார்மைகேலும் தம்முடைய கையை நீட்டி பிச்சைக்காரன் கையைப் பிடித்து குலுக்கினார். அங்கு சூழ்ந்திருந்த கூட்டத்தார் கவர்னருடைய காருண்யத்தை வியந்தார்கள்.

### Master and Servant.

வேலைக்காரனும் எஜமானனும்.—வேலைக்காரன், ஐயா, எஜமானவர்களே, நான் என்ன செய்வேன். சாப்பாட்டுக்கில்லை, பிள்ளை குட்டிகளெல்லாம் பட்டினியா கிடக்குதுங்க, சம்பளம் கொடுங்க, இன்றைக்கு நீங்கள் பணம் கொடுத்தால்தான் எங்களுக்குச்சாப்பாடு.

எஜ.—கணக்கப்பிள்ளை இவனுக்கு எத்தனைமாச சம்பளம் பாக்கி.

கண.—3 மாச சம்பளம். மாசம் 7 ரூபாய் வீதம் 21 ரூபாய் பாக்கி.

எஜ.—நல்லது, அடே பிரமாதமான 3 மாச சம்பளம் பாக்கிக்கு நிக்கிறே.

வேலை.—ஐயா, சாப்பாட்டுக்கு ஒரு மணி அரிசி கூட கிடையாது.

எஜ.—எங்கேயாவது கடன் வாங்கிக்கடா, போடா.

வேலை.—ஐயா, எனக்குக் கடன் குடுக்க யாரும் நம்பமாட்டாங்க.

எஜ.—அடே, எனக்கே ஆச்சர்யமாயிருக்கு, என் வேலைக்காரனாகிய உனக்கு யாரும் கடன் கொடுக்க மாட்டார்கள் என்று சொல்ல வெட்கமில்லையா?

வேலை.—3 மாச சம்பளம் நான் கொடுக்கவில்லை, இவனுக்கு கடன் கொடுக்கலாம் என்று ஒரு சீட்டு எழுதிக்கொடுங்கள், அதையாரிடமாவது காண்பித்து கடன் வாங்கிக் கொள்ளுகிறேன்.

# CURIOSITIES.
## விநோதங்கள்.

**Watches.**

கைக்கடியாரங்கள்.—முதன்மையாக ஜெர்மனியி லுள்ள நூரம்பர்க் என்னு மூரில் 1477-ம் வருஷம் செய்யப்பட்டன.

**Printing Press.**

அச்சடிக்கும் ப்ரேஸ்.—அச்சடிக்கும் ப்ரெஸ் முத லில் 1495-ம் வருஷத்தில் டென்மார்க்கின் பிரதான பட்டணமாகிய கோபன்ஹேகனில் ஏற்படுத்தப்பட் டது.

**The Eagle's Sense of Smell.**

கழுகுகளின் மூக்கிந்திரிய விசேஷம்.—கழுகு கள் 40 மைல் தூரத்திலுள்ள உணவுப் பொருள் களை வாஸனையா லறிந்து கொள்ளும் மூக்கிந்திரிய முடையனவாம்.

**A Curious Birth.**

ஓர் அதிசயப்பிறவி.—ஸமீபத்தில் எழும்பூர் வெங் குப்பிள்ளை தெருவில் ஒருவருக்கு ஒரு அதிசயமான ஆண்குழந்தை ஜெனித்தது. அக்குழந்தை மண்டை திறந்து மூளை தெரியும்படியிருந்தது. உடல் பெரு த்து, தலை சிறிதாயும், கண்கள் பெரிதாயும், அக்கண் களுக்குமே இரண்டு கண்களிருப்பதுபோல் பள் ளம் விழுந்தும் இருந்தது. பிறந்ததுமுதல் அக்குழந் தை அழாமலே யிருந்து மறுநாள் இறந்துவிட்டது.

**Glass Pavement.**

கண்ணாடி தளவரிசை.—ப்ரான்ஸ் தேசத்தில் லியோன் என்ற பட்டணத்தில் சிறிது காலமாய் கண்ணாடித் துண்டுகளால் தளவரிசை போட்டுக் கொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு துண்டும் எட் டங்குல சதுர முடைத்தானதாயிருக்கிறது. இந்தத் துண்டுகள் எவ்வளவு நெருக்கமாயும் சந்தில்லாமலும் பரப்பப்படுகின்றன வெனில் தண்ணீர் கிஞ்சித்தும் உள்ளே செல்லமுடியாது. இவ்விதமாகக் கண்ணாடித் துண்டுகளால் பரப்பப்பட்ட தளவரிசையானது பார் வைக்கு ஓர் பிரமாண்டமான சதுரங்கப் பலகைபோ லிருக்கிறது. அதன் விசேஷ அனுகூலங்களென்ன வெனில், ஸதாரண கல் தளவரிசையைவிட அது அதிக உறுதியாயிருக்கிறது. உஷ்ணம் அல்லது குளி ரை அது சுலபமாய் கிரகிக்கிறதில்லை. ஸதாரண கற்களைவிட அதிக காலம் நீடிக்கக்கூடியதும் அதிக ஸரஸமாய்க் கிடைக்கக்கூடியதுமாயிருக்கிறது. மேலும் விஷக்கிருமிகள் உற்பத்தியாகிறதற்கும் பெருகிறதற் கும் அதில் வஸதியில்லையாம். அநேக கனதனவந்தர் கள் வீட்டில் இந்தப் புதுவகையான தளம் போட ஆரம்பித்துவிட்டார்களாம்.

**A Huge Child.**

ஒரு பெரிய குழந்தை.—அமெரிக்காவிலுள்ள கா னடா தேசத்தில் ஒரு குழந்தைக்கு 26 மாஸம், அதா வது இரண்டு வருஷம் இரண்டு மாதந்தானாகிறது. அதன் நிறை 127 ராத்தல்களாம். அதன் மார்பளவு 40 அங்குல மிருக்கிறதாம். ஹௌதாரன் என்னும் கிராமத்திலுள்ள ஒரு குடியான தம்பதிகளுக்குப் பிற ந்த இக்குழந்தையை இதன் பெற்றோர் தூக்கமுடிய வில்லையாம். இருபது அல்லது முப்பது வயதுள்ள ஸாமான்ய ஜனங்களே 120 ராத்தலுக்கு அதிகமாக நிறையிருப்பதில்லை யென்றால், இந்த இரண்டு வரு ஷக்குழந்தை ஸ்வல்பமாகத்தான் நிறை கொண்டிரு க்கவேண்டும். அப்படிக்கிருக்க, இக்குழந்தை 127 ராத் தல்நிறையிருக்கிறதென்றால் இதை மனுஷப்பிறவி யென்று சொல்லலாமா? ராக்ஷஸப் பிறவியென்றே சொல்லுதல் வேண்டும். இந்தச் சிசு வளர இதன் சரீர ஆகிருதியும் வளர்ந்து ஆஜானுபாகு வாகுமென் பதற்குத் தடையுமுண்டோ?

**Bull-warriors.**

எருது வீரர்.—குதிரையிலேறிச் செல்லும் போர்ச் சேவகர்களை குதிரை வீரரென்று கூப்பிடுகிறார்கள். எருதுகளில் ஏறிச் சென்றால், எருது வீரரென்று சொல்லவேண்டுமல்லோ? ஆப்பிரிக்காவின் கீழ்க்கரை யில் சேந்தெ மோர்வே என்று ஓர் மாகாணமிருக் கிறது. அது மதகாஸ்கார் தீவில் ஆளுகை செலுத்தி வரும் பிரான்சு கவர்னர் ஜெனரலுடைய அதிகாரத்தி லிருக்கிறது. அந்த மாகாணத்தில் குதிரைகளுக்குப் பதிலாக எருதுகள் முதுகின்மேல் ஏறிச் சவாரி செய் யும் ஓர் பட்டாளமிருக்கிறது. அந்த பட்டாளத்தைச் சேர்ந்த யுத்த வீரர்கள் ரிஷபங்களைக் குதிரைகள் போல் பழக்கி ஸகல கவாத்துகளிலும் அவைகளையே உதவிகொள்ளுகிறார்கள். அந்த மிருகங்கள் ஒல்லி யாயும் உயரமாயுமிருக்கின்றன. சதை பெருத்த மாடு

களைவிட அவைகள் பலமுள்ளவைகளாயிருக்கின்றன. வெகு விசையாயும் ஓடுகின்றனவாம். இனிமேல் எருது வீரர்களைப் பார்த்து எருமைக்கடா வீரர் பட்டாளம் ஏர்படுத்துவார்கள்போலும்.

**A Dog's Obsequies.**

சுவானத்தின் உத்தரக்கிரியை.—இங்கிலீஷ்காரர்களுக்கு நாய்களிடம் அதிக அபிமானமுண்டு. அவைகள் மாண்டால் பூமியில் புதைத்து ஸமாதி கட்டி அதற்கு நற்கதி யுண்டாக ஜெபம் செய்வது வாடிக்கை. ஒரு நாடக கம்பெனியில் ஒரு மனிதனும் அவனுடைய நாயும் இருந்தார்கள். திடீரென்றுண்டான நெருப்பால் நாயும் அதன் ஸொந்தக்காரனும் மாளவே சவங்களைத்தேடி ஸ்மசானத்தில் புதைத்தார்கள். மனிதர்களைப்புதைக்குமிடத்தில் சுவானத்தை வைத்தது தப்பென்று அனேகர் ஆக்ஷேபித்தார்கள்.

ஆங்கிலேய கவிவாணரான லார்ட் பைரன் தனது சுவானத்தை ஓர் உற்பானவனத்தில் புதைத்து அதன் நினைவுக்காக ஓர் சிலாகட்டிடம் கட்டி கவிகளையும் வரைந்தார். ஷி கவி அத்துடன் திருப்தி அடையாமல் தான் எழுதியிருந்த மரணசாஸனத்தில் அடியில் வருமாறு வரைந்தார். "நான் மாண்டதும் என் சவத்தை என் அன்புள்ள போட்ஸ்வேன் என்னும் நாயின் ஸமாதிக்கருகில் புதைக்கவேண்டும்"

## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

**Cleaning Milk Glass.**

கண்ணாடி பால் டம்ளரை சுத்தி செய்தல்.—பால் வைக்கும் க்ளாஸ் அதாவது கண்ணாடி டம்ளரை எடுத்ததும் ஸோப்புக் கரைத்த வெந்நீரை விட்டுக் கழுவக்கூடாது. முதலில் பச்சை ஜலத்தில் கழுவி விட்டு பிறகு ஸோப்புக் கரைத்த வெந்நீரில் கழுவ வேண்டும். இப்படிச் செய்தால் டம்ளர் சுத்தமாயும் துல்யமாயு மிருக்கும்.

**To Make Old Silk New.**

பழையபட்டை புதிதாக்குதல்.—பழையபட்டை புதிதாக்கவேண்டுமானால் தேயிலையைக் காய்ச்சின கஷாயத்தைக் குளிரச்செய்து கொஞ்சம் நவசார திராவகம் சேர்த்து பஞ்சால் துடைக்கவும்.

**Characteristics of Good Pearls.**

நல்லமுத்தின் குணங்கள்.—நக்ஷத்திரங்கள்போல ஒளியும் உருட்சியும், காற்றேறு, மண் ஏறு, கல் ஏறு, நீர்சிலை முதலிய குற்றமில்லாமையும், கையினால் எடுத்தால் கெட்டியாயும் கண்ணுக்கு நன்றாய் இருத்தலும் ஸ்படிகம்போல் இருத்தலும் உயர்ந்த நன்முத்தின் குணங்களாம்.

**Always Cover the Flour.**

மாவை மூடிவைக்கவேண்டும்.—பல நாற்றங்களை கிரகிக்கும் சக்தி மாவினிடத்திலிருப்பதால் எந்த தானியத்திலிருந்து மாவரைத்தாலும் அந்த மாவை எப்போதும் மூடிவைத்தல் நலம்.

**To Melt Frozen Honey.**

கட்டியான தேனை உருக்குதல்.—தேன் கட்டிவிட்டாலும், மணிகள் திரண்டிருந்தாலும் அடுப்பில் அகண்டபாத்திரத்தில் ஜலம் கொதிக்கச்செய்து, அந்த ஜலத்தில் தேன்பாத்திரத்தை வைக்க, தேன் உருகும். நெருப்பின்பேரில் நேராய்த் தேனைவைத்தால் தேன் மணம் ஒழிந்துபோம்.

**Saved her Husband from a Snake.**

பாம்பின் வாயினின்றும் பர்த்தாவைக் காத்தாள்.—மிஸ்டர் பார்ட்டர் என்னும் கீழ் இந்திய ரெயில்வே ட்ரைவர் ஒருவர் தமது வீட்டில் ஒரு நாளிரவு தூங்கிக்கொண்டிருந்தபோது தெருத் திண்ணையில் கட்டப்பட்டிருந்த பூனை வீறிட்டு கத்திற்று. திடீரென்று கதறுவதன் காரணம் யாதென்று வெளியே வந்து பார்க்க ஒன்றும் காணாது அப் பூனையை கோபத்துடன் உதைத்தார். உடனே இவரது கண்ணுக்குத் தெரியாமல் கீழேகிடந்த ஒரு பாம்பு இவரது துடையை செவ்வையாய்க் கவ்விக் கொண்டது. மிஸ்டர் பார்ட்டர் வலிபொறுக்காமல் உள்ளே தூங்கிக்கொண்டிருந்த தம் மனைவியைக் கூப்பிட்டார். இம்மாது எழுந்திருந்து ஓடிவந்து பாம்பை அடித்து தூர எறிந்து தனது கணவன் துடையில் எந்தவிடத்தில் பாம்புகடித்ததோ அந்த இடத்தை தமது வாய் கொண்டு அப்பாம்பின் விஷத்தை எடுத்தெறிந்தாள். பிறகு பார்ட்டர் அவர்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு ஸௌக்கியமடைந்தார். அப்பாம்பின் விஷத்தை வாய்கொண்டு உருஞ்சிய மிஸஸ் பார்ட்டருக்கும் யாதொரு கெடுதலுமில்லை. மிஸஸ் பார்ட்டர் அவர்களது வாயில் புண்ணிருந்திருந்தால், பிழைப்பது அரிதாகும். இம்மாது தனது புருஷன் உயிரைக்காப்பாற்று வதிலெவ்வளவு அபிமானம் காட்டியுள்ளார், பாருங்கள்.

# ECONOMIC LITERATURE.

## பொருளாதார ஸம்பந்தமான பிரசுரங்கள்.

சென்னை விவஸாய இலாகாவில் கிடைக்கக்கூடிய புஸ்தகங்களின் ஜாப்தா:—

பிரிவு A.

| நெ. | சிறு புஸ்தகங்கள். | விலை. ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 2 | போடு என்னும் புகயிலையின் வியாதிகளைப்பற்றிய சிறு புஸ்தகங்கள் ... | 0 | 0 | 9 |
| 6 | தென் இந்தியா கால்நடைத் தீனி ... | 0 | 1 | 3 |
| 9 | சென்னை ராஜதானியிலுண்டாகும் பருத்தி ... | 0 | 1 | 3 |
| 19 | திருநெல்வேலியில் பருத்தி விளைவதின் ஓர் விசாரணையின் முடிவின் அறிக்கை ... | 0 | 3 | 0 |
| 22 | விவசாய சம்பந்தமான தெலுங்குப் பழமொழிகளின் திரட்டு ... | 0 | 3 | 0 |
| 24 | சென்னை ராஜதானியில் விளையும் வயல் தானியங்களின் பெயர்கள் ... | 0 | 3 | 0 |
| 25 | பனையும் அதன் உபயோகங்களும் ... | 0 | 1 | 3 |
| 26 | சர்க்கரை ஆலைகள் ... | 0 | 0 | 9 |
| 27 | கோயம்புத்தூரில் புல் பயிரிடல் ... | 0 | 1 | 3 |
| 28 | நிலக்கடலைஸாகுபடி ... | 0 | 2 | 0 |
| 29 | சென்னையில் கஞ்சா பயிரிடுவதும் உண்டாக்குவதும் ... | 0 | 1 | 3 |
| 30 | கோயம்புத்தூரில் அமெரிகன் கத்தாழைநார் எடுப்பதின் குறிப்புகள் ... | 0 | 0 | 6 |
| 31 | தென்னிந்தியாவில் தொழுஎருச் சேர்பதைப் பற்றியது ... | 0 | 0 | 6 |
| 32 | தண்ணீர் இறைக்கும் யந்திரங்களின் பரிசோதனை ... | 0 | 8 | 0 |
| 34 | விவசாய சம்பந்தமன தமிழ்ப் பழமொழிகள் ... | 0 | 6 | 0 |
| 38 | தண்ணீர் இறைக்கும் யந்திரங்கள் (அச்சிலில்லை) ... | 0 | 2 | 0 |
| 25 | நிலக்கடலை ... | 0 | 1 | 3 |
| 27 | தென் ஆற்காடு ஜில்லா பன்றுட்டி என்னுமிடத்தில் பயிர் செய்யப்படும் நிலக்கடலை ... | 0 | 1 | 3 |
| 39 | தென் ஆற்காடு ஜில்லாவில் விளையும் கரும்பு ... | 0 | 0 | 6 |
| 40 | விதைக் கலப்பையும் அதன் ஸம்பந்தமாய் உபயோகப்படுத்தப்படும் கருவிகளும் ... | 1 | 0 | 0 |
| 41 | நிலக்கடலைப் பயிர் (நிலக்கடலையைக் கூறுபாடு செய்ததின் சில அறிக்கைகள்) ... | 0 | 0 | 9 |
| 42 | கால்நடைகளின் பேரிலும், குதிரைகளின் பேரிலும் காணும் ரோம அடயாளங்களைப்பற்றி நம்மவர்களின் கோட்பாடு ... | 0 | 0 | 6 |
| 23 | கோதாவரி, கஞ்சம் ஜில்லாவில் விளையும் கரும்பு ... | 0 | 3 | 0 |
| 25 | தென்னிந்தியாவில் தேயிலைச் செடிகளுக்குண்டாகும் ஓர்வித பூச்சி வியாதி | 0 | 2 | 3 |
| 46 | சென்னையில் கரும்பு சாகுபடி ... | 0 | 2 | 0 |
| 47 | வாழைநார் பிரிப்பதற்குரிய சிறு யந்திரங்களின் குறிப்பு ... | 0 | 2 | 0 |
| 48 | கோதாவரி ஜில்லா சாமல்கோட்டை என்னுமிடத்தில் கரும்பு பயிர் செய்து பரீட்சிப்பதைப் பற்றிய குறிப்பு | 0 | 0 | 9 |
| 49 | சென்னை ராஜதானியில் சோளப்பயிருக்குண்டாகும் வியாதிகள் ... | 0 | 2 | 0 |
| 50 | சென்னை ராஜதானி தக்ஷண ஜில்லாக்களில் கரும்பு பயிரிடல் ... | 0 | 1 | 0 |
| 51 | 1903—1904-ல் சாமல்கோட்டை சர்க்கார்க்கரும்புப் பாரத்தின் நடந்தேறும் குறிப்புகள் ... | 0 | 3 | 0 |
| 52 | அகத்திப்பயிர் செய்தலும் அதன் அடியில் பயிரிடப்படும் வெற்றிலைக்கொடியின் பயிரும் அதனுல் அந்த அகத்தியின் வளர்ச்சியும் ... | 0 | 0 | 9 |
| 53 | மதுரை ஜில்லா திண்டுக்கல்லின் பக்கத்தில் புகையிலையைப் பயிரிடுதலும் அதைப் பதம் பண்ணுதலும் ... | 0 | 0 | 6 |
| 54 | மெல்ரோசபுரத்தில் கிணற்றிலிருந்து குழாய்மூலமாய் நீர் பாய்ச்சுதலைப் பற்றிய குறிப்பு (அச்சிலில்லை) ... | 0 | 3 | 0 |
| 55 | சென்னையில் விளையும் சோள தினுசுகள் ... | 0 | 3 | 0 |
| 56 | பயிரிடப்படும் மிளகு தினுசுகள் ... | 0 | 3 | 0 |
| 57 | தென்னிந்தியாவில் சீமை அத்தி சாகுபடி செய்வதும், அனந்தப்பூர் ஜில்லா பெனுகொண்டா என்னுமிடத்தில் அத்திசாகுபடி செய்வதின் விசேஷங்களைப் பற்றிய குறிப்புகள் | 0 | 1 | 0 |
| 58 | நிலக்கடலை சாகுபடி ... | 0 | 0 | 9 |
| 59 | சணல் ... | 0 | 1 | 0 |

60 தென்னிந்தியா கால்நடைகள் ... 2 0 0
61 திருநெல்வேலி ஜில்லா சிவகிரியில் சொந்தப்பண்ணையில் நெல்சாகுபடி செய்வதின் சீர்திருத்தங்கள் ... 0 0 9
62 திருநெல்வேலி ஜில்லா சிவகிரி சமஸ்தானத்தில் சொந்தப்பண்ணையின் குறிப்புகள் ... 0 6 0
63 நெற்பயிருக்கு எருவிடுதலின் விதிகள் 0 0 3
64 இந்துப்பூரென்னுமிடத்தில் நார்க்கத் தாழை பயிரிடுதல் ... 0 0 3

மேலே கூறப்பட்ட சிறு புஸ்தகங்களில் 59-ம், 60 நெம்பருமுள்ள புஸ்தகங்கள் தவிர மற்றப் புஸ்தகங்கள் அடியிற்கண்டவர்களிடத்தில் பெற்றுக் கொள்ளலாம் :—

கவர்ன்மெண்டு அச்சாபீஸ் சூப்பிரண்டெண்டு, சென்னை.

அக்கிரிகல்சரல் காலேஜ் பிரின்சுபால், கோயம்புத்தூர்.

விவஸாய டிப்டி டைரெக்டர், வடக்கு டிவிஷன், பல்லாரி.

விவசாய டிப்டி டைரெக்டர், தெற்கு டிவிஷன், திருச்சினுபள்ளி.

விவசாய டைரெக்டர், சென்னை,

குறிப்பு.—59-ம் நெம்பர்கொண்ட புஸ்தகம் விவசாய டைரெக்டரிடத்திலும், நெம்பர் 60-வது விவசாய டைரெக்டரிடத்திலும் சென்னை கவர்ன்மெண்டு அச்சாபீஸ் சூப்பிரண்டெண்டு அவர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

## TAMIL LITERATURE.
## தமிழ்க் கல்வி.

**Never Hesitate.**

என்றும் விசனப்படேல்—

1. நன்னெறி வாழ்க்கைக்கு.
2. செய்வன திருந்தச் செய்தற்கு.
3. எளியார் மாட்டு அன்பு பாராட்டுதற்கு.
4. கொள்கை கொள்ளுமுன் தீரவிசாரித்தற்கு.
5. பேசுமுன் நன்ருக ஆலோசித்தற்கு.
6. கடவுளை வழிபடுதற்கு.
7. நன்றென நினைக்கும் ஒழுக்கம் வழுவாது நிற்றற்கு.
8. பிழையை க்ஷமிக்கும்படி கேட்டுக் கொள்வதற்கு.
9. தீய வழக்கம் தவிர்த்து ஒழிதற்கு.
10. கெட்ட வழியில் செலுத்தும் நட்பு அறுத்தற்கு.
11. கடவுளை ஸ்தோத்திரம் செய்து தியானித்த நேரத்திற்கு.
12. நிலைதவறியவர்க்கு உபகாரம் செய்தற்கு.
13. உயர்குடிப்பிறந்த கனவானபோல் எல்லோருக்கும் மரியாதை செய்தற்கு.
14. பிறர் செய்கைகளில் நன்மையே நாடிக் கொள்ளுதற்கு.

**Old Tamil Works and the Police.**

பழைய தமிழ் நூல்களும் போலீஸாரும்.-பழைய காலத்து தமிழ் நூல்களாகிய "காவடிச்சிந்து," "விறலிவிடுதூது" ஆகிய நூல்களில் இடக்கர் வார்த்தைகளிருக்கின்றனவென்று அவைகளைப் பதிப்பித்த அச்சுக் கூடத்தார்மேல் போலீஸார் குற்றம் சாட்டியிருக்கிறார்களென்று தங்கள் அஸம்மதத்தைத் தெரிவிக்கத் தமிழ் கூட்ட மொன்று ஸமீபத்தில் சென்னப்பட்டணம் தொண்டமண்டலம் ஸ்கூலில் கூடிற்று. அப்படிப் பழைய நூல்களில் குற்றங்கண்டு அவைகளைப் பிரசுரம் செய்யாமல் தடுப்பது பிசகென்று கவர்ன்மெண்டுக்கு எடுத்துக் காட்டும்படி ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டது.

**Thrikuta Rajappa Kavirayar, Kutrala Kuravanji.**

தி, கூட ராஜப்ப கவிராயர், குற்றலக் குறவஞ்சி. மதுரை அருணசலக் கவிராயர் அவர்களால் பதிப்பிக்கப்பட்டது. விலை அணு 6.

**Universal Religious Text Book Part I. Religion In Tamil.**

ஸர்வ ஸமய ஐகமத்ய ஸாரஸங்கிரஹம்.—ப. நாராயண ஐயர் எழுதியது. அணு 4.

**The Leisure Companion.**

பொழுதுபோக்கும் தோழன்.—இது விசித்திர விகடங்களும் புத்திசாலித்தனமான சம்பாஷணைகளும் அடங்கியது. கோயமுத்தூர், சி. எஸ். ராமதுரை அய்யரவர்களால் எழுதப்பெற்றது. விலை அணு 4.

# MISCELLANEOUS NEWS.

## நாநா ஸங்கதி.

### Indian Sugar Industry.

இந்தியசர்க்கரைத் தொழில்—இந்தியசர்க்கரைத் தொழிலே விருத்திசெய்வதற்காக ப்யூஸாரிஸர்ச்சு ன்ட்த் ஸ்டிட்யூட்டில் ஆராய்ச்சிசாலேயில் பனையிலிருந்து சர்க்கரை எடுப்பதைப் பற்றியும் பரீக்ஷைகள் செய்யப்பட்டு வருகின்றன.

### Sericulture in Bengal.

பங்காளத்தில் பட்டுத் தொழில்.—பங்காளகவர்ன்மெண்டால் உதவிசெய்யப்பட்டு வரும் பங்காளபட்டு கமிட்டியார் ஐரோப்பாவிலிருந்து பட்டு செய்வதில் தேர்ச்சி பெற்ற ஒருவரை வரவழைக்கப்போகிறார்கள்.

### Indian Agricultural Service.

இந்திய விவஸாய இலாகா.—விவஸாய ஸம்பந்தமாயுள்ள பாக்டீரியாக்களைப் பற்றித் தெரிந்த ஒரு விவஸாய ஆபீஸரை சீமையிலிருந்து நியமிக்கும்படி இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா மந்திரிக்கு எழுதியிருக்கிறார்களாம். அவ்வாபீஸர் வந்ததும் ப்யூஸா ரிஸர்ச்சு இன்ஸ்டிட்யூட்டில் வேலே செய்வார்.

### Agricultural Engineer for Bombay.

பம்பாயிக்கு ஒரு விவஸாய இஞ்சினியர்.—பம்பாய் ராஜதானிக்கு ஒரு ஐரோப்பிய வியவஸாய இஞ்சினியரை ஏற்படுத்தவேண்டும் என்று பம்பாய் கவர்ன்மெண்டார் இந்தியா மந்திரியைக்கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

### The Sugar Industry.

சர்க்கரைத் தொழில்.—பஞ்சாபில் விவஸாய ரஸாயன சாஸ்திரியாயிருக்கும் ஜெ. எச். பார்ன்ஸ் என்பவரை ஹங்கேரியிலும் ஈஜிப்டிலும் சர்க்கரை செய்யும் முறைகளைத்தெரிந்து கொண்டுவர கவர்ன்மெண்டார் அனுப்ப ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர் இப்பொழுது இங்கிலாந்தில் இருக்கிறார். இந்தியாவிற்கு திரும்பிவரும் பொழுது அத்தேசங்களின் வழியாய் வருவார்.

அதே மாதிரி பம்பாயில் விவஸாய இலாகா டைரக்டராயிருக்கும் கீடிங் என்பவர் சர்க்கரை செய்யும் முறைகளைக்கற்றுக் கொள்ள ஹனலூலு பார் மோஸாஜாவா இந்த தீவுகளுக்குச் செல்வார்.

### Nellore District Conference.

நெல்லூர் டிஸ்டிரிக்ட் கான்பரென்ஸ்.—ஸமீபத்தில் நடந்த நெல்லூர் டிஸ்டிரிக்ட் கான்பரென்ஸில் ஆங்கிலம் கற்காத விவஸாயிகளும் வர்த்தகர்களும் வந்திருந்தார்கள். அந்த ஜில்லாவில் ஒரு காட்சிப்பண்ணை வேண்டு மென்பதும், ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டு மென்பதும், கீழ்த்தரப் படிப்பை ஸ்தல ஸ்தாபனங்கள் முற்படுத்த வேண்டு மென்பதும், கிராமங்களில் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்க வேண்டு மென்பதும், ஜில்லாவில் சில விடங்களில் சில குறைகள் நீக்கப்படவேண்டு மென்பதும், ஜில்லாவின் நன்மையைப்பற்றின விஷயங்களாயிருந்தபடியால் இவைகளைப் பற்றின தீர்மானங்களில் ஜில்லா விவஸாயிகளும் மற்றஸாமானிய ஜனங்களும் அக்கரை பாராட்டி யிருக்கவேண்டும்.

### The S. I. R. Offices.

தென் இந்தியா இருப்புப்பாதை ஆபீஸ்கள்.—தென் இந்தியா இருப்புப்பாதை ஆபீஸ்களில் டிராபிக்மானேஜர் ஆபீஸும் அந்த இருப்பப்பாதை ஏஜெண்ட் ஆபீஸும், ஆடிட் ஆபீஸும், சீப் இஞ்சினீர் ஆபீஸும் திருச்சியில் இருக்கின்றன. அந்த ஆபீஸ்களின் ஹெட் குவார்ட்டர்களை சென்னைக்கு மாற்றிவிட அவ்விருப்புப் பாதை ஹோம்போர்டாரின் அனுமதி கிடைத்து விட்டதென்றும், சென்னையில் ஆபீஸ்கள் கட்டப்பெருந்தொகைகள் ஸாங்க்ஷனாயிருக்கின்றன வென்றும் அறிகிறோம். ஆனால் சென்னை கவர்ன்மெண்டார் ஸிம்லா ரெயில்வே போர்டார், இவர்களின் அபிப்பிராயம் திட்டமாய்த் தெரிகிற வரையில் மேலே, சொன்ன ஆபீஸ்கள் திருச்சியை விட்டுச் சென்னைக்கு மாறிப்போவதைப் பற்றியொன்றும் உறுதியாய்ச் சொல்ல முடியாது.

### Presidents of Taluk Boards.

தாலூக்கா போர்ட் பிரஸிடேண்டுகள்.—அடியிற்கண்ட 9 தாலூக்கா போர்டுகளுக்கு உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்களை பிரஸிடெண்டாக நியமனம் செய்ய சென்னை கவர்ன்மெண்டார் சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்:—

| ஜில்லா | தாலூக்கா போர்டு |
|---|---|
| கோதாவரி | 1. காக்கிஞடா |

| | |
|---|---|
| குண்டூர் | 2½ தென்ஞலி |
| கிருஷ்ணு | 3. பந்தர் |
| மதுரை | 4. மதுரை |
| நெல்லூர் | 5. நெல்லூர் |
| தஞ்சாவூர் | 6. மாயவரம் 7. நாகப்பட்டணம் |
| விசாகப்பட்டணம் | 8. விஜயநகரம் 9. விசாகப்பட்டணம் |

டிஸ்டிரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்டுகள் நியமனஞ் செய்யத்தகுந்தவர்களின் பெயர்களைத் தெரிவிக்கும்படியாய் கேட்கப்பட்டிருக்கிருர்கள். வைஸ் ப்ரெஸிடெண்டுக்கு நிர்வாக அதிகாரத்தைக் கொடுப்பது நியமனம் பெற்ற ப்ரெஸிடெண்டைப் பொறுத்ததாகும். அவர் ஒவ்வொரு அரை வருஷத்திலும் 30 நாட்களுக்குக் குறையாமல் இன்ஸ்பெக்ஷன் செய்வதற்காகச் சுற்றும் பிரயாணஞ்செய்து வரவேண்டும்.

டிஸ்டிரிக்ட்போர்ட் நிர்வாக ரிப்போர்ட்டுடன், இந்த தாலூகா போர்டுகளின் வேலையைப்பற்றி ஒரு ரிப்போர்ட்டும் சேர்த்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர்கள்.

**Madras Legislative Council.**

சென்னை சட்ட ஸபை.—சென்னை சட்டஸபையையொட்டிசில சீர் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. முதலாவது அந்த ஸபையில் இப்போது 19 உத்தியோகஸ்தரல்லாத எலக்டெட் மெம்பர்கள் இருக்கிருர்கள். இவர்கள் இனி 21 மெம்பர்களாக்கப் படுவார்கள். ஸபையில் மொத்த மெம்பர்கள் 42 ஆகையால் கவர்ன்மெண்டால் நியமிக்கப்படும் மெம்பர்கள் 23 லிருந்து 21 ஆகக் குறைக்கப்படும். ஆகவே இனி கவுன்ஸிலில் 21 எலக்டெட் மெம்பர்களும் 21 நியமனம் பெற்ற மெம்பர் ளும் இருப்பார்கள். கவுன்ஸிலில் மெஜாரிட்டி உத்தியோகஸ்தர்கள் அல்லாமல் இருக்கவேண்டிய தாகையால் கவர்ன்மெண்டு நியமிக்கும் 21 மெம்பர்களில் சில உத்தியோகஸ்தர்க ளல்லாதவர்களா யிருப்பார்கள். எலக்டெட் மெம்பர்களில் இரண்டு புது மெம்பர்கள் சேர்ந்திருப்பதில் ஒருவர் ஜமீந்தார்களல்லாத மிராசுதார்களின் பிரதிநிதியாக நியமிக்கப்படுவார்.

டிஸ்டிரிக்டு போர்ட்டு, தாலூக்கா போர்ட்டு, முனிஸிபாலிட்டிகளால் தெரிந்தெடுக்கப்பட்டமெம்பர்கள் 8 பேரிலிருந்து 9 பேர் ஆக்கப்பட் ருக்கிருர்கள்.

புது நிபந்தனையின் பிரகாரம் டிஸ்ட்ரிக்டுகளின் சேர்க்கை பின் வருமாறு:—

(1) கஞ்சம்-விசாகப்பட்டணம்.

(2) கோதாவரி-கிருஷ்ணு-குண்டூர்.

(3) நெல்லூர்-கடப்பை-சித்தூர்.

(4) கர்னூல்-பல்லாரி-அனந்தப்பூர்.

(5) செங்கல்பட்டு-வடஆர்க்காடு-தென் ஆர்க்காடு.

(6) சேலம்-கோயம்பத்தூர்-நீலகிரி.

(7) தென்கன்னடம்-மலபார்.

(8) தஞ்சாவூர்-திருச்சினப்பள்ளி.

(9) மதுரை-ராமநாதபுரம்-திருநெல்வேலி

**The Nellore Social Conference.**

நெல்லூர் ஆசாரத்திருத்தக் கான்பரென்ஸ்:—ஸமீபத்தில் நெல்லூரில் நடந்த ஜனசாரத் திருத்தக் கான்ப ரென்ஸில் அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன.

(1) ஒவ்வொரு ஜாதியிலுமுள்ள உட்பிரிவுகளை ஒழிப்பதற்காக உட்பிரிவுகளுக்குள் விவாகமும் பந்திபோஜனமும் அவசியம்.

(2) தாழ்ந்த வகுப்பார்களை உயர்த்த வேண்டியதும் நெல்லூரில் ஏஞதிகளுக்காக ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி நடத்த வேண்டியதும் அவசியம்.

(3) மதுபானத்தைக் கண்டிக்க வேண்டியது அவசியம்.

(4) அன்னிய தேசங்களுக்குப் போய்க் கப்பற் பிரயாணம் செய்தவர்கள் திரும்பி வந்தால் ஜனசாரத்தில் படும் கஷ்டங்களை விலக்க வேண்டியது அவசியம்

(5) எல்லா ஜாதிகளையுஞ் சேர்ந்த திக்கற்ற குழந்தைகளை ஆதரித்து வளர்ப்பதற்காக ஆர்பனேஜ் என்ற அநாதை ஆசிரமத்தை நெல்லூரில் அமைக்க வேண்டியது அவசியம்.

இக்கடைசித் தீர்மானத்தைப் பிரேரித்த மிஸ்டர் குருவரெட்டி நெல்லூரில் பிறந்து வளர்ந்தவர். இப்பொழுது பாபட்லாவில் ஸப். அஸிஸ்டெண்ட் ஸர்ஜியன் உத்தியோகத்திலிருக்கிருர். பேசுவது மாத்திரம் போதாது, பேசுவது போல் நடக்க வேண்டியது அவசியமென்பதைச் சொல்லிதாம் மேற்படி ஆர்பனேஜுக்கு ரூபா 7000 கொடுப்பதாக அறிவித்தார்.

மேற்கண்ட தீர்மானங்களே கான்பரென்ஸில் முதல் நாள் நடந்த நடவடிக்கைகள். இரண்டாம்நாள் அடியிற் கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன.

ப்ரௌடையான பிறகே பெண்களுக்கு விவாகம் செய்ய வேண்டியது அவசியமென்றும், அப்படிச் செய்ய சாஸ்திரம் சம்மதிக்கிறதென்றும், மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீநிவாச ஸாஸ்திரி பிரேரணைசெய்ய மிஸ்டர் டி. வெங்கடாசலம் அதை மறுத்தார். இண்டியன் மெடிகல் ஸர்விஸைச் சேர்ந்தவராகிய காப்டன் கணபதிராய், சரீர அமைப்பையும் வைத்திய முறைகளையும் ஆதாரமாகவைத்துக்கொண்டு பிரேரணைக்கு அனுகூலமாகப் பேசினார். மெஜாரிடியால் பிரேரணை தீர்மானிக்கப்பட்டது.

பெண்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி மிஸஸ் கணபதிராய் ஒரு பிரசங்கத்தை எழுதிப் படித்தார். இந்தியவழிகளைப் பின்பற்றிப் பெண்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டியதே ஒழிய மேல்நாட்டு முறைகளை அனுஷ்டிக்கக் கூடாதென்பதை மிக வற்புறுத்திப் பிரசங்கத்தில் சொன்னார். இந்தப் பிரேரணையும் தீர்மானிக்கப்பட்டது.

ப்ரௌடை ஆவதற்குமுன் விதந்துவாய்ப்போன பெண்களின் புனர்விவாக விஷயமும், விதவைகளைப் பெண் பாடசாலைகளில் உபாத்தினிகளாகவும், ஆஸ்பிட்டல்களில் வியாதிஸ்தர்களுக்குப் பணிவிடை செய்யும் நர்ஸுகளாகவும் நியமிக்கவேண்டுமென்ற விஷயமும், தாஸி ஜாதியைச் சேர்ந்த பெண்களை விவாகம் செய்து கொள்ளும்படி தூண்டிவிட்டு இப்பொழுதுள்ள ஹீனஸ்திதியிலிருந்து அவர்களை உயர்த்த வேண்டியது அவசியம் என்ற விஷயமும் பிரேரிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்பட்டன.

## OPENINGS FOR BUSINESS.
## வியாபாரம் நடக்கக்கூடிய இடங்கள்.

[அடியில்கண்ட வியாபாரங்களில் அக்கரையுள்ளவர்கள் "பிழைக்கும் வழி" யையும் அந்தந்த நம்பரையும் குறிப்பிட்டு வேண்டிய விவரங்களுக்கு கல்கத்தாவில் டைரெக்டர் ஜெனரல் ஆப் கம்மர்ஷியல் இண்டெலிஜென்ஸ் என்னும் அதிகாரிக்கு எழுதவும். தக்க வியாபாரி என்பதற்கு அடையாளமாக தாம் பத்து வரவு செய்யும் பாங்கிக்காரர்களைக் குறிப்பிட்டு எழுதினால் சீக்கிரத்தில் பதில் கிடைக்கும்.

**Sesame Oil.**

நல்லெண்ணெய்.—கல்கத்தாவிலுள்ள ஒரு கம்பெனிக்கு நல்லெண்ணெய் விற்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 90.)

**Sesamum Seed.**

எள்ளு.—டாக்கா நகரத்திலிள்ள ஒரு வியாபாரிக்கு நிறைய எள்ளு விற்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 92.)

**Nut Galls.**

கடுக்காய்.—ஜப்பானிலுள்ள ஒரு வியாபாரிக்கு கடுக்காய் ஏற்றுமதி செய்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 93.)

**Hair and Bristles.**

மயிரும் முரட்டு மயிர்களும்.—ஹாம்பர்க் நகரத்திலுள்ள ஒரு வியாபாரிக்கு குதிரை, பசு, வெள்ளாடு இவைகள் மயிரும் முரட்டு மயிர்களும் ஏற்றுமதி செய்பவர்களுடைய விலாஸம் தோவையாம். (B. 100.)

**Lamps and Ornaments.**

விளக்குகளும் நகைகளும்.—ஹாலண்டில் உள்ள ஒரு கம்பெனிக்கு காஸ் மண்ணெண்ணெ விளக்குகளையும் மின்சார காஸ் விளக்குகளுக்கு ஆபரணங்களையும் விற்க கல்சத்தாவில் ஒரு ஏஜண்டு தேவையாம். (B. 102.)

**Cutlery Polisher.**

இரும்புகத்தி ஸாமான்களை சுத்தஞ் செய்யும் கருவி.—லண்டன் கம்பெனி ஒன்றுக்கு இந்தியாவில் இரும்பு ஸாமான்களையும் வெள்ளி ஸாமான்களையும் சுத்தம் செய்யும் யந்திரத்தை விற்க ஏஜெண்டு வேண்டுமாம். (B. 103.)

**Cigaretes.**

பீடிகள்.—ஹாலண்டிலுள்ள ஒரு ஸிகெரெட்டு கம்பெனிக்கு தங்களது "ரூமேனியன் ரஜீ" என்னும் பீடிகளை விற்க இந்தியாவில் ஏஜெண்டுகள் தேவையாம். (B. 104.)

**Live Birds.**

உயிருள்ள பக்ஷிகள்.—யுனைடட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்காவிலுள்ள ஒரு கம்பெனிக்கு இந்தியாவில் நானாவித வர்ண சிறகை உடைத்தாயுள்ள பக்ஷிகளை உயிரோடு ஏற்றுமதி செய்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 105.)

## MADRAS MARKET REPORTS.

### மதராஸ் மார்க்கெட் நிலைவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தகச் சங்கத்தாரின் செப்டம்பர்மாஸம் 11-ம் ௳ ரிப்போர்ட்டுப்படி

**Produce Market.**—விளைபொருள்கள்

| | ரூ. |
|---|---|
| ஆவாரம்பட்டைபாரம் 1-க்கு ... | 20 முதல் 25½ |
| கொன்னைப்பட்டை ஷை ... | 15 முதல் 16 |
| கடப்பை கடுக்காய் ஷை ... | 9 முதல் 10 |
| சேலம் ஷை ஷை ... | 18 முதல் 19 |
| நல்லெண்ணெய் ஷை ... | 100 முதல் 105 |
| புங்கம் எண்ணெய் ஷை ... | 80 |
| எட்டிக்கொட்டை ஷை ... | 14 முதல் 17 |
| விளக்கெண்ணெய் ஷை ... | 76 |
| கொட்டை முத்து 164 ராத்தல் | 10½-11-0-0 |
| | ரூ. அ. பை. |
| பந்தர் பச்சை அரிசி 44 படி ... | 8 முதல் 9½ |
| நெல்லூர் அரிசி 31 படி ... | 7 12 முதல் 8 |
| வெங்காயம் (கடப்பை)பாரம் ... | 14 முதல் 15 0 0 |
| ஷை (பல்லாரி) ஷை ... | 24 முதல் 25 |
| நீலகிரி உருளைக்கிழங்கு ... | 20 |

**Metals.**—உலோகங்கள்.

| | ரூ. |
|---|---|
| பித்தளைத் தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷ-ம் பாரம் ... | 240 |
| செப்புத் தகடுகள் பாரம் ... | 311 |
| செப்புக்கட்டி ஷை ... | 270 |
| நாகம் ஷை ... | 95 |
| ஷை (உள்ளூர்) ஷை ... | 82 |
| ஈயம் ஷை ... | 75 |
| காரீயம் ஷை ... | 73 |
| வெள்ளீயம் ஷை ... | 212 வராகன் |

**Iron.**—இரும்பு.

| | |
|---|---|
| மருக்கி சட்டம் 2 செ. பாரம் | ரூ. 23 முதல் 26 |
| சீமை ... | 40 முதல் 42 |
| மருக்கி தகடு 6--9, 12—13, | 28 |
| பீப்பாய்க் கட்டு ... | 32—35 |
| 8 பட்டை எஃகு ... | 25—27 |
| எஃகு வில்சட்டு ... | 26—30 |
| திரணைக் கம்பி மருக்கி 2 செ. ... | 27 |
| சீமை ... | 42—49 |

## SEASON.

### காலஸ்திதி.

**Rainfall.**

மழை.—1912௵ எப்ரல்௴ 1௳ யிலிருந்து 1912 ௵ செப்டம்பர்௴ 30௳ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 31·65 | 31·09 |
| வால்டேர் | 25·11 | 24·59 |
| காக்கிணடா | 20·74 | 23·91 |
| மசூலிப்பட்டணம் | 30 66 | 25·29 |
| நெல்லூர் | 16·52 | 13·27 |
| மதராஸ் | 10·75 | 17·99 |
| கூடலூர் | 15·68 | 17·75 |
| நாகப்பட்டணம் | 5·90 | 13·32 |
| பாம்பன் | 4·42 | 5·42 |
| கொழும்பு | 60·20 | 42·18 |
| திருவநந்தபுரம் | 55·12 | 41·60 |
| கொச்சி | 112·83 | 89·67 |
| கள்ளிக்கோட்டை | 123·01 | 100·57 |
| மங்களூர் | 126·46 | 116·91 |
| மெர்க்காரா | 116·81 | 13·85 |
| ஐதராபாத் | 21·55 | 26·04 |
| ரெய்ச்சூர் | 17·46 | 24·09 |
| பல்லாரி | 12·60 | 13·75 |
| கர்நூல் | 16·17 | 21·82 |
| கடப்பை | 15 13 | 21·89 |
| ஹாஸ்ஸான் | 24·68 | 26·19 |
| பெங்களூர் | 34·52 | 25·31 |
| கொடைக்கானல் | 35·78 | 33·30 |
| உதகமண்டலம் | 33·26 | 38·10 |
| கோயம்புத்தூர் | 9·29 | 9·83 |
| வேலூர் | 13·07 | 27·61 |
| சேலம் | 20·90 | 27.98 |
| திருச்சிணப்பள்ளி | 18·81 | 16.65 |
| புதுக்கோட்டை | 14·81 | 19·51 |
| மதுரை | 18·63 | 18·14 |
| திருநெல்வேலி | 5·64 | 7·34 |